




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:224 | 28-02-2026 | சனிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


### இன்றைய பஞ்சாங்கம்

28.02.2026 மாசி 16
சனிக்கிழமை

-------------------

சூரிய உதயம் 6.29

-------------------

திதி:
இன்று இரவு 9.03 வரை
துவாதசி பின்பு திரயோதசி.

-------------------

நட்சத்திரம்:
இன்று காலை 9.51 வரை
புனர்பூசம் பின்பு பூசம்

-------------------

யோகம் :
இன்று மாலை 5.19 வரை
சௌபாக்யம் பின்பு
சோபனம்.

-------------------

கரணம் :
இன்று காலை 9.56 வரை
பவம் பின்பு இரவு 9.03
வரை பாலவம் பின்பு
கௌலவம்.

-------------------

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும் சித்த
யோகம்.

-------------------

சந்திராஷ்டமம் :
இன்று காலை 9.51 வரை
கேட்டை பின்பு மூலம்

-------------------

நல்ல நேரம்
காலை 7.30 – 8.30.
மாலை 4.30 – 5.00.

-------------------

இராகு காலம்
காலை 9.00 – 10.30

-------------------

எமகண்டம்
பிற்பகல் 1.30 – 3.00.

-------------------

குளிகை
காலை 6.00 – 7.30.

-------------------

இன்று கரி நாள்.

-------------------

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# தி.மு.க.வில் இணைந்தார் ஓ.பன்னீர்செல்வம்

## முதலமைச்சர் கட்டித்தழுவி வரவேற்றார்



**சென்னை, பிப்.28:**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் நேற்று தி.மு.க. இணைந்தார் ஓ.பன்னீர்செல்வம். அவரை மு.க.ஸ்டாலின் கட்டித்தழுவி தி.மு.க. துண்டு அணிவித்து வரவேற்றார்.

மேலும்ஓ.பன்னீர்செல்வத்தின் மகனும், அண்ணா தி.மு.க. முன்னாள் எம்.பி.யுமான ரவீந்திரநாத், உசிலம்பட்டி அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ. ஐயப்பன் ஆகியோரும் இன்று தி.மு.க.வில் இணைந்தனர்.

தமிழ்நாட்டின் 3 முறை முதலமைச்சராக இருந்த ஒருவர் வேறு கட்சியில் இணைவது இதுவே முதல்முறையாகும்.

ஓபிஎஸ் (வயது 75) கடந்த 1973 முதல் அண்ணா தி.மு.க.வில் இருந்துள்ளார். ஜெயலலிதாவின் நம்பிக்கைக்கு உரியவரான அவர் முதலமைச்சர், துணை முதல்வர், எதிர்க்கட்சித் துணை தலைவர், அண்ணா தி.மு.க. இணை ஒருங்கிணைப் பாளர், பொருளாளர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜெயலலிதா மறைவுக்கு பின்னர், அண்ணா தி.மு.க. எடப்பாடி பழனிசாமி மற்றும் ஓ.பன்னீர்செல்வம் இடையே ஒற்றைத் தலைமைப் பிரச்சினை ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து அண்ணா தி.மு.க.விலிருந்து ஓ. பன்னீர்செல்வம் நீக்கப்பட்டார். அண்ணா தி.மு.க. தொண்டர்கள் மீட்புக் குழுவைத் தொடங்கி, ஓ.பன்னீர்செல்வம் அண்ணா தி.மு.க.வில் மீண்டும் இணைய தயார் என்று வெளிப்படையாகவே தெரிவித்து வந்தார்.

டிடிவி தினகரனின் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தை (அமமுக) தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைக்க எடப்பாடி பழனிசாமி ஒப்புக் கொண்டாலும், ஓ.பன்னீர்செல்வத்தை மீண்டும் அண்ணா தி.மு.க.வில் இணைக்கும் பேச்சுக்கே இடமில்லை என்று எடப்பாடி பழனிசாமி திட்டவட்டமாக தெரிவித்துவிட்டார். மேலும் ஓ.பன்னீர்செல்வத்தின் ஆதரவாளரான முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் மனோஜ் பாண்டியன், வைத்திலிங்கம் ஆகியோர் தி.மு.க.வுக்கு சென்று விட்டனர். கு.ப.கிருஷ்ணன்,ஜே. சி.டி. பிரபாகர் ஆகியோர் நடிகர் விஜய் தலைமையிலான த.வெ.க.வுக்கு சென்றுவிட்டனர். எம்.பி. தர்மர் எடப்பாடியிடம் சென்றுவிட்டார். பண்ருட்டி ராமச்சந்திரன் புதிய கட்சி துவங்கிவிட்டார்.

இந்தச் சூழ்நிலையில் அடுத்தக்கட்ட முடிவை எடுக்க வேண்டிய நிலைக்கு ஓ.பன்னீர்செல்வம் தள்ளப்பட்டார்.

இந்த நிலையில் சென்னை நட்சத்திர ஓட்டலில் தங்கியிருந்த ஓ.பன்னீர்செல்வத்தை இன்று காலை அமைச்சர் பி.கே. சேகர்பாபு சந்தித்து பேசினார். இதனை தொடர்ந்து, இருவரும் ஒரே காரில் அண்ணா அறிவாலயத்துக்கு புறப்பட்டு சென்றனர்.

**பூங்கொத்து கொடுத்து...**

அங்கு தனது ஆதரவாளர்களுடன் வந்த ஓ. பன்னீர்செல்வத்தைபூங்கொத்து கொடுத்து, தி.மு.க. துண்டு அணிவித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கட்டித்தழுவி வரவேற்றார். தி.மு.க. உறுப்பினர் படிவத்தைப்ஓ.பன்னீர்செல்வம் பூர்த்தி செய்து, முதலமைச்சரிடம் வழங்கி தி.மு.க.வில் இணைந்தார். அவருடன் ஓ.பன்னீர்செல்வம் மகனும் அண்ணா தி.மு.க. முன்னாள் எம்.பி.யுமான ரவீந்திரநாத், உசிலம்பட்டி அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ. ஐயப்பன் ஆகியோரும் தி.மு.க.வில் இணைந்தனர். இந்த நிகழ்வின் போது துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, பி.கே.சேகர்பாபு ஆகியோர் உடன் இருந்தனர்.

**எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தார்**

இந்த நிலையில் தமிழ்நாடு சட்டமன்ற வளாகத்துக்கு சென்ற ஓபிஎஸ் மற்றும் ஐயப்பன் ஆகியோர் பேரவை செயலாளரை நேரில் சந்தித்து தங்களின் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தனர். ஓ.பன்னீர்செல்வம் போடிநாயக்கனூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினராகவும், ஐயப்பன் உசிலம்பட்டி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினராகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது. செல்வாக்கை முற்றிலும் இழந்த ஓ.பன்னீர்செல்வம் இன்று தனி மரமாக தி.மு.க.வில் இணைந்துள்ளார். தி.மு.க.வில் இணைந்த ஓ. பன்னீர்செல்வத்துக்கு துணைப் பொதுச்செயலாளர் பதவி வழங்கப்பட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், வருகின்ற சட்டசபை தொகுதியில் ஓ.பன்னீர்செல்வத்துக்கு போடி தொகுதியும், அவருடன் இணைந்த அவரது ஆதரவாளர்கள் இருவருக்கும் வாய்ப்பளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# விஜய் – சங்கீதா விவாகரத்து வழக்கு: ஏப்ரலில் விசாரணை!



**சென்னை, பிப்.28:**

தமிழ் சினிமாவின் உச்ச நட்சத்திரமும், தவெக தலைவருமான விஜய் இடமிருந்து அவரது மனைவி சங்கீதா விவாகரத்துக் கோரி மனுத்தாக்கல் செய்துள்ள சம்பவம் அவரது ரசிகர்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. கடந்த சில ஆண்டுகளாகவே இருவரும் ஒன்றாக இல்லை என்றும், குடும்பத்தில் பிரச்சனை என்றும் தகவல்கள் வெளியான நிலையில் இன்று அது உறுதியாகி உள்ளது. பிரபல நடிகை உடனான தொடர்பே இந்த விவாகரத்து முடிவுக்கு காரணம் என சங்கீதா குறிப்பிட்டுள்ளார்.

செங்கல்பட்டு குடும்ப நல நீதிமன்றத்தில் அவர் தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ளதாவது;

ஆரம்பத்தில் திருமணவாழ்க்கைசுமூகமாகவும், நன்றாகவும் சென்றது. அவர் வசதியான வாழ்க்கைமுறையை கொடுத்தார். நான் எனது வாழ்க்கையை வீட்டிற்காகவும், குழந்தைகளுக்காவும், அவருடைய நலனுக்காகவும் அர்ப்பணித்தேன்.

குடும்பத்துடன் அடிக்கடி வெளிநாடுகளுக்கு சுற்றுலா சென்றோம். நான் ஆண்டுதோறும் லண்டனில் உள்ள எனது பெற்றோரை சந்தித்துவந்தேன். அவர் என்னை திரைப்படம் தொடர்பான நிகழ்ச்சிகளுக்கும், பொது நிகழ்ச்சிகளுக்கும் அழைத்துச் சென்றார். திருமண வாழ்க்கையில் அடிக்கடி பிரச்சனை வந்தாலும், அதனை சமாளித்து வாழ்க்கையை தொடர்ந்தோம்.

எனக்கு வேறு வழி தெரியவில்லை. எனவேதான் இந்த நீதிமன்றத்தை நாடி விவாகரத்துக் கோருகிறேன். இந்த முழு வழக்கு விசாரணையும் கேமராவில் பதிவுசெய்யப்படவேண்டும். யூடியூப், ஃபேஸ்புக் போன்ற எந்த சமூக ஊடகங்களிலும் இந்த விவகாரம் தொடர்பாக பேசுவதற்கும், அச்சு ஊடகங்களிலும் எங்கள் விவாகரத்து தொடர்பான செய்திகளை வெளியிடவேண்டும் எனவும் கேட்டுகொள்கிறேன்.

மேலும் இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்படும் வரையில் திருமண வீட்டில் வசிக்கும் உரிமையை எனக்கு வழங்கவேண்டும். அவரது வருமானம், சமூக அந்தஸ்துக்கு ஏற்ப நியாயமான மற்றும் நிரந்தர ஜீவனாம்சம் வழங்கவும் உத்தரவிட வேண்டும். வழக்கு விசாரணைக்காக செலவுகளையும் அவரே ஏற்க உத்தரவிடவேண்டும்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் இந்த வழக்கு செங்கல்பட்டு குடும்பநல நீதிமன்றத்தில் ஏப்.20ஆம் தேதி விசாரணைக்கு வருகிறது.

விஜய் மற்றும் சங்கீதா ஆகியோருக்கு 1999-இல் திருமணம் நடந்தது. இவர்களுக்கு ஜேசன் சஞ்சய் மற்றும் திவ்யா சாஷா ஆகிய இரண்டு பிள்ளைகள் உள்ளனர்.

# தமிழக சட்டப்பேரவை தேர்தல் வெளிப்படையாக, நேர்மையாக நடத்தப்படும்: தலைமை தேர்தல் ஆணையர்

**சென்னை, பிப்.28:**




தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் விரைவில் நடக்க உள்ளதை முன்னிட்டு, தேர்தல் ஏற்பாடுகளை ஆய்வு செய்வதற்கான பணிகளை தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தலைமையிலான குழுவினர் சென்னையில் நேற்றும் இன்றும் ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வுப் பணிகள் நிறைவடைந்ததை அடுத்து, ஞானேஷ் குமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஜனநாயகத்தின் தாயாகவும், உலகின் மிகப் பெரிய ஜனநாயகமாகவும் திகழும் நாடு இந்தியா. உலகில், வெளிப்படையான நேர்மையான தேர்தலை நடத்தும் அமைப்பாக இந்திய தேர்தல் ஆணையம் உள்ளது.

விரைவில் தமிழ்நாட்டில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தல் திருவிழா; தமிழ்நாட்டின் பெருவிழா. எனவே, தமிழக வாக்காளர்கள் அனைவரும் இந்த திருவிழாவில் பங்கேற்க வேண்டும் என்று நான் அழைப்பு விடுக்கிறேன்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஜனநாயக நடைமுறையை கொண்டிருந்தது தமிழ்நாடு. இந்திய தேர்தல் ஆணையம் சமீபத்தில் சர்வதேச மாநாடு ஒன்றை நடத்தியது. அதில் 72 நாடுகள் கலந்து கொண்டன. பல்வேறு நாடுகளின் தலைமைத் தேர்தல் ஆணையர்கள், தேர்தல் ஆணையர்கள், உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் அதில் கலந்து கொண்டனர். அப்போது நாங்கள், தமிழகத்தில் 10-ம் நூற்றாண்டில் நடைமுறையில் இருந்த குடவோலை முறை குறித்து உலகுக்கு தெரிவித்தோம். தமிழகத்தில் தொன்மையான ஜனநாயக மதிப்பீடுகள் இருந்ததை எண்ணி, உலக நாடுகள் மிகுந்த மகிழ்ச்சியையும் பெருமையையும் பகிர்ந்து கொண்டன.

கடந்த இரண்டு நாட்களாக நாங்கள் தேர்தல் தயாரிப்பு குறித்து ஆய்வு செய்தோம். மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள், டிஜிபி, தலைமை செயலர் உள்ளிட்டோருடன் இணைந்து நாங்கள் இந்த ஆய்வை மேற்கொண்டோம்.

தமிழகத்தில் 234 சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன. இதில் 188 பொதுத் தொகுதிகள், 44 எஸ்.சி. தொகுதிகள், 2 எஸ்டி தொகுதிகள். தேர்தல் சிறப்பாக நடைபெற வாக்காளர் பட்டியலை தூய்மைப்படுத்துவது மிகவும் முக்கியம்.

இதற்காகவே, தமிழகத்தில் அக். 27, 2025 முதல் பிப். 23, 2026 வரை சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. தகுதியான வாக்காளர்கள் யாரும் விடுபட்டு விடக்கூடாது என்பதையும், தகுதி பெறாதவர்கள் யாரும் இடம்பெற்றுவிடக்கூடாது என்பதையும் கருத்தில் கொண்டு இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு திருத்தப் பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் இந்திய தேர்தல் ஆணையம் நன்றி தெரிவிக்கிறது; நாடு நன்றி தெரிவிக்கிறது.

தற்போது தமிழகத்தில் 5 கோடியே 67 லட்சத்து 7 ஆயிரத்து 380 வாக்காளர்கள் உள்ளனர். இறந்த வாக்காளர்கள், ஒன்றுக்கும் மேற்பட்ட தொகுதிகளில் பெயர்களைக் கொண்ட வாக்காளர்கள் ஆகியோர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்கள்.

சுமார் 75 ஆயிரம் வாக்குச்சாவடிகளுடன் தமிழகம் தேர்தலை எதிர்கொள்ள இருக்கிறது. இதில், 44 ஆயிரம் வாக்குச்சாவடிகள் கிராமப்புறங்களில் இருக்கும். வாக்குப்பதிவு 100% நேரலையாக கண்காணிக்கப்படும். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்படும். வாக்காளர்கள் எளிதாக வாக்களிக்க வசதியாக ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் சராசரியாக 756 வாக்காளர்கள் இடம்பெறும் வகையில் வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த தேர்தலில், பெண்கள் மட்டுமே நிர்வகிக்கும் வாக்குச்சாவடிகள் 258 ஆகவும், மாற்றுத்திறனாளிகள் நிர்வகிக்கும் வாக்குச்சாவடிகள் 47 ஆகவும், அனைத்து வசதிகளும் கொண்ட மாதிரி வாக்குச்சாவடிகள் 265 ஆகவும் இருக்கும்.

தமிழகத்தில் பெண் வாக்காளர்கள்தான் அதிகம். 2.89 கோடி பெண் வாக்காளர்களும், 2.77 கோடி ஆண் வாக்காளர்களும் இருக்கிறார்கள்.

மூன்றாம் பாலின வாக்காளர்கள் 7,617 பேர் இருக்கிறார்கள். 85 வயதைக் கடந்த மூத்த வாக்காளர்கள் 8 லட்சமும், 100 வயதைக் கடந்த வாக்காளர்கள் 2,530 பேரும் இருக்கிறார்கள்.

இவ்வாறு இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தெரிவித்தார்.







# திருக்குறள் குறள்-544

குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு



குடிகளை அன்போடு
அணைத்துக் கொண்டு
செங்கோல் செலுத்துகின்ற
அரசனுடைய
அடியைப்பொருந்தி உலகம்
நிலை பெறும்.

## சிந்திக்க ஒரு நொடி



எந்த வடிவம்
கொடுத்தாலும்
ஏற்றுக் கொள்ளும்
தண்ணீர் போல
இரு
வாழ்க்கை
வசந்தமாகும்

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

## சிறப்பு அலங்காரத்தில் நம் வாசவி அம்மன்



**தர்மபுரி, பிப்.28:** தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மண்டல பூஜை நடைபெறுவதை முன்னிட்டு மாசி மாதம் வெள்ளிக்கிழமை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால், ரூபாய் நோட்டு மாலைகளால் அலங்கரித்து, காசு மாலை களால் அலங்கரித்து, தங்க ஆபரணங்களுடன் அலங்காரங்கள், வேத மந்திரங்கள் ஒலிக்க,பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்துகொண்டு வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## அருள்மிகு அண்ணாமலையார் தை மாத உண்டியல் 4.2 கோடி ரூபாய் காணிக்கை



திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் தை மாத உண்டியல் காணிக்கை 4,02,00,879/ ரூபாய் தங்கம் 135/கிராம், வெள்ளி 1,420 கிலோ வெள்ளியும் வருவாய் வந்துள்ளது என கோவில் நிர்வாகம் அறிவிப்பு. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## தீப பயிற்சியின் பலன்கள்



தீப பயிற்சி என்றால் என்ன? நமது உடலில் குறைந்து வரும் ஜீவகாந்த சக்தியை தீபச் சுடரை கண்களால் பார்த்து அதிகப்படுத்தும் பயிற்சி ஆகும். தீப பயிற்சி செய்முறை:- இரண்டாம் அகத்தாய்வு பயிற்சி எடுத்தவர்கள், மனவளக்கலை பேராசிரியர் சொற்படி தீபத்தின் முன் அமர்ந்து, விண்ணிலிருந்து வரும் வான் காந்த ஆற்றல், நமது உடலில் ஜீவகாந்த ஆற்றலாகப் பெருக்குவது ஆகும். ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை அதிகாலை 5.30 மணி முதல் 6.00 மணி வரை தீப பயிற்சி , மற்றும் சாந்தி தவ பயிற்சி ஆகியன மொடக்குறிச்சி அருகே உள்ள செங்கரைப்பாளையம் மனவளக்கலை மன்ற அறிவுத்திருக்கோவிலில் இலவசமாக அளிக்கப்படுகிறது. மனவளக்கலையில் இரண்டாம் அகத்தாய்வு பயிற்சி எடுத்த அன்பர்கள் மேற்கண்ட பயிற்சிகளில் பயின்று ஜீவ காந்தப் பெருக்கம் பெற்று உடல்நலனில் திணிவு காணலாம். 27.02.2026 வெள்ளிக்கிழமை அன்று காலை5.30 மணிக்கு தீப பயிற்சியில் கலந்து கொண்ட அன்பர்கள்:- பேராசிரியர் பாலமுருகன், ராஜலட்சுமி , வசந்தாமணி, செல்லம்மாள், கிருஷ்ணன் , பாலசுப்பிரமணியன், சுந்தரமூர்த்தி ஆகியோர். வாழ்க வளமுடன் நன்றி! வணக்கம்!

## மாசி பிரம்மோற்சவத்தின் 7ம் நாளான தேரோட்டம்



திருப்போரூர் கந்தசுவாமி கோயிலில் மாசி பிரம்மோற்சவத்தின் 7ம் நாளான நேற்று தேரோட்டம் நடந்தது.

## அரசினர் உயர்நிலைப் பள்ளியில் தேசிய அறிவியல் தின கருத்தரங்கம்..!



**வந்தவாசி, பிப் 28:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த நடுக்குப்பம் அரசினர் உயர்நிலைப்பள்ளியில் தேசிய அறிவியல் தினத்தையொட்டி ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையம் சார்பில் 'இன்றைய சூழலில் அறிவியலின் பங்கு' என்ற தலைப்பில் சிறப்பு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு பள்ளி தலைமை ஆசிரியர் பெ.ஜெய்சங்கர் தலைமை தாங்கினார்.

ஸ்ரீகிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா. சீனிவாசன், உதவி தலைமை ஆசிரியர் வெற்றிவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் கண்ணன் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக, தெள்ளார் ரோட்டரி கிளப் நிர்வாகி டிகேஜி ஆனந்த் பங்கேற்று, சிறப்புரை ஆற்றினார். மேலும் இன்றைய சூழலில் அறிவியலின் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள் மற்றும் எதிர்மறை விளைவுகளை பட்டியலிட்டு பேசினார். மேலும் அறிவியல் தின வினாடி வினா நிகழ்ச்சியில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

நிகழ்வில் கலாம் பவுண்டேஷன் நிர்வாகி சீ.கேசவராஜ், நல்நூலகர் ஜா.தமீம், திரைப்பட இயக்குநர் விஜய் ஆதிநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மேலும் மாணவர்கள் பல்வேறு அறிவியல் செய்முறைகளை செய்து காட்டினர். இறுதியில் பட்டதாரி ஆசிரியர் பார்த்தி பிரபு நன்றி கூறினார்.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களுக்கு பல்கலைக்கழக பேராசிரியர் வாழ்த்து



**திருநெல்வேலி, பிப்.28:** திருநெல்வேலி மாவட்டம் பேட்டை காமராஜர் நகர் மன்ற மேல்நிலைப் பள்ளியில் பனிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களுக்கு தேர்வு எழுதுவது குறித்த சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது,

நிகழ்ச்சிக்கு பள்ளியின் தலைமை ஆசிரியை இவாஞ்சலின் தலைமை தாங்கினார் ,

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உடற்கல்வி இயல் மற்றும் விளையாட்டு துறை பேராசிரியர் முனைவர் திரு ஆறுமுகம் அவர்கள் கலந்து கொண்டு தான் காமராஜர் பள்ளியின் முன்னாள் மாணவர் எனவும் மேலும் பொது தேர்வினை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் அது குறித்த அச்சங்களும் அதற்கான விளக்கங்களும் மேலும் தன்னுடைய வாழ்வில் இந்தப் பள்ளியினால் தான் பெற்ற நன்மைகள் குறித்தும் மாணவர்களுக்கு விரிவாக சிறப்புரையாற்றினார் ,

நிகழ்ச்சியில் ஆசிரியப் பெருமக்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்,

## தமிழ் பெண்கள் மகளிரணியின் பரப்புரை பயிற்சி கூட்ட ஆலோசனை



கன்னியாகுமரி, நாகர்கோவில் மற்றும் குளச்சல் சட்டமன்ற தொகுதிக்கான வெல்லும் தமிழ் பெண்கள் மகளிரணியின் பரப்புரை பயிற்சி கூட்டத்தில் மாவட்ட செயலாளர் மேயர் மகேஷ் ஆலோசனைகள் வழங்கினார்.

## மாற்றுத் திறனாளிகளுக்கான திருமண நிதியுதவி



வேலூரில் மாற்றுத் திறனாளிகளுக்கான திருமண நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் 10 மாற்றுத் திறனாளிகளுக்கு தங்க நாணயங்களை கலெக்டர் சுப்புலட்சுமி வழங்கினார்.

## ஓபிஎஸ் ஆதரவாளர்கள் பாஜகவில் இணைந்தனர்



மதுரையில் ஓபிஎஸ் ஆதரவாளர்கள் நேற்று பாஜக இளைஞரணி தலைவர் சூர்யா முன்னிலையில் பாஜகவில் இணைந்தனர்.

## தெருமுனைப் பிரச்சாரம் நடத்துவது குறித்தும், வாக்காளர் பட்டியல் குறித்தும் ஆய்வு கூட்டம்





**திருவண்ணாமலை, பிப்.28:** திருவண்ணாமலை ஹோட்டல் இமாலயா கூட்ட அரங்கத்தில் போளூர் சட்டமன்ற உறுப்பினர் உயர்திரு அக்ரி.எஸ்.எஸ் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 2026 சட்ட மன்ற பொது தேர்தல் குறித்தும், 2026 திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் குறித்தும், தெருமுனைப் பிரச்சாரங்கள் நடத்துவது குறித்தும் ஹோட்டல் இமாலயா கூட்டரங்கில் கூட்டம் நடைபெற்றது. கழகத் தோழர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணி



சிவகாசி - விருதுநகர் சாலை, அழகாபுரி - விருதுநகர் சாலைகளை ரூ.181 கோடி மதிப்பில் நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணிகளை அமைச்சர்கள் சாத்தூர் ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு துவக்கி வைத்தனர்.

## கே.வி.எஸ். நடுநிலைப் பள்ளியில் அறிவியல் கண்காட்சி



விருதுநகர் கே.வி.எஸ். நடுநிலைப் பள்ளியில் அறிவியல் கண்காட்சி நடந்தது.

## தமிழ்நாட்டில் எஸ்ஐஆர் தேர்தல் பணிகளில் சிறப்பாக செயல்பட்ட பிஎல்ஓக்கள்



தமிழகத்தில் எஸ்ஐஆர் உள்ளிட்ட தேர்தல் பணிகளில் சிறப்பாக செயல்பட்ட பிஎல்ஓக்களை இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பாராட்டி அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டார். தேர்தல் ஆணையர் விவேக் ஜோஷி, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் உடன் உள்ளனர்.

## செய்யாறில் அ.தி.மு.க.,வின் முதற்கட்ட தேர்தல் அறிக்கை குறித்த விளக்க பொதுக்கூட்டம் !



**செய்யாறு, பிப். 28 :** செய்யாறில் 2026 சட்டசபை தேர்தல் தொடர்பாக அ.தி.மு.க., சார்பில் முதற்கட்ட தேர்தல் அறிக்கையின் விளக்க பொதுக்கூட்டம் நடந்தது. நகர செயலாளர் வெங்கடேசன் தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளர்களாக திருவண்ணாமலை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தூசி மோகன், முன்னாள் அமைச்சர் முக்கூர் சுப்பிரமணியன், கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் திரைப்பட இயக்கநர் நடிகர் ரவிமரியா, முன்னாள் மத்திய இணை அமைச்சர் செஞ்சி ராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு முதற்கட்டமாக வெளியிடப்பட்டுள்ள 15 தேர்தல் அறிக்கை குறித்து விளக்கி பேசினர். அ.தி.மு.க., ஆட்சி வந்த உடன் குடும்ப அட்டைதாரர் அனைவருக்கும் பத்தாயிரம் ரூபாய் வழங்கப்படும் என உறுதியளித்தனர். முன்னதாக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 78வது பிறந்த நாளையொட்டி அவரது திருவுருவ படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இக்கூட்டத்தில் அவைத் தலைவர் ஜனார்த்தனன், அனைத்து உலக எம்ஜிஆர் மன்ற இணை செயலாளர் ஜாகிர் உசேன், ஒன்றிய செயலாளர்களான மகேந்திரன், அரங்கநாதன், திருமூலன், வயலூர் ராமநாதன், பச்சையப்பன், வந்தவாசி நகர செயலாளர் பாஷா, மாவட்ட இணை செயலாளர் விமலா மகேந்திரன் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## நாகேந்திரன் பேச்சால் அதிமுக அதிர்ச்சி

**சென்னை, பிப்.28:**

சென்னையில் பாஜக தேர்தல் பணிமனை திறக்கும் நிகழ்ச்சியில் பேசிய நயினார் நாகேந்திரன், வரும் சட்டப்பேரவைத் தேர்தலுக்குப் பின் பாஜக-விலிருந்து 20 முதல் 30 பேர் எம்எல்ஏ-க்களாகவும், சிலர் அமைச்சர்களாகவும் வருவார்கள் என்று கூறினார். அதிமுக தனித்து ஆட்சி அமைக்கும் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி திரும்பத் திரும்பக் கூறி வரும் நிலையில், கூட்டணியிலுள்ள பாஜக-வின் மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரனின் இந்தப் பேச்சு, அதிமுக-வினரை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கிறது. இதனிடையே, பிரதமர் தமிழ்நாட்டிற்கு வருகை தந்த பிறகே தொகுதிப் பங்கீடு குறித்து அதிமுகவுடன் பேச்சுவார்த்தை நடைபெறும் எனவும், கூட்டணி ஆட்சி என்பதில் தாங்கள் பிடிவாதம் காட்டவில்லை எனவும் நயினார் சமாளித்துள்ளார்.

## தனித்தேர்வர் செய்முறைத் தேர்வுகள் தொடங்கின!

**சென்னை, பிப். 28:**

பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கான பொதுத்தேர்வு மார்ச் 11 முதல் ஏப்ரல் 6 வரை நடைபெற உள்ளது. இவர்களுக்கான செய்முறைத் தேர்வு பிப்ரவரி 23 முதல் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதவுள்ள தனித் தேர்வர்களுக்கான அறிவியல் பாட செய்முறைத் தேர்வு வியாழக்கிழமை துவங்கியது. இத்தேர்வு பிப்ரவரி 28 வரை நடைபெறவுள்ளது. தனித் தேர்வர்களுக்கான செய்முறைத் தேர்வு மதிப்பெண் பட்டியல்களை மார்ச் 2-க்குள் சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என அரசுத் தேர்வுகள் இயக்கக இயக்குநர் க.சசிகலா அறிவுறுத்தியுள்ளார்.

## வினாத்தாளில் பிழையிருந்தால் மின்னஞ்சலில் தெரிவிக்கலாம்!

**சென்னை, பிப். 28:**

பத்தாம் வகுப்பு, பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 பொதுத்தேர்வு எழுதும் மாணவர்கள் கேள்வித்தாள் தொடர்பான புகார்களை மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கலாம் என அரசுத் தேர்வுகள் இயக்ககம் அறிவித்துள்ளது. மார்ச் 2 முதல் ஏப்ரல் 6 வரை நடைபெறவுள்ள பொதுத்தேர்வில் வினாத்தாள்களில் குளறுபடிகள் அல்லது பாடத்திட்டத்திற்கு வெளியே கேள்விகள் இடம்பெற்றிருந்தால், பள்ளித் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் DGEQUESTIONPAPER QUERIES@GMAIL.COM என்ற மின்னஞ்சல் முகவரிக்கு புகாரை அனுப்பலாம். புகார் தெரிவிக்கும்போது கேள்வி எண் மற்றும் என்ன தவறு உள்ளது என்பதை தெளிவாக குறிப்பிட வேண்டும். மின்னஞ்சல் புகாரை தேர்வு நடைபெற்ற தினமே அனுப்ப வேண்டும். மின்னஞ்சல் தவிர வேறு வழியில் பெறப்படும் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படாது என அரசுத் தேர்வுகள் இயக்குநர் சசிகலா அறிவுறுத்தியுள்ளார்.

## விவாதங்களில் பங்கேற்க வேண்டாம்: கட்சியினருக்கு விஜய் தடை!

**சென்னை, பிப். 28:**

தமிழக வெற்றிக் கழகத்தின் பொதுச்செயலாளர் என். ஆனந்த் வெளியிட்டு இருக்கும் அறிக்கை ஒன்றில், "தலைமைக் கழகத்தின் முறையான அனுமதியின்றி கட்சி நிர்வாகிகளோ தொண்டர்களோ எவ்விதமான ஊடக விவாதங்களிலும் பங்கேற்கக் கூடாது" என்று தெரிவித்துள்ளார். "தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், நேரடிப் பேட்டிகள் மற்றும் யூடியூப் உட்பட சமூக ஊடகத் தளங்களுக்கு நேர்காணல் வழங்குவதற்கும் தலைமையின் அனுமதி கட்டாயம்" என்றும் தெரிவித்துள்ளார். மேலும், "மாநில அளவிலான ஊட கங்கள் மட்டுமன்றி தேசிய அளவிலான ஊடகங்களிலும் அனுமதியின்றி பங்கேற்பதோ நேர்காணல் அளிப்பதோ கூடாது" என்றும் ஆனந்த் கூறியுள்ளார்.

## சர்வதேச விளையாட்டு வீரர்களுக்கு நிதியுதவி

**சென்னை, பிப். 28:**

தமிழ்நாடு சாம்பி யன்ஸ் அறக்கட்டளை மூலம் சர்வதேச விளை யாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் வீரர் களுக்கு நவீன உபகர ணங்கள் மற்றும் நிதி யுதவி வழங்கப்படுவ தாக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இந்த திட்டத்தின் கீழ் ஜூடோ வீரர்கள் ஆகாஷ்ராஜ் மற்றும் ஈஸ்வர்மூர்த்தி ஆகியோருக்கு தலா ரூ. 45,000 மதிப்பிலான உபகரணம், பாரா கிரிக்கெட் வீரர் சண்முகத்துக்கு ரூ. 1.28 லட்சம் மதிப்பிலான உபகரணம், வாள்வீச்சு வீராங்கனை தர்ஷினி மற்றும் நீச்சல் வீராங்கனை ஹர்ஷா ஆகியோருக்கு தலா ரூ. 1 லட்சம் மதிப்பிலான உபகரணங்கள், மலே சியாவில் நடைபெறும் சிலம்பம் போட்டிக்காக வீரர் ஹரிஹரனுக்கு ரூ.75,000-க்கான காசோ லை என மொத்தம் ரூ. 4.93 லட்சம் மதிப்பி லான உதவிகள் வழங்கப்பட்டன.

## திருவான்மியூர் முதல் உத்தண்டி வரை ரூ.2100 கோடியில் சாலை மேம்பாலம்: முதலமைச்சர் ஸ்டாலின் அடிக்கல்



**சென்னை, பிப்.28:**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இன்று தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையத்தின் சார்பில் கிழக்கு கடற்கரை சாலையில் திருவான்மியூர் முதல் உத்தண்டி வரை 2100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள சாலை மேம்பாலம் (13.30 கி.மீ. நீளம்) அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்த சாலை மேம்பாலம் பொதுதனியார் பங்களிப்பு அடிப்படையில், ஹைப்ரிட் ஆனுட்டி மாடல் (HAM) மூலம் செயல்படுத்தப்படுகிறது. இந்த மேம்பாலம், திருவான்மியூரில் இ.சி.ஆர். Lattice பிரிட்ஜ் சாலை சந்திப்பிற்கு முன்பாக தொடங்கி, உத்தண்டியில் முடிவடையும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இருவழிப் போக்குவரத்துக்காக 17.25 மீட்டர் அகலத்துடன், 5.5 மீட்டர் உயரத்தில், நான்கு வழித்தட சாலை மேம்பாலம் முழு நீளத்தில் அமைக்கப்படவுள்ளது. போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில், திருவான்மியூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், நீலாங்கரை மற்றும் அக்கரை போன்ற இடங்களில் இருந்து மேலேறும் மற்றும் கீழிறங்கும் சாய்வுப் பாதைகள் அமைக்கப்படுகின்றன.

மேலும், அக்கரை, நீலாங்கரை மற்றும் லேட்டைடஸ் பிரிட்ஜ் சாலை போன்ற முக்கிய சந்திப்புகள் மேம்படுத்தப்படுவதுடன், சில பகுதிகளில் தற்போதுள்ள சாலைகள் ஆறுவழிச் சாலைகளாக அகலப்படுத்தப்பட உள்ளன. இத்திட்டத்தின்கீழ், சாலை வரைகுறிகள், சாலை குறியீட்டு பலகைகள், பிரதிபலிக்கும் மற்றும் சூரிய சக்தி ஸ்டட்கள், ஒலி தடுப்பு சுவர்கள், பாதுகாப்பு தடுப்புகள் உள்ளிட்ட நவீன வசதிகள் ஏற்படுத்தப்படுகின்றன.

அத்துடன், தூண்களுக்கிடையிலான பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளும், உயர்த்தப்பட்ட வழித்தடம் முழுவதும் தொடர்ச்சியான எல்.இ.டி. விளக்குகளும் அமைக்கப்பட உள்ளன.

இத்திட்டம், நிறைவேற்றப்படுவதன் மூலம், கிழக்கு கடற்கரை சாலையில் நிலவும் போக்குவரத்து நெரிசல் குறைவதோடு, சென்னை மாநகர மக்களுக்கு பாதுகாப்பான, விரைவான மற்றும் வசதியான பயணம் உறுதி செய்திடவும் வழிவகுக்கும்.

இந்நிகழ்ச்சியில், நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா, துணை மேயர் மு.மகேஷ்குமார், நெடுஞ்சாலைகள் துறை செயலாளர் இரா. செல்வராஜ், நெடுஞ்சாலை ஆணையத்தின் உறுப்பினர்கள் தெ.பாஸ்கர பாண்டியன், ஜே.தேவராஜு, சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா. சந்திரசேகர் நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தாம்பரம் - கடற்கரை இருமார்க்கமாகவும் சிறப்பு பஸ் சேவை: பயணிகள் வரவேற்பு

**சென்னை, பிப்.28:**

சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் நடை மேடை 10,11-ல் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்பு பணிகள் காரணமாக, கடந்த 20-ந்தேதி முதல் ஏப்ரல் 5-ந்தேதி வரையில் 45 நாட்கள் மின்சார ரெயில் சேவைகள் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் கடந்த சில நாட்களாக பயணிகள் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருகின்றனர். எனவே. பயணிகளின் சிரமத்தை போக்கும் வகையில், சிறப்பு பஸ் இயக்க தெற்கு ரெயில்வே முடிவு செய்தது. வருகிற 28-ந்தேதி முதல் சிறப்பு பஸ்கள் இயக்கப்பட இருப்பதாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் பயணிகளின் வசதிக்காக கூட்ட நெரிசல் மிகுந்த நேரத்தில் (பீக் அவர்ஸ்) தாம்பரம் - கடற்கரை, கடற்கரை - தாம்பரம் இடையே நேற்று முதலே 20 சிறப்பு பஸ் சேவைகள் தொடங்கப்பட்டன. இந்த சிறப்பு பஸ்கள் முன்பு 'தெற்கு ரெயில்வே ஒப்பந்த பஸ்' என ஆங்கிலத்தில் அறிவிப்பு ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு உள்ளது.

இந்த சேவையை தடையின்றி செயல்படுத்த அனைத்து முக்கிய வழித்தடங்களிலும் பயணிகளுக்கு வழிகாட்டவும், உதவவும் ரெயில்வே டிக்கெட் பரிசோதகர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர். அவர்கள் பயணிகளுக்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர். இவர்கள் பயணிகளின் கூட்டத்தை நெறிப்படுத்தவும், பஸ்களில்






பயணம் செய்யும் பயணிகளிடம் மின்சார ரெயில்களுக்கான டிக்கெட் மற்றும் மாதாந்திர பாஸ் உள்ளதாக என்பதை சோதனை செய்து வருகின்றனர். 2-வது நாளாக இந்த வசதியை பயணிகள் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த பஸ் சேவை மின்சார ரெயில் டிக்கெட் மற்றும் மாதாந்திர பாஸ் வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே இலவசமாக வழங்கப்படுகிறது. இதன் மூலம் மின்சார ரெயில் பயணிகள் நெரிசல் நேரங்களில் எவ்வித தடையும் இல்லாமல் பயணத்தை மேற்கொள்ள முடியும். தாம்பரம்-கடற் கரை இடையே இருமார்க்கமாகவும் காலை மற்றும் மாலை நேரங்களில் இயக்கப்படும் சிறப்பு பஸ்களை பயணிகள் தேவைக்கு ஏற்ப பயண்படுத்தி கொள்ளுமாறு தெற்கு ரெயில்வே சென்னை கோட்டம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ்களுக்கு தாம்பரம் சானடோரியம், குரோம்பேட்டை, பல்லாவரம், திரிசூலம், கிண்டி, எழிலகம், தலைமை செயலகம், பாரிமுனை ஆகிய நிறுத்தங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு பஸ்கள் இயக்கப்படும் நேரங்கள் விவரம் வருமாறு:-

6.30, 6.37, 6.44, 6.58, 7.05, 7.12, 7.26, 7.33, 7.40, 7.54, 8.01, 8.15, 8.22, 8.29, 8.43 ஆகிய நேரங்கில் இயக்கப்படும் சிறப்பு பஸ் சேவை கள் கிண்டி, அண்ணாசாலை, சேப்பாக்கம், தலைமை செயலகம் வழியாக கடற்கரைக்கு இயக்கப்படும். மேலும், தாம்பரம் ரெயில் நிலையத்தில் இருந்து காலை 6.51, 7.19, 7.47, 8.08, 8.36 ஆகிய நேரங்கில் இயக்கப்படும் சிறப்பு பஸ் சேவைகள் கிண்டி, தியாகராயநகர், எழும்பூர், சென்டிரல், பாரிமுனை வழியாக கடற்கரைக்கு இயக்கப்பட்டு வருகிறது. இதேபோல, சென்னை கடற்கரை ரெயில் நிலையத்தில் இருந்து மாலை 5, 5.07, 5.14, 5.28, 5.35, 5.42, 5.56, 6.03, 6.10, 6.24, 6.31, 6.45, 6.52, 6.59, 7.13 பஸ் சேவைகள் தலைமை செயலகம், சேப்பாக்கம், அண்ணாசாலை, கிண்டி வழியாக வும், சென்னை கடற்கரையில் இருந்து மாலை 5.21, 5.49, 6.17, 6.38, 7.06 ஆகிய நேரங் களில் இயக்கப்படும் பஸ் சேவைகள் பாரிமுனை, சென்டிரல், எழும்பூர், தியாகராய நகர், கிண்டி வழியாக தாம்பரத்துக்கு இயக்கப்பட்டு வருகிறது.

## தேர்தலில் அரசியல் கட்சிகள் கூட்டணி அமைத்து போட்டியிட தடை விதிக்க வேண்டும் - ஐகோர்ட்டில் மனு

**சென்னை, பிப்.28:**

சென்னை ஐகோர்ட்டில், திருவள்ளூரைச் சேர்ந்த எம்.ஜி.ஆர்.விஸ்வநாதன் என்பவர் தாக்கல் செய்த மனுவில், 'நான், எம்.ஜி.ஆர். மக்கள் கட்சியின் தலைவராக உள்ளேன். நாடாளுமன்ற, சட்டமன்ற தேர்தல்களில், பொது அரசியல் எதிரியை வீழ்த்துவதற்காக, சுயநல நோக்கில் அரசியல் கட்சிகள் தேர்தலுக்கு முன்னதாக கூட்டணி அமைப்பது, ஜனநாயகத்துக்கு விரோதமானது.

தேர்தலுக்கு முந்தைய கூட்டணி, மக்கள் நலனை பற்றி அக்கறை கொள்வதில்லை. தேர்தல் வெற்றிக்குப்பின்,



மக்கள் தீர்ப்பை இரண்டாம்பட்சமாக கருதி, கட்சிகள் அணி மாறுவதால், ஆட்சியில் நிலையற்ற தன்மை ஏற்பட்டு விடுகிறது. இதன்காரணமாக ஆட்சி கவிழ்ந்து விடுகிறது. இப்படிதான் 1970-ம் ஆண்டு ஜனதா கட்சி அரசு கவிழ்ந்தது. எனவே, சட்டமன்ற தேர்தலில் அனைத்து அரசியல் கட்சிகளும் தனித்தனியே போட்டியிட உத்தரவிட வேண்டும். தேர்தலுக்கு முன்பாக கூட்டணி அமைப்பதற்கு தடை விதிக்க வேண்டும். தேர்தலுக்கு முன்னதாக கூட்டணி அமைக்கக்கூடாது என்று அரசியல் கட்சிகளை அறிவுறுத்தும்படி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும். அதுபோல தேர்தல் அறிவிப்புக்கு முன்பே அங்கீகரிக்கப்பட்ட பெரிய அரசியல் கட்சிகள் தேர்தல் பிரசாரங்களை தொடங்கி விடுகின்றனர். தற்போது தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, த.வெ.க. தலைவர் விஜய் உள்ளிட்டோர் பிரசாரத்தை தொடங்கி விட்டனர். ஆனால், எங்களைப்போல பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள், வேட்புமனு தாக்கல் செய்து, தேர்தல் சின்னம் ஒதுக்கப்பட்டு, 13 நாட்களே பிரசாரம் செய்ய அவகாசம் வழங்கப்படுகிறது. இதனால் சிறிய கட்சிகள், சுயேட்சை வேட்பாளர்களின் சின்னத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல முடியவில்லை. எனவே, இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியான பின்னரே பிரசாரத்தை தொடங்க வேண்டும் என்று அரசியல் கட்சிகளை அறிவுறுத்தும்படி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்' என்று கூறியுள்ளார். இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

## கல்லீரல் மற்றும் சிறுநீரகத்தை பாதுகாக்கும் 8 பழங்கள்!

பொதுவாக பழங்கள் என்றாலே வைட்டமின்கள் நிறைந்தவை, உடலுக்கு நல்லது என்றுதான் நமக்கு தெரியும். ஆனால், நம் உடலில் ஓயாமல் உழைத்து கொண்டிருக்கும் கல்லீரல் மற்றும் சிறுநீரகத்தை ஒரு சர்வீஸ் சென்டர் போல சுத்தப்படுத்தும் வேலையை சில குறிப்பிட்ட பழங்கள் செய்கின்றன. நம் ஊர் சந்தைகளில் எளிதாகக் கிடைக்கும் ஆப்பிள், எலுமிச்சை, பப்பாளி போன்ற பழங்களே அந்த வேலையை செவ்வனே செய்துவிடும். கல்லீரல் மற்றும் சிறுநீரகம் ஆகிய இரண்டும் உடலின் வடிகட்டிகள் போன்றவை. இவற்றை சுத்தமாக வைத்திருக்க உதவும் பழங்களை பற்றி பார்ப்போம். இந்த பழங்களை அன்றாட உணவில் சேர்த்து கொள்வதன் மூலம், எந்தப் பக்கவிளைவுகளும் இன்றி உடல் கழிவுகளை வெளியேற்றி, புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கும்.

ஃப்ளூபெர்ரி: ஃப்ளூபெர்ரி பழங்கள் பார்ப்பதற்கு சிறியதாக இருந்தாலும், அவற்றில் உள்ள ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள் கல்லீரலுக்கு பெரும் பாதுகாப்பை வழங்குகின்றன. இதில் உள்ள ஆந்தோசயனின் (ANTHOCYANIN) என்ற நிறமி, கல்லீரல் வீக்கத்தை குறைப்பதோடு, அங்கு தேவையற்ற தழும்புகள் உருவாவதை தடுக்கிறது. சிறுநீரகத்தை பொறுத்தவரை, வயது முதிர்வினால் ஏற்படும் சிறுநீரக செயல்பாடு குறைபாட்டை இவை மெதுவாக்குகின்றன என்கிறது 2014ம் ஆண்டு வெளியான NIH ஆய்வு.

பப்பாளி: செரிமானத்திற்கு பப்பாளி நல்லது என்பது நம் அனைவருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால், அதையும் தாண்டி கல்லீரலில் தேங்கியிருக்கும் அம்மோனியா மற்றும் கன உலோகங்களை வெளியேற்ற பப்பாளியில் உள்ள பிளாவனாய்டுகள் உதவுகின்றன.

இதன் விதைகள் கூட கல்லீரல் தூய்மைக்குச் சிறந்த மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றன. பப்பாளியில் நீர்ச்சத்து அதிகம் என்பதால், இது ஒரு இயற்கை சிறுநீர் பெருக்கியாகச் செயல்பட்டு, சிறுநீரகக் கழிவுகளை விரைவாக வெளியேற்றுகிறது.

திராட்சை: சிவப்பு திராட்சையின் தோலில் உள்ள ரெஸ்வரெட்ரோல் (RESVERATROL) எனும் சத்து, கல்லீரல் செல்களில் ஏற்படும் பாதிப்புகளைச் சரிசெய்து, புதிய செல்கள் உருவாகத் தூண்டுகிறது. மேலும், இதில் உள்ள பொட்டாசியம் சத்து, சிறுநீரகத்தில் சோடியம் உப்பின் அளவைக் கட்டுப்படுத்தி, சிறுநீரகக் கற்கள் உருவாகும் வாய்ப்பைக் குறைக்கிறது.

மாதுளை: மாதுளை ரத்த ஓட்டத்தை அதிகரிப்பதோடு, சிறுநீரகத்தில் ஏற்படும் ஆக்சிஜனேற்ற அழுத்தத்தை குறைக்கிறது. டயாலிசிஸ் செய்து கொள்ளும் நோயாளிகளுக்குக்கூட மாதுளைச் சாறு சிறுநீரகப் பாதிப்பைக் குறைக்க உதவுவதாக NIH ஆய்வுகள் கூறுகின்றன. இது கல்லீரலில் கொழுப்பு படிவதை தடுத்து, வீக்கத்தைக் குறைக்கிறது.

அவகேடோ: அவகேடோ பழத்தில் உள்ள குளுதாதயோன் (GLUTATHIONE) எனும் பொருள் கல்லீரலில் உள்ள நச்சுகளை நடுநிலையாக்க உதவுகிறது. இது கல்லீரலைத் தூய்மைப்படுத்தும் என்சைம்களின் உற்பத்தியை அதிகரிக்கிறது. இதிலுள்ள பொட்டாசியம், ரத்த அழுத்தத்தைச் சீராக வைத்து, சிறுநீரகத்திற்கு அதிக அழுத்தம் ஏற்படாமல் பாதுகாக்கிறது.

எலுமிச்சை: காலையில் வெறும் வயிற்றில் எலுமிச்சை நீர் குடிக்கும் பழக்கம் பலருக்கு உண்டு. எலுமிச்சையில் உள்ள சிட்ரிக் அமிலம் கல்லீரலில் பித்தநீர் சுரப்பைத் தூண்டுகிறது. இது நாம் உண்ணும் கொழுப்பு மற்றும் நச்சுகளை எளிதில் செரிக்க வைக்கிறது. மேலும், சிறுநீரில் சிட்ரேட் அளவை அதிகரிப்பதன் மூலம் சிறுநீரகக் கற்கள் உருவாவதை இது ஆரம்பத்திலேயே தடுக்கிறது.

தர்பூசணி: தர்பூசணியில் உள்ள சிட்ருலின் என்ற அமினோ அமிலம், கல்லீரல் அம்மோனியாவை வடிகட்ட உதவுகிறது. கோடைக் காலங்களில் தர்பூசணி உண்பது சிறுநீரகத்திற்கு எந்தச் சிரமமும் கொடுக்காமல், சிறுநீர் போக்கை அதிகப்படுத்தி உடலில் உள்ள வெப்பத்தையும் கழிவுகளையும் வெளியேற்றுகிறது.

ஆப்பிள்: "தினமும் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் மருத்துவரிடம் போக தேவையில்லை" என்பது வெறும் பழமொழி மட்டும் இல்லை. ஆப்பிளில் உள்ள பெக்டின் எனும் நார்ச்சத்து, செரிமானப் பாதையில் உள்ள நச்சுகள் மற்றும் உலோகங்களைத் தன்னுடன் பிணைத்துக் கொண்டு வெளியேற்றுகிறது. இதனால் கல்லீரலின் வேலைப்பளு குறைகிறது.

## சின்னசேலம் பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்த நடவடிக்கை: எ.வ.வேலு

**கள்ளக்குறிச்சி, பிப்.28:**

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்ன சேலத்தில் ரூ. 2 கோடியில் விரிவு படுத்தப்பட்ட பேருந்து நிலையத்தை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார். கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்ன சேலத்தில் ரூ. 1 கோடியே 98 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்ட, விரிவுபடுத்தப்பட்ட பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையத்தின் திறப்பு விழா மற்றும் அம்சா குளம் பேருந்து நிறுத்தத்தில் இருந்து ரயில்வே கேட் வரை தடுப்புச் சுவருடன் கூடிய நான்கு வழிச்சாலை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா பேருந்து நிலைய வளாகத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் எம். எஸ். பிரசாந்த் தலைமை தாங்கினார். சட்டமன்ற உறுப்பினர்கள் உதய சூரியன், வசந்தம் கார்த்திகேயன் ஆகி யோர் முன்னிலை வகித்தனர். சின்னசேலம் பேரூராட்சி மன்றத் தலைவர் லாவண்யா ஜெய்கணேஷ் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராகப் பொதுப் பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ. வேலு கலந்து கொண்டு ரூ. 1 கோடியே 98 லட்சம் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் விரிவாக்கம் செய்யப்பட்ட சின்னசேலம் புதிய பேருந்து நிலையத்தைப் பொதுமக்கள் பயன்பாட்டுக்காகத் திறந்து வைத்தார். முன்னதாக ரூ. 30 கோடி திட்ட மதிப்பீட்டில் சின்னசேலம் நகரில் சுமார் 5 கிலோ மீட்டர் தூரம் வரை தடுப்புச் சுவருடன் கூடிய நான்கு வழிச் சாலை மற்றும் சாலையின் இருபுறமும் கழிவு நீர் கால்வாய் அமைக்கும் பணிக்கான அடிக்கல்லை நாட்டி அமைச்சர் எ.வ. வேலு பேசுகையில், சின்னசேலம் நகர மக்களின் கோரிக்கையை ஏற்று சின்னசேலம் பேரூராட்சியை நகராட்சியாகத்தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

## மேல்நிலைப் பள்ளித் தேர்வு மாணவிகளுக்கு வாழ்த்து

**சிதம்பரம், பிப். 28:**

சிதம்பரம் அரசு நந்தனார் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் அரசுத் தேர்வு மற்றும் பள்ளித் தேர்வு எழுத 469 மாணவிகள் உள்ளனர். இவர்களைக் காட்டுமன்னார்கோவில் ராஜீவ் காந்தி தேசிய மேல்நிலைப் பள்ளியின் தாளாளர் கமல் மணிரத்தினம் மற்றும் அவரது மனைவி அரசு மகப்பேறு மருத்துவர் பிரசன்னா பிரியா ஆகியோர் பள்ளிக்குச் சென்று, தேர்வு எழுத உள்ள மாணவிகளுக்குக் குடிநீர் பாட்டில், பேனா மற்றும் இனிப்புகளை வழங்கி வாழ்த்துக் கூறினர். அப்போது அவர்கள் மாணவிகள் மத்தியில் பேசுகையில், “வாழ்க்கையில் முன்னேறக் கல்வி ஒன்றே மிகப்பெரிய ஆயுதம். இதனை அனைவரும் கருத்தில் கொண்டு வருகின்ற அரசு மற்றும் பள்ளித் தேர்வுகளை நல்ல முறையில் எழுதி அதிக மதிப்பெண்கள் பெற்று வாழ்க்கையில் உயர்ந்த இடத்திற்குச் செல்ல வேண்டும்” என வாழ்த்தினர். இந்நிகழ்ச்சியில் பள்ளியின் தலைமை ஆசிரியை எழிலரசி, நந்தனார் கல்விக் கழக நிர்வாகிகள் திருவாசகம், பாலையா உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

# உலக நன்மைக்காக ஜப்பானியர்கள் நடத்திய சிறப்பு யாகம்



**பழநி, பிப்.28:**

பழநியில் உள்ள புலிப்பாணி ஆசிரமத்தில் ஜப்பான் நாட்டைச் சேர்ந்தவர்கள் உலக நன்மை வேண்டி இன்று புதன்கிழமை (பிப்.25) காலை சிறப்பு யாகம் நடத்தி வழிபட்டனர்.

திண்டுக்கல் மாவட்டம் பழநி மலையடிவாரத்தில் போகர் சித்தரின் சீடரான புலிப்பாணி சித்தரின் ஜீவசமாதி மற்றும் ஆசிரமம் உள்ளது. இங்கு இன்று (புதன்கிழமை- பிப்.25) காலை உலக நன்மை வேண்டி, ஶ்ரீலஶ்ரீ சிவானந்த புலிப்பாணி பாத்திர சுவாமிகள் தலைமையில், ஜப்பானிய ஆன்மிக ஆசான் கோபால் பிள்ளை சுப்பிரமணியன் முன்னிலையில் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஜப்பானிய சிவா ஆதீனம் பாலகும்ப குரு முனி மற்றும் அவர்களது சீடர்கள் 50-க்கும் மேற்பட்டோர் சிறப்பு யாகம் நடந்தி வழிபட்டனர்.

இதில், ஜப்பான் நாட்டை சேர்ந்தவர்கள் மனமுருகி வேண்டினர். தொடர்ந்து, அவர்கள் பழநி மலைக்கோயிலுக்கு சென்று ‘வெற்றிவேல், வீரவேல், முருகனுக்கு அரோகரா’ என, பக்தி கோஷமிட்டபடி தண்டாயுதபாணி சுவாமியை தரிசனம் செய்தனர். தொடர்ந்து ஆனந்த விநாயகர், கைலாசநாதர், போகர் சித்தர் சமாதி உட்பட அனைத்து சந்திதிகளுக்கும் சென்று வழிபட்டனர்.

# திருநள்ளாறில் மார்ச் 1 முதல் 4 நாட்கள் ஜோதிடர் மாநாடு: தருமபுரம் ஆதீனகர்த்தர் தகவல்



**காரைக்கால், பிப்.28:**

திருநள்ளாறில் ஜோதிடர்கள் மாநாடு மார்ச் 1-ம் தேதி தொடங்க உள்ளதாக தருமபுரம் ஆதீன கர்த்தர் தெரிவித்துள்ளார். காரைக்கால் மாவட்டம் திருநள்ளாறில் உள்ள புகழ்பெற்ற தர்பாரண்யேஸ்வரர் கோயிலில் மார்ச் 6-ம் தேதி சனிப்பெயர்ச்சி விழா நடைபெற உள்ளது.

இதற்கான பூர்வாங்க பூஜைகள் நேற்று முன்தினம் தொடங்கி, பிப்.28-ம் தேதி வரை நடைபெறுகிறது. இவற்றில் பங்கேற்பதற்காகவும், பூஜை ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காகவும் தருமபுரம் ஆதீனம் 27-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் திருநள்ளாறில் உள்ள ஆதீன கிளை மடத்தில் தங்கியுள்ளார்.

இந்நிலையில் செய்தியாளர்களிடம் நேற்று அவர் கூறியதாவது: பிப்.20-ம் தேதி முதல் 10 நாட்கள் 6 கிரகங்கள் ஒரே கட்டத்தில் (ராசியில்) கூடியிருக்கின்றன. இதனால், பாதிப்புகள் ஏற்படாமல் இருக்க, சப்த நதிகளில் இருந்து தீர்த்தங்கள் கொண்டுவரப்பட்டு பூஜிக்கப்பட்டு, அது திருநள்ளாறு நளன் தீர்த்தத்தில் சேர்ப்பிக்கப்பட்டது. மேலும், ஓதுவார்களைக் கொண்டு 2 நாட்கள் தொடர்ச்சியாக நவக்கிரகங்களுக்கு கோளறு பதிகம் பாராயணம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மார்ச் 6-ம் தேதி காலை 8.24 மணிக்கு சனிப் பெயர்ச்சி நடைபெறுகிறது.

இதையொட்டி, நளன் தீர்த்தத்தில் புனித நீராடுவோர் ஆடைகளை கழற்றி போட்டுவிட்டுச் செல்கின்றனர். இது பாவச் செயல். நளன் தீர்த்தத்தில் புனித நீராடல் மட்டுமே செய்ய வேண்டும். இங்கு கொடுக்கப்படும் பிரசாதத்தை வீட்டுக்கு எடுத்துச் செல்வதுதான் சிறப்பு. கிரக நிலைகள் குறித்து ஆய்வு செய்வதற்காக மார்ச் 1 முதல் 4 நாட்கள் மாநாடு நடைபெற உள்ளது. மாநாட்டில் பிரபல ஜோதிடர்கள் பங்கேற்கின்றனர். ஆன்மிகம், இறைவழிபாடு, சமயத்தை மக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பதில் ஜோதிடர்களின் பங்கு, அரசு மூலமாக செய்யும் உதவிகள் போன்ற அம்சங்கள் மாநாட்டில் இடம்பெறும். தருமபுரத்தில் ஆதீனத்தின் சார்பில் இலவச மருத்துவமனை கட்டப்படுகிறது. மேலும் கல்விப் பணி உள்ளிட்ட பல்வேறு சமூக தொண்டுகள் செய்யப்பட்டு வருகின்றன. தமிழக அரசு இதற்கு ஒத்துழைப்பு அளித்து வருகிறது. அதே போல், புதுவை அரசும் ஒத்துழைப்பு அளித்தால், இங்கும் பல்வேறு சமூகப் பணிகளைச் செய்ய முடியும்.

திருநள்ளாறில் உள்ள ஆதீன மடத்தில் சனிக்கிழமைதோறும் அன்னதானம் அளிக்கப்படுகிறது. இதை அனைத்து நாட்களிலும் அளிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. தருமபுரத்தில் 3 வேளையும் மாற்றுத் திறனாளிகளுக்கு இலவசமாகவும், மற்றவர்களுக்கு தலா ரூ.10-க்கும் மலிவு விலையில் உணவு வழங்கப்படுகிறது. அத்திட்டத்தை இங்கும் செயல்படுத்த திட்டமிடப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ஆற்காடு அடுத்த ரத்தினகிரியில் கிருத்திகை விழா



**ஆற்காடு, பிப்.28:**

ஆற்காடு அடுத்த ரத்தினகிரி பாலமுருகன் கோயிலில் மாசி மாத கிருத்திகை விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதையொட்டி பரம்பரை அறங்காவலர் பாலமுருகனடிமை சுவாமிகள் முன்னிலையில் விநாயகர், மற்றும் மூலவர் வள்ளி,தெய்வானை பாலமுருகனுக்கு பால், தயிர், தேன்,சந்தனம், இளநீர், விபூதி, பழங்கள் , வாசனை திரவியங்கள் கொண்டு சிறப்பு அபிஷேகம், வண்ண மலர்களுடன் வெள்ளிக் கவச அலங்காரம், தீபாராதனை நடைபெற்றது. தங்கத் தேரில் உற்சவர் அலங்காரத்துடன் வலம் வந்தார். பொதுமக்கள் நீண்ட வரிசையில் நின்று சாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து மாலையில் அலங்கரிக்கப்பட்ட உற்சவ மூர்த்திகள் மேளதாளங்களுடன் மலையில் இருந்து ஊர்வலமாக சென்று அறுங்கோண தெப்ப குளத்தில் சிறப்பு வழிபாடும், பொதுமக்கள் மங்கள ஆரத்தி காண்பித்தும் வணங்கினர்.

தலைமை குருக்கள் பிரசாத் மற்றும் உபயதாரர்கள், திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

## மார்த்தாண்டத்தில் செம்மண் கடத்தல்: வாகனங்கள் பறிமுதல்



**குழித்துறை, பிப்.28:**

மார்த்தாண்டத்தில் செம்மண் லோடுடன் டெம்போ, ஹிட்டாச்சி பறிமுதல் செய்யப் பட்டது. குமரி மாவட்டம், மார்த்தாண்டம் கல்லுத் தொட்டி பகுதியில் நள்ளிரவில் செம்மண் கடத்தப்படுவதாக மார்த்தாண்டம் காவல் துறையினருக்கு தகவல் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து காவல் சார்பு ஆய்வாளர் வைகுண்டதாஸ் தலைமையில் போலீசார் சோதனையிட்டனர். அப்பொழுது அந்த வழியாக வந்த டெம்போவை நிறுத்த சைகை காண்பித்த போது வண்டியை நிறுத்தி விட்டு ஓட்டுநர் தப்பி ஓடினார். வாகனத்தை சோதனை யிட்ட போது செம்மண் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.இதனைத்தொடர்ந்து டெம்போ, ஹிட்டாச்சி பறிமுதல் செய்யப் பட்டது போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## இரத்தக்காயங்களுடன் வாலிபர் சடலம் மீட்பு போலீசார் விசாரணை

**நாகர்கோவில்,பிப்.28:**

திருநெல்வேலி மாவட்டம் கீழபிள்ளையார்குளம் பகுதியை சேர்ந்தவர் செல்லபாண்டி(33).கிட்டாச்சி ஓட்டுநரான இவர் நேற்று மலையன்விளை பகுதியை சேர்ந்த கண்ணன் என்பவருக்கு சொந்தமான கிட்டாச்சியை ஓட்டுவதற்காக வந்துள்ளார். கிட்டாச்சி உரிமையாளர் கண்ணன், குமரி மாவட்டம், கொட்டாரத்தில் இருந்து பெரியவிளை செல்லும் சாலையில் பெட்ரோல் பங்கிற்கு அருகில் உள்ள இடத்தில் தனக்கு சொந்தமான வாகங்களை நிறுத்துவது வழக்கம். அதன் அருகில் உள்ள கட்டிடத்தில் வேலைக்காக வந்த செல்லப்பாண்டியை தங்க வைத்ததாக கூறப்படுகிறது.இந்நிலையில் வியாழக்கிழமையன்று காலையில் கட்டி டத்தின் முன்பு இரத்தக் காயங்களுடன் செல்லப்பாண்டி இறந்துகிடந்தார். அந்த வழியாக சென்றவர்கள் கன்னியா குமரி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். போலீஸ் ஏடிஎஸ்பி மதியழகன், மற்றும் டிஎஸ்பி ஜெயச்சந்திரன் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து உடலை கைப்பற்றி ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இறந்து கிடந்த செல்லப்பாண்டியின் கன்னத்தில் கம்பிகள் குத்தப்பட்டிருந்தன. இச்சம்பவம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# முடி கொட்டுவதை தடுக்க ஊட்டச்சத்து மாத்திரைகளை உட்கொள்வது சரியா? மறைந்திருக்கும் ஆபத்துகள்!

இன்றைய உலகில், உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்த குறுக்கு வழிகளைத் தேடுவது பலருக்கும் பழக்கமாகிவிட்டது. குறிப்பாக, சமூக வலைதளங்களில் உலவும் ‘வெல்னஸ் இன்ஃப்ளூயன்சர்கள்’ (WELLNESS INFLUENCERS) மற்றும் விளம்பரங்களின் தாக்கத்தால், சாதாரண வைட்டமின் மாத்திரைகள் முதல் மூலிகை காப்ஸ்யூல்கள் வரை அனைத்தையும் மக்கள் தாங்களாகவே வாங்கி உட்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

‘இயற்கையானது என்பதால் ஆபத்து இருக்காது’ அல்லது ‘கூடுதல் சத்துக்கள் உடலுக்கு நன்மையே செய்யும்’ என்ற தவறான புரிதல் மக்களிடையே ஆழமாகப் பதிந்துள்ளது. ஆனால், மருத்துவத் துறையைச் சேர்ந்த நிபுணர்கள் இதற்கு கடும் எச்சரிக்கை விடுக்கின்றனர்.

தேவையில்லாமல் அல்லது அளவுக்கு அதிகமாகச் சத்து மாத்திரைகளை எடுப்பது, உடலில் உள்ள முக்கிய உறுப்புகளைச் சிதைப்பதோடு, உடலில் வளர்ந்து வரும் தீவிரமான நோய்களைக் கண்டறிய முடியாமல் மறைத்துவிடும் அபாயத்தையும் கொண்டுள்ளது.

தன்னார்வ ஊட்டச்சத்து பயன்பாடு: ஷர்தா மருத்துவமனையின் மூத்த ஆலோசகர் டாக்டர் ஸ்ரே ஸ்ரீவஸ்தவா இது குறித்துக் கூறுகையில், “முன்பெல்லாம் சத்து மாத்திரைகள் எப்போதாவதுதான் பயன்படுத்தப்பட்டன. ஆனால் இன்று நகர்ப்புறங்களில் இது ஒரு தினசரி பழக்கமாக மாறிவிட்டது,” என்கிறார்.

குறிப்பாக வைட்டமின் டி (VITAMIN D), வைட்டமின் பி12 (B12), இரும்புச்சத்து (IRON), கால்சியம் (CALCIUM), மெக்னீசியம் மற்றும் பல



மூலிகை மருந்துகள் மருத்துவப் பரிசோதனைகள் ஏதுமின்றி உட்கொள்ளப்படுகின்றன. “அதிக அளவில் சத்துக்களை எடுத்தால் அதிக ஆரோக்கியம் கிடைக்கும்” என்ற தவறான எண்ணமே இதற்கு முக்கியக் காரணம்.

இயற்கையானது என்றால் அது பாதுகாப்பானதா? இது குறித்து டாக்டர் சன்னி ஜெயின் கூறுகையில், “ஆன்லைன் ஆலோசனைகளை நம்பி, பலவிதமான மாத்திரைகளை ஒன்றாகக் கலந்து உட்கொள்ளும் ‘காக்டெய்ல்’ (COCKTAIL) பாணி கலாச்சாரம் பெருகியுள்ளது. ‘இயற்கை’ என்று பெயரிடப்பட்ட அனைத்தும் பாதுகாப்பானவை அல்ல. உடலுக்கு ஊட்டச்சத்துக்கள் மிகத் துல்லியமான அளவில் மட்டுமே தேவை. அந்த அளவைத் தாண்டும்போது அது நன்மையை விட தீமையையே அதிகம் செய்கிறது,” என எச்சரிக்கிறார்.

மறைந்திருக்கும் உடல்நல அபாயங்கள்: ஊட்டச்சத்து மாத்திரைகளை அளவுக்கு அதிகமாக எடுக்கும்போது ஏற்படும் பாதிப்புகள் உடனடியாகத் தெரியாது. சிதைவு முழுமையடைந்த பிறகே பலருக்கும் இது குறித்துத் தெரியவருகிறது. அதன் முக்கிய அபாயங்கள் பின்வருமாறு:

உறுப்புகள் பாதிப்பு: தொடர்ச்சியான சத்து மாத்திரை பயன்பாடு கல்லீரல் மற்றும் சிறுநீரகங்களுக்குத் தேவையற்ற அழுத்தத்தை அளித்து, அவற்றைச் செயலிழக்கச் செய்யலாம்.

நரம்பு மண்டல பாதிப்பு: குறிப்பாக வைட்டமின் பி6 (VITAMIN B6) அளவுக்கு அதிகமானால் நரம்புகள் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது.

ரத்த நாளங்களில் படிவுகள்: அதிகப்படியான கால்சியம் சத்து மாத்திரைகள், இரத்த நாளங்கள் மற்றும் உறுப்புகளில் கால்சியம் படிவங்களை உருவாக்கி இதயப் பிரச்சனைகளுக்கு வழிவகுக்கும்.

புற்றுநோய் சிகிச்சை சிக்கல்கள்: புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களில் 40 முதல் 70 சதவீதத்தினர் ஊட்டச்சத்து மாத்திரைகளைப் பயன்படுத்துகின்றனர். இதில் பாதிப் பேர் தங்கள் மருத்துவரிடம் இதைப் பற்றிச் சொல்வதே இல்லை. “சாதாரண செல்களைப் பாதுகாக்கும் சில சத்துக்கள், புற்றுநோய் செல்களையும் பாதுகாத்துச் சிகிச்சையைத் தோல்வியடையச் செய்யலாம்,” என்கிறார் டாக்டர் ஜெயின்.

அறிகுறிகளை மறைத்தல்: சத்து மாத்திரைகள் தற்காலிகமாகப் புத்துணர்ச்சியைத் தருவதால், உடலில் மறைந்துள்ள உண்மையான நோயின் அறிகுறிகளை இவை மறைத்துவிடும். இதனால் சரியான நேரத்தில் நோய் கண்டறியப்படுவது தாமதமாகிறது.

தேவையற்ற பயன்பாடா? அயர்ச்சி, முடி கொட்டுதல் அல்லது உடல்வலி ஏற்பட்டவுடன் பலரும் தாங்களாகவே சத்து மாத்திரைகளை எடுக்கின்றனர். ஆனால், இந்த அறிகுறிகள் ஊட்டச்சத்து குறைபாட்டினால் மட்டுமே ஏற்படுவதில்லை. “முறையான ரத்தப் பரிசோதனை மற்றும் மருத்துவரின் மதிப்பீட்டிற்குப் பிறகே சத்து மாத்திரைகள் பரிந்துரைக்கப்பட வேண்டும். ஒரு ஊட்டச்சத்து அதிகமாகும்போது, அது மற்றொரு ஊட்டச்சத்தை உடல் உறிஞ்சுவதைத் தடுத்து, புதிய சத்துக் குறைபாடுகளை உருவாக்கிவிடும்,” என்று டாக்டர் ஸ்ரீவஸ்தவா விளக்குகிறார். மருத்துவர்களின் ஆலோசனை, மருந்தாளுநர்களின் விழிப்புணர்வு மற்றும் மருந்து அட்டைகளில் உள்ள சரியான வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவது அவசியம்.

## முள்வாங்கி

எனக்குக் கருத்து தெரிஞ்சு குப்புசாமி தாத்தா தன் பக்கத்துல எப்பவும் ஒரு பெட்டி வச்சிருப்பாரு. அந்தப் பெட்டிய அடப்பப் பெட்டின்னுதான் சொல்லுவாங்க. அடப்பப்பெட்டிக்குள் இருந்ததில என்ன அதிகம் கவர்ந்தது முள்வாங்கிதான். முள்வாங்கியால பல வேலையச் செய்வார் தாத்தா. ஆனா, நான் பார்த்து அசந்துபோன ஒரே ஒரு காட்சி, இன்னைக்கும் என் மனசுக்குள்ள அப்படியே தேங்கி நிக்குது. ஒருவேளை நான் அந்தக் காட்சியப் பாக்காம இருந்தா, இன்னிக்கு புகழ் பெற்ற மருத்துவர வந்திருக்கவே முடியாது. ரொம்ப கூரா அதே நேரத்தில பளபளன்னு இருக்கும். அதை எடுத்துக் கைக்கால் விரல்ல அதிகமாக வளர்ந்திருக்கிற நகத்த வெட்டுவார். அது ஒரு பெரிய விஷயமா எனக்குத் தெரியல. முள்ளு குத்தின கால் பாதத்துல முள்வாங்கியால ஒரு தொழவு தொழவி, முள்ள வெளியே எடுப்பாருப் பாருங்க அதபாத்து நான் அசந்துபோயிருக்கன். சீழ் பிடிச்ச கட்டியில முள்வாங்கியால மெல்ல சீண்டுவாரு, ஒட்டு மொத்த உயிரும் துடிக்கிறா மாதிரி இருக்கும். அடுத்த சில நிமிடத்துல மனசு பாரம் கொறஞ்சி, சகஜ நிலைக்கு வரும்போது, உயிர் போய் உயிர் வந்தா மாதிரி அவங்க உணர்வாங்க பாருங்க, அப்பதான் எனக்கு உயிர் வரும். குப்புசாமி தாத்தா அன்னைக்குச் செய்த மிகப்பெரிய மருத்துவ சிகிச்சைய, நான் இன்னைக்கு செய்துகிட்டிருக்கேன். ஆனா முப்பது வருடங்களுக்கு முன்னாடி என் கண்ணு முன்னாடி பெரிய சீழ் பிடித்த கட்டிய, சின்னக் கூர்மையான முள்வாங்கியால அறுவை சிகிச்சை செய்து, செலவே இல்லாம சரிசெய்து அனுப்புன குப்புசாமி தாத்தாவோடு என்ன ஒப்பிட்டா, நான ஒன்னும் அவ்வளவு பெரிய ஆளில்லன்னுதான் சொல்லுவன். உண்மையிலேயே இப்ப இருக்கிற மருத்துவரவிட, குப்புசாமி தாத்தா மிகச் சிறந்த மருத்துவர். குப்புசாமி தாத்தாவோட வீடு தோட்டத்துக்குள்ள இருந்தது. பெரிய சந்த கடந்துதான் போகணும். பூவரசம் மரத்துக்குக் கீழதான் சம்மனம் போட்டு உக்காந்திருப்பாரு. வழுக்கைத் தல, கருத்த நெரம், கம்பீரமான ஒடம்புதான் குப்புசாமி தாத்தாவோட அடையாளம். அவர எல்லாரும் அப்பவே டாக்டர்ன்னுதான் கூப்பிடுவாங்க. அந்தச் சவர பெட்டிக்குள்ள கத்தி, கத்திரிக்கோல், முள்வாங்கி மட்டும் இல்ல, காயம் பட்டா காயத்துல தேச்சிவிடுர சிகப்பா ஒரு மருந்து வைச்சிருப்பாரு. அதுக்கு டீஞ்சர்ன்னு சொல்வாங்க. அது மட்டும் காயத்துல பட்டுதுன்னு வச்சுக்கோங்க உயிர்போற மாதிரி ஒரு வலி. அதைப் பார்த்தாலே எனக்குப் பயம் வந்துரும். உடம்புல எப்படிப்பட்ட காயம் ஏற்பட்டாலும், அவர் போடுற ஒரே மருந்து டிஞ்சர்தான். அனைத்தும் சரி ஆயிடும். அந்த அளவுக்கு அவரு அறுவை சிகிச்சையில ரொம்ப விவரமா இருந்தாரு. காலையில தொடங்கி சாய்ந்தரம் வர, பூவரச மரத்துக் கீழதான் உக்காந்து இருப்பாரு. முடி வெட்ட வரவங்க, முகசவரம் செய்ய வரவஙக, காயத்துக்கு மருந்து போடுறவங்க, இப்படி பல வகையான மனிதர்கள அவர் தினமும் சந்திப்பாரு. சாதாரண மக்கள் கழனி காடுன்னு அலைஞ்சு திரியும்போது, காட்டு முள்ளிலிருந்து கருவேலமுள்ளு வர, அவங்க கால்களைப் பதம் பார்க்கும். உழைக்கிற மக்களுடைய கால்களை அதிகம் பதம் பாக்குற முள்ள எடுக்கிற அழகான ஆயுதம்தான் முள்வாங்கி. முள் வாங்கி பாக்க சின்னதா இருக்கும். சாணப்புடிச்சி கூரா வச்சிருப்பாங்க. இதுல இன்னொரு முக்கியமான விஷயம் என்னன்னா, அந்த முள்வாங்கிய எப்படி கையாள்வதுன்னு ஒரு சிலருக்கு மட்டும்தான் தெரியும். எல்லாரும் அதைக் கையாள முடியாது. கால சூழலுக்கு ஏத்த மாதிரி, அறிவியல் கண்டுபிடிப்பு வளர்ச்சியினாலும், குப்புசாமி தாத்தாவோட அந்தச் சவரப்பெட்டிக்கு வேலை இல்லாமல் போய்விட்டது. அடப்பப் பெட்டிய திறந்து பார்த்தேன். முள்வாங்கி இன்னும் அதே கலை நயத்தோட, கூர்மையா பளபளன்னு அன்னைக்கு இருந்தாமாதிரி அப்படியே இருந்தது.





- கயப்பக்கம் இரா.இரமேஷ்

## யார் அந்த நிழல்?



ரவி எங்கு சென்றாலும் அவன் பின்னால் ஒரு நிழல்.
ஆரம்பத்தில் அதை அவன் பெரிதாய்க் கண்டு கொள்ளவில்லை.
மாலையில் நடக்கும் போது சுவரில் இரண்டு நிழல்கள் தெரிந்தன.
"ஒருவேளை வெளிச்சம் ரெண்டாக இருக்குமோ..." என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டு நடந்தான்.

மறுநாள், தெருவில் ஒரேயொரு லைட் எரிந்து கொண்டிருந்தது.
ஆனா தரையில் இரண்டு நிழல்கள்.
ரவி நின்றான்.
ஒரு நிழல் உடனே நின்றது. மற்றொன்று ஒரு நொடி தாமதமாக நின்றது.
அவன் இதயம் நின்று துடித்தது.
அடுத்த சில நாட்கள் அவன் விளக்குகளை மாற்றி மாற்றிப் பார்த்தான். இடங்களை... நேரத்தை எல்லாம் மாற்றி மாற்றிப் பார்த்தான்.

ஆனா அந்த இரண்டாவது நிழல் ரவியை விட்டுப் போகவேயில்லை.
ஒரு இரவு அவன் திடீரென திரும்பி கத்தினான். "ஏய்.... யார் நீ?!"
தரையில்... அந்த நிழல் மட்டும் அவனை விட சற்றே முன்பாக அசைந்தது.
அவனுக்கு மூச்சு அடைந்தது.
அன்று இரவு பழைய டைரியைத் திறந்தான்.
அதில் ஒரு புகைப்படம். இரண்டு நண்பர்கள் சிரித்த முகத்துடன்.
ஐந்து வருடங்களுக்கு முன் ரவி கார் ஓட்ட, அவன் நண்பன் துரை அருகில் அமர்ந்திருந்தான்.
திடீரென்று மொபைலை இசைக்க, ரவி எடுக்க, ஒரு விநாடிதான்.
"படீர்..." என்ற சப்தத்துடன் விபத்து.
அந்த விபத்தில் துரை உயிரிழந்தான்.
அதிர்ஷ்டவசமாய் ரவி தப்பித்தான். ஆனால், அந்த நாள் முதல் ரவி தனியாக இல்லை நிழலுடன் இருக்கிறான்

எழுந்து தெருவில் இறங்கியவன், ஒரு விளக்கினடியில் நின்றான்.
தரையில் இரண்டு நிழல்கள்.
ஒன்று அவனுடையது.
மற்றொன்று, அவனை விட சற்றே சாய்ந்த தோளுடன்.
ரவி கண்டுபிடித்தான்.
சட்டென்று கண்களை மூடிக் கொண்டு சொன்னான் , "மன்னிச்சிடு... துரை"

அவன் மன்னிப்பு கேட்ட நொடியில் இரண்டாவது நிழல் மெல்ல மெல்ல அவனுடன் ஒன்றாயிற்று.
"நிச்சயமாய் அது பேய் இல்லை... அது... அது... என்னோட குற்ற உணர்ச்சி"
வாய் விட்டுச் சொல்லியவாறே நடந்தான் ரவி.



-முகில் தினகரன்
கோயம்புத்தூர்.

# ஔவைக் குறளும் 10



■Banumathi Nachiyar

இவையெல்லாம் கூடி உடம்பாய வொன்றி
நவையெல்லா மானது விந்து

விளக்கம்

இவையெல்லாம் கூடி உடம்பான ஒரு வஸ்துவின் குற்றங்கள் யாவும் உண்டானது விந்து சுக்லத்தால் ஆகும் என்று "பிறப்பின் நிலைமை" என்ற முதல் அதிகாரத்தில் பத்தாவது குறளாக முடிக்கின்றார் ஔவையார்.

மேலேகுறிப்பிட்ட ஒன்பது குறளின் மூலம் பஞ்சபூதங்கள், பஞ்சதன் மாத்திரைகள், நான்கு புருஷாத்தங்கள், பஞ்ச மூர்த்திகள், ஆறு சக்திகள், ஏழு தாதுக்கள், எட்டு மூர்த்தங்கள் ஆகிய இவையெல்லாம் கூடி விந்துவின் காரணத்தால் தேகம் உண்டானது என்று கருத்தைக் கூறுகிறார்.

ஔவையின் ஞானக்குறள் என்ற நூலில் 310 குறட்பாக்கள் உள்ளது.திருக்குறள் போலவே ஒவ்வொரு அதிகாரமும் 10 குறட்களைக் கொண்டதாக 31 அதிகாரங்கள் உள்ளன. முதலில் வீட்டு நெறிப்பால் என்று உள்ளது. திருக்குறளைப் போலவே முப்பாலைக் கொண்டதா என்று தெரியவில்லை.

இன்றுடன் முதல் அதிகாரமாகிய பிறப்பின் நிலைமை இந்தப் பத்தாவது குறளுடன் நிறைவு பெறுகிறது.



அதிகாரம் 2
உடம்பின் பயன்

1. உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லா
முடம்பினி லுத்தமனைக் காண்

விளக்கம்

உடம்பினைப் பெற்ற பயன் என்னவென்றால், அதாவது அதனால் ஆன பயனை உடம்பில் உள்ள உத்தமனைத் தரிசிப்பதே ஆகும்.

ஜீவாத்மாக்களில் பரமாத்மா வியாபித்து இருப்பதால் இந்த உடம்பினால் உண்டான பயனாக, அவனைத் தரிசிப்பதே எனச் சொல்கிறார் ஔவையார்.

ஜீவாத்மா என்பது தனிப்பட்ட உயிர்களின் ஆன்மாவாகவும் பரமாத்மா பிரபஞ்சத்தின் ஆன்மாவாகவும் குறிப்பால் உணர்த்துகிறார்.

ஜீவாத்மா மாயையால் சூழப்பட்டு வேறுபடுகிறது. இந்த மாயையை நீக்கி, பரமாத்மாவுடன் தன்னை இணைத்துக் கொள்வதே, இந்த உடம்பின் பயனாக, உயிர்கள் கொள்ள வேண்டிய இலக்காகும் என்பது கருத்து.

(தொடரும்).



# கொல்லங்குடி வெட்டுடையகாளியம்மன் கோயில்

தமிழ்நாட்டின் கொல்லங்குடியில் உள்ள இந்து கோவில் வெட்டுடையகாளியம்மன் கோயில் இது சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள 18ம் நூற்றாண்டில் உருவான கோயில் ஆகும். இங்குள்ள

**மூலவர்:**
வெட்டுடையா காளி.

**அமைவிடம்**
கொல்லங்குடி இது சிவகங்கை மாவட்டத்தில் மதுரை - தொண்டி நெடுஞ்சாலையில் காளையார்கோயில் அருகே உள்ளது.

**நம்பிக்கை**
யாரேனும் தவறு செய்துவிட்டால், அவர்களைத் தண்டிக்க "நாணயம் தவறியோர்க்கு நாணயம் வெட்டிப்போடு" என்று சொல்லும் வழக்கமும், அநியாயம் செய்யும் குற்றவாளிகளை அம்பிகை தண்டிப்பாள் என்ற நம்பிக்கையும் இங்கு உள்ளது. நம்பிக்கை துரோகம், பாதிப்பிற்கு உள்ளானோர் தங்களுக்கு நீதி கிடைக்க இங்கு அம்பாள் சன்னதியில் காசு வெட்டி வழிபடும் வழக்கம் அரசு அனுமதியுடன் நடைபெறுகிறது.

**வரலாறு**
முற்காலத்தில் இவ்வூரில் வசித்த ஒரு பக்தரின் கனவில் தோன்றிய ஐயனார், தனது சிலை வடிவம் ஈச்ச மரக்காடான இங்கு இருப்பதாக உணர்த்தினார். அதன்படி, பக்தர் இங்கு வந்து குறிப்பிட்ட இடத்தில் தோண்டினார். கோடரி வெட்டுப்பட்டு, சிலை கிடைக்கப்பெற்றது. இதன் காரணமாக இவருக்கு வெட்டுடையார் ஐயனார் என்றே பெயர் ஏற்பட்டது. இவரை கருப்பவேளார், காரிவேளார் என்ற பக்தர்கள் பூஜித்து வந்தனர். ஒருசமயம் நள்ளிரவில் ஐயனார் சன்னதிக்கு அருகில் ஒரு ஈச்சமரத்தடியில் பேரொளி மின்னியதைக் கண்டனர். மறுநாள் காலையில் அங்கு அம்பிகையின் யந்திரம் இருந்தது. அவ்விடத்தில் அம்பிகைக்கு சிலை வடித்து பிரதிஷ்டை செய்தனர். சுவாமியின் பெயரால் அவளுக்கு "வெட்டுடையார் காளி' என்றே பெயர் ஏற்பட்டது. காலப்போக்கில் இவள் பிரசித்தி பெறவே, இவளது பெயரிலேயே தலம் அழைக்கப்பெற்றது.



**வெட்டுடையார் காளியம்மன் கோவில் வரலாறு**
சிவகங்கை மாவட்டம் கொல்லங்குடி அரியாகுறிச்சியில் அமைந்துள்ள வெட்டுடையார் காளியம்மன் கோயில், ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட ராணி வேலுநாச்சியாருக்காக உயிர் நீத்த 'உடையாள்' என்ற பெண்ணுக்கு எழுப்பப்பட்ட தியாகத்தின் சின்னமாகும். வெட்டுப்பட்ட உடையாள், காளியம்மனாக வழிபடப்படுகிறாள். இங்கு காசு வெட்டிப் போட்டு வேண்டுதல் வைத்தால் நீதியும், நியாயமும் கிடைக்கும் என்பது பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும். கோவில் வரலாற்றின் முக்கிய

**அம்சங்கள்:**

**தியாக வரலாறு:**
ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில், வேலுநாச்சியாரின் இருப்பிடத்தைக் காட்ட மறுத்து, அவர்களால் வெட்டுப்பட்ட 'உடையாள்' என்ற சிறுமியின் தியாகத்தை நினைவுகூரும் வகையில், வேலுநாச்சியாரால் இக்கோயில் கட்டப்பட்டது.

**பெயர்க்காரணம்:**
வாளால் வெட்டுப்பட்டு உயிர் நீத்ததால், அந்தப் பெண் 'வெட்டுடையாள்' என அழைக்கப்பட்டு, பின்னாளில் வெட்டுடையார் காளியம்மனாக வழிபடப்பட்டாள்.

**நீதிபதி அம்மன்:**
இக்கோயில் அம்மன், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கும் 'நீதிபதி'யாகவே கருதப்படுகிறார்.

**காசு வெட்டுதல்:**
நம்பிக்கை துரோகம், கொள்ளை, அவமரியாதை போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்கள், தங்களுக்கு நீதி கிடைக்க அம்மன் சன்னதியில் காசு (நாணயம்) வெட்டிப்போட்டு, குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைக்க வேண்டுகின்றனர்.

**கோவில் சிறப்பு:**
கொல்லங்குடி காளித்தீர்த்தம் என்ற புனித குளம் உள்ளது. மூலவர் 8 கரங்களுடன், மேற்கு நோக்கிய நிலையில், அசுரனை வதம் செய்தபடி கம்பீரமாகக் காட்சி தருகிறார்.
திருவிழா: பங்குனி திருவிழா மற்றும் ஆடிப்பெருக்கு இங்கு மிகவும் விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது. வேலுநாச்சியார் தான் கட்டிய அந்த வீரக்கல்லுக்கு தனது திருமாங்கல்யத்தையே முதல் காணிக்கையாக அளித்து வணங்கிய தலம் இது.

**M. ராதாகிருஷ்ணன்,**
அஞ்சல் துறை (ஓய்வு)
வாணியம்பாடி -635751

# தினம் ஒரு தலைவர்கள் — ஆனந்த குமாரசுவாமி வரலாறு

ஆனந்த கெந்திஷ் முத்து குமாரசுவாமி 22 ஆகத்து 1877 9 செப்டம்பர் 1947), இலங்கை மீமெய்யியலாளரும் வரலாற்றாளரும் இந்தியக் கலையின் மெய்யியலாளரும் ஆவார். சிறந்த ஓவியர், சிற்பி, கட்டடக்கலைஞர், கலைத் திறனாய்வாளர், ஆய்வாளர், நூலாசிரியர் எனப் பன்முக ஆளுமை கொண்டவர். இவர் இந்தியப் பண்பாட்டைக் குறிப்பாக "பழங்கால இந்தியக் கலையை மேற்கத்திய நாடுகளுக்கு அறிமுகப்படுத்துவதற்குப் பெரிதும் காரணமானவர்" என அவர் விவரிக்கப்படுகிறார்.


வாழ்க்கைக் குறிப்பு
ஆனந்த குமாரசுவாமி, இலங்கையில் கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் பொன்னம்பலம்-குமாரசுவாமி குடும்பத்தைச் சேர்ந்த இலங்கைத் தமிழ் சட்டமன்ற உறுப்பினரும் மெய்யியலாளருமான சர் முத்து குமாரசுவாமிக்கும் அவரது ஆங்கிலேய மனைவியான எலிசபெத் பீபிக்கும் மகனாக 1877 ஆகத்து 22 இல் பிறந்தார். தாயார் இங்கிலாந்தின் கெண்ட் என்னும் நகரைச் சேர்ந்தவர். ஆனந்தாவுக்கு அகவை இரண்டாக இருந்தபோது அவரது தந்தை இறந்துவிட்டார்,

ஆனந்தா தனது குழந்தைப் பருவத்தையும் கல்வியின் பெரும்பகுதியையும் வெளிநாட்டில் கழித்தார். ஆனந்த குமாரசுவாமி தாயாருடன் 1979 ஏப்ரலில் இங்கிலாந்து சென்றார். அங்கு குளொசுடர்சயரில் வைக்கிளிஃப் கல்லூரியில் கல்வி பயின்றார். 1900 ஆம் ஆண்டில் இலண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியில் பயின்று நிலவியல், தாவரவியலில் பட்டம் பெற்றார். 1902 சூன் 19 இல், குமாரசுவாமி ஒரு ஆங்கிலேயப் புகைப்படக் கலைஞரான எத்தெல் மேரி பார்ட்ரிட்ச் என்பவரை மணந்து, அவருடன் இலங்கை வந்தார். அவர்களது திருமணம் 1913 வரை நீடித்தது. ஆனந்த குமாரசுவாமி இடாய்ச்சு, பிரெஞ்சு, பாரசீகம், சிங்களம், சமக்கிருதம், பாளி, இந்தி, தமிழ் ஆகிய மொழிகளிலும் சிறந்த புலமையுடையவராக விளங்கினார். 1902 இற்கும் 1906 இற்கும் இடையில் இலங்கையின் கனிமவியல் ஆய்வுக்காக குமாரசுவாமியின் செய்த களப்பணி, அவருக்கு அறிவியலில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுத் தந்தது, இது இலங்கையின் நிலவியல் ஆய்வுத் துறையை உருவாக்கத் தூண்டியது. இலங்கையில் இருந்தபோது, ஆனந்த குமாரசுவாமியும் எத்தெலும் இடைக்கால சிங்களக் கலையில் கூட்டாக ஆய்வை மேற்கொண்டனர். குமாரசுவாமி உரை எழுத, எத்தேல் புகைப்படங்களை வழங்கினார்.
இலங்கையில் அவரது பணி குமாரசுவாமியின் மேற்கத்தியவாத எதிர்ப்பு உணர்வுகளை தூண்டியது. இவர்களின் மணமுறிவுக்குப் பிறகு, எத்தேல் இங்கிலாந்துக்குத் திரும்பி, அங்கு ஒரு பிரபலமான நெசவாளர் ஆனார், பின்னர் எழுத்தாளர் பிலிப் மைரெட் என்பவரை மணந்தார்.

பின்னர் ஆனந்த குமாரசுவாமி அவர்கள் ரத்னா தேவி எனும் இலங்கைப் பெண்ணை மணம் புரிந்தார். இவருக்கு நாரதா, ரோஹினி என இரு பிள்ளைகள் பிறந்தனர். இவர்களில் நாரதா பின்னர் ஒரு விமான விபத்தில் உயிரிழந்தார். இந்தத் துக்கம் தாளாது ரத்னா தேவியும் சிறிது காலத்தில் காலமானார்.

இலங்கையில் சேவை
அந்தக் காலத்தில் விடுதலை (சுதேசிய) உணர்வால் உந்தப்பெற்று சமூக சீர்திருத்தச் சங்கத்தை (1905) நிறுவினார். அதன் சார்பில் என்னும் இதழைத் தொடங்கி அதன் ஆசிரியராகச் சேவையாற்றினார். 1906 ஆம் ஆண்டு சூன் நாலாம் நாள் முதன் முதலாக யாழ்ப்பாணம் சென்றார். அங்கு உரையாற்றும்போது "நமது கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றின் சிறப்பினை உலகில் வேறெங்கும் காணமுடியாது....எம்மவர் விஞ்ஞானக் கல்வியையும் கைத்தொழிற்கல்வியையும் நாடுகின்றனர். இவை அவசியமானவையே! ஆனால் இவை எல்லாம் பண்பாடு என்னும் அடிப்படையிலிருந்து வரவேண்டும்..." எனக் குறிப்பிட்டார். யாழ்ப்பாணத்தில் அவருக்கு வித்தியா விநோதன் என்னும் பட்டம் அளிக்கப்பட்டது.

கலைச் சேவை
1907 ஆம் ஆண்டிலிருந்து இங்கிலாந்திலும் இந்தியாவிலும் கலை முயற்சிகளில் ஈடுபட்டார். 1911 ஆம் ஆண்டில் அலகாபாத்தில் நடைபெற்ற பொருட்காட்சியின் கலைப்பகுதிக்குப் பொறுப்பு வகித்தார்.



இந்திய விடுதலை இயக்க ஆதரவாளராக, அதன் தலைவர்களோடு தொடர்பு கொண்டிருந்தார். ரவீந்திரநாத் தாகூர், சகோதரி நிவேதிதை முதலியோரின் நண்பராக வாழ்ந்தார்.

இந்தியக்கலைகளின் இறைமையை உலகிற்கு எடுத்துக் காட்டியசிறந்த தூதுவராகக் கருதப்படுபவர். இறைவனின் ஐந்தொழிலைப் (பஞ்சகிருத்தியத்தைப்) பிரதிபலிக்கும் சிவநடனத்தை விளக்கி 1912-இல் 'சித்தாந்த தீபிகை'யில் எழுதிய ஆங்கிலக் கட்டுரை மூலம் இந்தியக் கலைகளின் சிறப்பினை உலகிற்கு அறிமுகப்படுத்திய முன்னோடியாகக் கொள்ளப்படுகிறார். ஏராளமான கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

சகோதரி நிவேதிதையுடன் இணைந்து பௌத்த புராணக்கதைகளையும் தொகுத்துத் தந்துள்ளார். 'பிரபுத்த பாரதா' என்ற இதழில் 1913, 1914, 1915 ஆம் ஆண்டுகளில் தாயுமானவர் பாடல்களின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் சிலவற்றை எழுதினார்.

பொஸ்டனில் சேவை
1917 முதல் ஐக்கிய அமெரிக்காவில் பொஸ்டன் (பாஸ்ட்டன்) நகரில் அமைந்திருந்த நுண்கலை அருங்காட்சியகத்தில் கீழைத்தேயப் பிரிவின் பணிப்பாளராகவும், பின்பு ஆய்வாளராகவும் பணிபுரிந்தார். இங்கு அவர் டோனா லூசா (DONA LUSA) என்னும் ஆர்ஜெண்டீனா பெண்மணியைச் சந்தித்து அவரைத் திருமணம் புரிந்து கொண்டார். இவர்களுக்கு ராமா என்னும் பெயர் கொண்ட ஆண்குழந்தை பிறந்தது.

ராமா பின்னர் இந்தியாவின் ஹரித்வாரில் உள்ள குருகுல (GURUKUL) பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி கற்று அமெரிக்காவின் அல்பேர்ட் ஐன்ஸ்டீன் வைத்தியசாலையில் வைத்தியராகப் பயிற்சி பெற்று அமெரிக்காவில் வைத்தியராகத் தொழிலாற்றியவர்.

ஆனந்த குமாரசுவாமி அவர்கள் தமது எழுபதாவது வயதில் செப்டம்பர் 9 1947 இல் அமெரிக்காவில் பொஸ்டன் (பாஸ்ட்டன்) நகரில் காலமானார்.

# தாய் கிழவி

## திரைவிமர்சனம்

பவனுதாயி என்கிற பெயரில் தாய் கிழவியாக ஊரில் வலம் வருபவர் ராதிகா. அங்குள்ளவர்களுக்கு வட்டிக்கு விட்டு மிரட்டி வட்டி வசூலில் ஈடுபட்டு வருகிறார். ஒரு கட்டத்தில் கிழவி எப்போது இறக்கும் என ஊரே காத்திருக்கிறது. ராதிகாவிற்கு அருள்தாஸ், பால சரவணன், சிங்கம்புலி என 3 மகன்கள், ஒரு மகளும் இருக்கிறார்கள். ஒற்றை பெண்மணியாக பிள்ளைகளை வளர்த்து வந்த ராதிகாவிற்கு திடீரென உடல்நலம் மோசமாகிறது. இன்னும் சில நாட்களில் ராதிகா இறந்து விடுவார் என்று ஊரே வந்து பார்த்துவிட்டு செல்கிறது. அப்போது, ராதிகா 160 சவரன் சேர்த்து வைத்துள்ளதாக மகன்களுக்கு தெரியவருகிறது. பாசத்தால் இல்லாவிட்டாலும், நகை சொத்துக்காகவாவது தாய் ராதிகாவை காப்பாற்ற வேண்டும் என மெனக்கிடுகிறார்கள்.

இறுதியில் தாய் கிழவி உயிர் பிழைத்தாரா? அந்த 160 சவரன் நகை என்னவாயிற்று? என்பது படத்தின் மீதிக்கதை.

நடிகர்கள் ராதிகா படத்தில் தாய் கிழவியாகவே வாழ்ந்திருக்கிறார். ஊரில் கடன் வாங்கியவர்களிடம் வட்டியை மிரட்டி வசூல் செய்யும் காட்சிகளிலும், அவருக்கான கதாப்பாத்திர காட்சிகளிலும் மிரள வைத்திருக்கிறார்.

ராதிகா மட்டுமில்லை பால சரவணன், அருள் தாஸ், சிங்கம்புலி இவர்களுடைய மகள்கள் என படத்தில் வரும் ஒவ்வொரு கதாப்பாத்திரமும் அசர வைத்துள்ளனர். கமல் ரசிகராக வரும் சிங்கம்புலி, அவர் போடும் பாடல்கள், இடைவேளை, கிளைமேக்ஸ் எல்லாம் சரவெடி.

இயக்கம் தாய் கிழவி மூலம் பெண்ணியம், சம உரிமை என்று நமக்கு மிரட்டலான பாடம் எடுத்துள்ளார் அறிமுக இயக்குனர் சிவக்குமார் முருகேசன் கதைக்கரு முதல் கதாப்பாத்திரங்கள், தொழில்நுட்ப கலைஞர்கள் வரை சரியான தேர்வு. படத்திற்கு கூடுதல் பலம்.

பெண்கள் சும்மா இல்லாமல் எதாவது வேலை செய்ய வேண்டும்.. அது தான் உண்மையான சுதந்திரன் போன்ற வசனங்கள் அதிரவைத்துள்ளது. படம் முழுவதும் நகைச்சுவை, எமோஷ்னல் என அறிமுக படத்திலேயே சிக்ஸர் அடித்துள்ளார் இயக்குனர்.

மொத்தத்தில், குடும்பங்கள் கொண்டாடும் படம் இந்த தாய் கிழவி.

ஒளிப்பதிவு ஒளிப்பதிவாளர் விவேக் விஜயகுமார் அப்படியே அந்த ஊர் மக்கள், இடம் , கலாச்சரம் என அனைத்தையும் கண்முன் கொண்டு வந்துள்ளார்.

இசை நிவாஸ் கே பிரச்சன்னாவின் இசை படத்திற்கு கச்சிதம்.

ரேட்டிங்-4/5



சின்னத்திரையில் வெற்றிகரமாக ஓடிய சீரியல்களில் ஒன்று பாரதி கண்ணம்மா. இந்த சீரியலில் வில்லி கதாபாத்திரத்தில் நடித்து வந்தவர் நடிகை ஃபரினா. தொகுப்பாளினியாக பிரபலமான இவருக்கு பாரதி கண்ணம்மா சீரியல் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை ஏற்படுத்தி கொடுத்தது. இந்த சீரியலின் முடிவுக்கு பின் இவர் நினைத்தாலே இனிக்கும் சீரியலில் வில்லியாக நடித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், சீரியல் நடிகை ஃபரினா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தனது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை பதிவு செய்துள்ளார்.

# உறுதியான வில்லன்... இப்போ ஹீரோ யாரு?



தமிழ் சினிமாவின் உச்ச நட்சத்திரங்களான நடிகர்கள் ரஜினிகாந்த், கமல்ஹாசன் சுமார் 47 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இணைந்து நடிக்கவுள்ளனர். தற்காலிகமாக 'KH x RK Reunion' என்று பெயரிடப்பட்டுள்ள இப்படத்தை நெல்சன் இயக்குகிறார். படத்திற்கு அனிரூத் ரவிச்சந்தர் இசையமைக்கிறார். இன்பநிதி ஸ்டாலினுக்கு சொந்தமான ரெட் ஜெய்ண்ட் மூவிஸ் நிறுவனம் படத்தைத் தயாரிக்கிறது. ராஜீவ் மேனன் ஒளிப்பதிவு செய்கிறார்.

படத்தின் புரோமோ வீடியோ எல்லாம் வெளியாகி வைரலானது. ஆனால் ரசிகர்கள் பலருக்கும் இருக்கும் கேள்வி படத்தில் யார் ஹீரோ, யார் வில்லன்? என்பதுதான். புரோமோவில் கூட கமலும் இந்தக் கேள்வியை கேட்டிருப்பார். இந்நிலையில் இருவருமே வில்லன் இல்லை எனவும், மலையாள சூப்பர்ஸ்டார் மம்மூட்டிதான் இப்படத்தின் வில்லன் எனவும் தற்போது தகவல் வெளியாகிவருகிறது. ஆனால் அதிகாரப்பூர்வ தகவல் இன்னும் வெளியாகவில்லை.


ரஜினி தற்போது நடித்து வரும் 'ஜெயிலர் 2' மற்றும் சிபி சக்ரவர்த்தி இயக்கும் படங்களை முடித்த பிறகு, இப்படத்தின் படப்பிடிப்பு தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திரைப்படம் 2027-ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகைக்கு வெளியாகும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ராமர்- சீதையை போல நடந்த திருமணம்

விஜய் தேவரகொண்டா, ராஷ்மிகா காதல் திருமணம் உதய்ப்பூரில் நேற்று நடந்தது. காலையில் தெலுங்கு முறைப்படியும், மாலையில் கொடவா முறைப்படியும் நடந்த திருமண விழாவில் நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் மட்டுமே பங்கேற்றனர். திருமண புகைப்படங்களை நேற்று மாலை விஜய் தேவரகொண்டாவும், ராஷ்மிகாவும் வெளியிட்டனர். புகைப்படம் வெளியாகி சமூக வலைதளங்களில் மிகப்பெரிய அளவில் டிரெண்டிங் ஆனது. திருமண விழாவில் விஜய் தேவரகொண்டா-ராஷ்மிகா ஆடைகள் பெரிதும் பேசப்பட்டு வருகின்றன. இருவரது தோற்றமும் ராமர்-சீதாவை நினைவுப்படுத்துகிறது. விஜய் தேவரகொண்டா-ராஷ்மிகா ஆடைகளை பிரபல ஆடை வடிவமைப்பாளர் அனாமிகா வடிவமைத்திருந்தார். சிவப்பு நிற பார்டருடன் கோவில் மைய கருக்கள் சேலையின் விளிம்பில் எம்பிராய்டரி செய்யப்பட்டுள்ளது.

இது ஐதராபாத்தில் உள்ள பாரம்பரிய கோவில்களின் ஆன்மிகத்தை எதிரொலிக்கும் வகையில் அமைந்திருந்தது. மேலும் பழங்கால தங்கத்தை பயன்படுத்தி ஒரு அற்புதமான கலை திறனோடு பக்தி மணத்துடன் ராஷ்மிகா ஆடை வடிவமைக்கப்பட்டிருந்தது. விஜய் தேவரகொண்டா வேட்டி சிண்டூர் அங்க வஸ்திரத்துடன் கோவில்களின் கலைத்திறனுடன் எம்பிராய்டரி செய்யப்பட்டு புனித கட்டிட கலையின் சின்னங்கள் ஆடையில் குறிப்பிடப்பட்டுள்ளது. புதுமண ஜோடிகளின் ஆடை அணிகலன்கள் விருந்தினர்கள் மட்டுமல்ல பலராலும் பாராட்டப்பட்டு வருகிறது.

வருகிற மார்ச் 4-ந்தேதி விஜய் தேவரகொண்டாவுக்கும்-ராஷ்மிகாவுக்கும் திருமண வரவேற்பு ஐதராபாத்தில் உள்ள நட்சத்திர ஓட்டலில் பிரமாண்ட முறையில் நடைபெற இருக்கிறது. விழாவில் தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடம் மற்றும் இந்திய திரையுலகமே திரண்டு வந்து வாழ்த்த இருக்கின்றனர். விதவிதமான சைவ, அசைவ பிரமாண்ட விருந்துடன் நடைபெறும் திருமண வரவேற்பு விழாவை விஜய் தேவரகொண்டா மற்றும் ராஷ்மிகா குடும்பத்தினர் பிரமாண்டமாக செய்து வருகின்றனர்.



பாரதி கண்ணம்மா சீரியல் மூலம் பிரபலமானவர் நடிகை ரோஷினி ஹரிப்ரியன். இவர் சமீபத்தில் சுந்தரமூர்த்தி என்பவரை காதலித்து திருமணம் செய்துகொண்டார். இவர்களுடைய திருமண புகைப்படங்கள் வெளிவந்து வைரலானது. ரசிகர்கள் தங்களது வாழ்த்துக்களை ரோஷினிக்கு தெரிவித்தனர்.

இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் ரோஷினி தற்போது திருமணத்திற்கு பின் தனது கணவருடன் எடுத்துக்கொண்ட ரொமான்டிக் போட்டோஷூட் புகைப்படங்களை பதிவு செய்துள்ளார். கடற்கரையில் கணவருடன் ரோஷினி எடுத்துக்கொண்ட இந்த போட்டோஷூட் தற்போது வைரலாகி வருகிறது.



# 'யு' சான்றிதழ் பெற்றது 'காதல் ரீசெட் ரிப்பீட்'

ஏ.எல். விஜய் இயக்கத்தில் உருவாகி உள்ள படம் 'காதல் ரீசெட் ரிப்பீட்'. இப்படத்தில் மதும்கேஷ், ஜியா சங்கர் ஜோடியோடு மலையாள சினிமாவின் முன்னணி நட்சத்திரமான அர்ஜுன் அசோகன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இவர்களோடு எம். எஸ்.பாஸ்கர், ஜெயபிரகாஷ், விஜி சந்திரசேகர் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

புதுமையான காதல் கதையை சொல்லும் இப்படத்திற்கு ஹாரிஸ் ஜெயராஜ் இசையத்துள்ளார். இதனிடையே, இப்படத்தின் டீசர், டிரெய்லர் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இந்த நிலையில், 'காதல் ரீசெட் ரிப்பீட்' படம் வருகிற 6-ந்தேதி உலகம் முழுவதும் வெளியாக உள்ள நிலையில் இப்படத்திற்கு தணிக்கை குழு 'யு' சான்றிதழ் வழங்கி உள்ளது.

# ஐஸ்வர்யா ரஜினிகாந்த்தின் அடுத்த படம்.. இசையமைக்கும் யுவன் சங்கர் ராஜா




நடிகர் தனுஷ் நடித்த '3' படத்தின் மூலம் தமிழ் திரையுலகில் இயக்குநராக அறிமுகமானவர் நடிகர் ரஜினிகாந்தின் மூத்த மகள் ஐஸ்வர்யா. இப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்றை பெற்றதை தொடர்ந்து 'வை ராஜா வை', 'லால் சலாம்' ஆகிய படங்களை இயக்கியுள்ளார்.

இதனை தொடர்ந்து ஐஸ்வர்யா தற்போது புதிய படம் ஒன்றை இயக்க ஒப்பந்தமாகி உள்ளதாக நேற்று அறிவிப்பு வெளியானது. கண்ணன் ரவி குரூப்ஸ் நிறுவனம் தயாரிக்கும் 9-வது படத்தை ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்க உள்ளார்.

ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்கும் புதிய படத்தில் நடிக்க உள்ள நடிகர்கள் குறித்த எந்த அறிவிப்பும் வெளியாகாத நிலையில், தற்போது இசையமைப்பாளர் குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது.

அதன்படி, ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்கும் படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்க உள்ளார். இதற்கு முன்னதாக 'வை ராஜா வை' படத்தில் ஐஸ்வர்யா- யுவன் சங்கர் ராஜா கூட்டணி இணைந்து பணியாற்றியது. தற்போது இரண்டாவது முறையாக இருவரும் இணைந்து பணியாற்ற உள்ளனர்.








**WANTED**

Needed female staff to look after children, patients.


Contact

9150989424













**WANTED**

**Job 1-SALES ENGINEER**

Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu

**Job 1-SALES ENGINEER**

Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu

**ALP AEROFLEX INDIA PVT. LTD.**
Contact details for Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com







தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E

**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI

**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE




**UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD**

உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்

அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்

5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971






### ஞாயிற்றுகிழமை !

ஞாயிற்றுக்கிழமை எப்போது வரும் என்று காத்திருந்தேன்...
சற்று ஓய்வு கிடைக்குமென...

ஞாயிறு காலை எழுந்ததும் மளிகை லிஸ்ட்டை
நீட்டுகிறாள் மனைவி !

எல்லாம் வாங்கி வந்தாயிற்று ... குளிக்க காத்திருக்கிறேன்...
சேவிங் கிரீம் , ஃபேசியல் கிரீம் எடுத்துக் கொண்டு பாத்ரூமில்
போய் ஒரு மணி நேரம் ஆகிவிட்ட என் புத்திரன்
இன்னும் வெளிவரவில்லை !

ஒரு வழியாய் காலை(பகல்) குளித்து முடித்து
சிற்றுண்டி முடிந்த கையோடு...
ஒட்டடை குச்சியை கையில் தருகிறாள் மனைவி...

"வீட்டை சுத்தி ஒட்டடை நிறைய பிடிச்சிருக்கு....
அது வீட்டுக்கு நல்லதில்லை !'

வேலை முடிந்து டிவி ரிமோட்டை எடுக்க போனேன் !
"மதியம் சாப்பிடற நேரம் இப்ப என்ன டிவி வேண்டி கிடக்கு !"

ரிமோட்டை எடுத்த இடத்தில் வைத்து சாப்பிட அமர்ந்தேன்...
சாப்பிடும்போதே...

"நம்ம சந்தியாவோட அப்பா முடியாம படுத்திருக்காராம் ஒரு
எட்டு போய் பாக்கணும் ,ராகவிக்கு இது ஒன்பதாவது மாசம்
ஒன்னு போய் பாத்துட்டு வந்துடலாம் !"



எல்லாம் முடிந்து இரவு படுக்க போகும் முன்
சற்று யோசித்தேன்.... "இந்த ஞாயிற்றுக்கிழமை
தேவை தானா !"

**எம்.பி.தினேஷ்.** கோவை

### நண்பர்கள்!

அறுசீர் மண்டிலம்

தூக்கி விடுபவன்
நண்பனன்றோ தோளைக்
கொடுப்பவன் நண்பனன்றோ!
ஆக்கம் அளிப்பவன்
நண்பனன்றோ அணைத்துக்
கொள்பவன் நண்பனன்றோ!
ஊக்கம் தருபவன்
நண்பனன்றோ உற்சாகம்
தருவான் நண்பனன்றோ!
காக்கும் கரங்கள்
நண்பனன்றோ
கருணைத் தெய்வமே
நண்பனன்றோ!

உடுக்கை இழக்கையில்
காப்பாற்றும் உண்மைத்
தோழனே நண்பனன்றோ!
இடுக்கண் வருகையில்
தாங்கித்தான் இனிதாய்ப்
பிடிப்பவன் நண்பனன்றோ!
துடுக்காய்ப் பேசிடும்
போதெல்லாம் தூக்கி
நிறுத்துவான் நண்பனன்றோ!
தொடரும் இன்பமும்
துன்பத்தில் தோளைக்
கொடுப்பவன்
நண்பனன்றோ!



**முனைவர்
இராம.
வேதநாயகம்.**

### வானொலி

அதிகாலைப்புத்துணர்ச்சியின்
அடித்தளம்
எங்கோ ஒலி வாங்கி
எங்கும் பரப்பும் அற்புதம்

தலையில் குட்டு வாங்கி
காதுத் திருகலில் உணர்வு
பெற்று தப்பாது பாடம்
சொல்லும் தங்கப்பிள்ளை

தேநீர்க் கடையின் தேர்தல்
செய்தியும் உலக அரசியலின்
உண்மைச் செய்தியும்
உன் வழி ஊடுருவும்

ஆலய விழாக்களில் ஆன்ம
ஒளி பரப்பும் ஞானச் சுடர்

உழைத்துக் களைத்து
உறக்கம் கொள்ளும்போது
உல்லாசமாய் செவி
நிறைப்பாய்

தனியாய் இருந்தாலும்
தகவலைச்
சரியாகச்சொன்னாய்

அறிவியல் வளர்ச்சியில்
ஆயிரம் கருவிகள்
அனைத்தும் தருவது
மனம் நிறைந்த குழப்பங்கள்

வயல்வெளியும் வசந்தமானது
வீட்டு வேலையும் எளிதானது

நேயர் விருப்பமும் ஒலிச்
சித்திரமும் நினைவில்
நிற்கும் தபால் பெட்டியும்
இன்னமும் இதயத்தில்
சிம்மாசனமாய்...

வணிகச் சந்தையில்
வர்த்தக விளம்பரத்தில்
நீதான் கதாநாயகன்

கண்டுபிடிப்புகள்
எதுவானாலும் கருத்தில்
நிறைந்து கவனம் ஈர்த்து

வானில் உலா வந்து
தேனாய்ச் சுவை நல்கி



உணர்வுகளுக்கு
வடிகாலாய்
உணர்ச்சிகளுக்கு
ஆறுதலாய்
நீ மட்டுமே.....

**தமிழ்நிலா**



மழைக்கு பின் வர்ண
ஜாலமாய் ஜொலிக்கும்
வானவில் எல்லாம்
உன் வண்ண,வண்ண
தாவணிகளை
ஞாபகப்படுத்தி விட்டு தான்
செல்கின்றன!

கடல் கடந்து சென்ற பின்பும்
எனது நிழலாய்
நீ பின் தொடர்வதாகவே
உணர்கிறேன்!

காதலோடு கை கூப்பி
கடவுளை வேண்டாதே.
நீ அழைப்பதாக நினைத்து,
மனித அவதாரமெடுத்து
உன்னை காதலிக்க
வந்து விடுவான்
கல்லான கடவுள்!

பயணங்கள் கற்று தருவதை
விட உன்னுடைய பழக்கம்
அதிகம் கற்று தருமடி!

அகராதி வேண்டும்
அலைபாயும் உன் கண்களின்
அர்த்தத்தை அறிய!!

மேலிருந்து கீழ் தானடி
இறங்கினாய் நான் ஏனடி
கிறங்கி போனேன்!



மெத்த படிக்க
வேண்டும்
புத்தகங்களை
அல்ல?
உன்னை!!

**லி.நௌஷாத்
கான்**

### முயற்சியில் வெற்றி தான்...

வெற்றிப் பாதையில்
கிடைத்த வெளிச்சமே தாரக
மந்திரமான முயற்சி..
தடை வந்தாலும் அதை
குடை போல பிடித்து
வெற்றிப் பாதையில்பீடு நடை
போடுவதே முயற்சி
கடா கொண்டனாக
விடாமுயற்சியைப் பிடித்தால்
வெற்றி உறுதியே...
முயற்சி என்ற விதையை
மண்ணில் நட்டு விட்டால்
அது நம்பிக்கை என்ற
விருட்சமாக மலர்ந்து
வளர்ந்து சந்தோஷம் என்ற
நிழல் கொடுக்குமே
சின்ன முயற்சி பெரிய
வெற்றியின் படி முயன்று
பார் அதுவே உனக்கு
கொடுக்கும் தன்னம்பிக்கை..
சோர்ந்து விடாதே மேலும்
மேலும் முயற்சி செய் ..
வெற்றி
நிச்சயம் என்ற
தாரக மந்திரம்
அதுவே
முயற்சிப்படி...



**உஷா
முத்துராமன்**

### தண்ணீர் வாழ்வில் உயிர்நாடி....

சொட்டு நீரில் உருவாகி
மொட்டு மெல்லமலராகி
தாய்மடியில் கருவாகி
பத்துமாதபளுவாகி பனி
நீரில் தவமாகி உருவெடுத்து
வெளியாகி பிறப்பெடுக்கும்
எல்லாருக்கும் தண்ணீர் தான்
வாழ்வில் உயிர்நாடி...

நிலத்தினில் மலை மீது
தவழ்ந்தோடி நீர்விழ்ச்சியாய்
பாய்ந்தோடி ஆறாக பறந்து
விரிந்தோடி கடலோடு
கலந்தோடி சூரியசுழற்சியில்
சுழன்றோடி கருமேகமாய்
திரண்டோடி இடிமின்னலாய்
ஒலிஒளிந்தோடி காற்றின்
கைபட்டு ஊசிதுhறலாய்
கொட்டும் மழையாய்கொட்டி
சொட்டுவிடும்
தண்ணீர் தான்
வாழ்வின்
உயிர்நாடி,



**கவிஞர்
பொன் பனகல்
பொன்னையா**



### திருப்பம் !

பிள்ளை பருவத்தில்
நண்பர்களோடு
கில்லித்தாண்டு
விளையாடி...

வீட்டின் பின்னால்
ஒளிந்து விளையாடி...

வீடு கட்டி விளையாடிய
பருவம்... திரும்பவும் வந்தது
திருமணமானபின் !

இப்போது கில்லி தாண்டுக்கு
பதில் 'பூரிக்கட்டை'...

'வூடு 'கட்டி அடிக்கும்
மனைவியிடம் இருந்து
தப்பிக்க ஒளிந்து கொள்ள
இடம் தேட வேண்டியதாய்
இருக்கிறது வீட்டைச்
சுற்றி !



**எம்.பி.தினேஷ்.**
கோவை



### மின் விசிறியாய்ச் சுழல்பவள்!

உன் விழிகளின் பார்வை
வீச்சில் உண்டா(க்)கும்
மயக்கம் மட்டும்
போதைத் தடைச்
சட்டத்திலிருந்து
தப்பிப்பதன் அதிசயமும்
இரகசியமும் இன்று வரை
எனக்குப் பிடிபடவில்லை!
வட்டத்துக்குள் சிக்கிய
வார்த்தைகளைக்
கண்டுபிடிப்பதைப் போல் தான்
நானும் உன் வலைக்குள்
சிக்கிக் காணாமல் போன
என்னைத் தேடிக்
கொண்டிருக்கிறேன்!
வெப்பத்திலிருந்து என்னை
விடுவிக்க எப்பொழுதும்
எனக்காக(வே)ச் சுற்றும்
மின் விசிறியாகச் சுழல்பவள்
நீ! உன்னைப் போலக்
கண்களில் மட்டுமே
கவிதை எழுதத் தெரியாமல்
எழுதுகோலால் பதிந்து விட்டு
விழித்துக் கொண்டிருக்கிறேன்
நான்! ஆகவேதான் என் மீது
கருணை வைத்துக்கந்து வட்டி
மீட்டர் வட்டிக் கணக்காக
முத்தங்களை
வழங்குகிறாய் நீ!
இதற்காகவேனும்
இந்தக் கலியுகத்தில்
நான் கற்புக்கரசனாக
வாழ்ந்தேயாக வேண்டும்
அன்பே!

### கடிகார முள்ளாய்த் துடிப்பவள்!

நீ ஓர் உத்தமபுத்திரனின்
செல்வி என்றாலும்
நம் காதல் கெமிஸ்ட்ரியில்
நீ சர்வ சத்தியமாக
ஒரு முழுநேர உத்தமவில்லி!
காலநேரத்தைப்
பொருட்படுத்தாமல்
வேட்டையாடுவதற்கும்
விளையாடுவதற்கு ம்
கடிகார முள்ளாய்த்
துடிப்பவள் நீ! பம்மல் கே
சம்பந்தம் பஞ்ச தந்திரம்
படங்களின் நாயகியான
சிம்ரனை
நகலெடுத்ததைப்போல்
உன் செய்கைகள்
இருப்பதால் தான் நம் காதல்
நினைத்தாலே இனிக்கிறது!
இனி நீயில்லாமல் ஒரே ஒரு
கவிதையைக் கூட
உருவா(க்)கக் கூடாதென்று
எனக்கே உத்தரவிடுகிறது
என் எழுதுகோல்!
வாட்ஸ் ஆப் பேஸ் புக்
இன்ஸ்டாகிராம் போல்
என் வாழ்வில்
ஒவ்வொரு நொடியும்
எனக்குத்தேவையான
இனிய தேவதை நீ!

### குழல் விளக்காய் ஒளிர்பவள்!

என் ஒவ்வொரு நாளையும்
வசந்த தினமாக்கும்
சூடிதார் சொர்க்கம் நீ!
நினைத்தா(ல்)லே கூடப்
போதை ஏறும் என்பதை
உண்மையாக்கிய சேலைச்
சோலை நீ!
எனக்காக நானே உருவாக்கிய
பிருந்தாவனத்தில் நீயே
என் நந்தகுமாரி! என்
உள்ளத்திலும் இல்லத்திலும்
குழல் விளக்காக
ஒளிர்பவள் நீ!
நீ நெகிழியிலான
அணிகலன்களை அணியும்
போது தான் எனக்குப்
பு(தெ)ரிந்தது
தங்கத்திற்கெதற்குத்
தங்கமென்று!
நீ ஒரு புன்னகை மட்டும் செய்
தோழி உனக்குப் பிடித்தமான
காதல் அணிகலன்களை
நான் உனக்குக்
காணிக்கையாக்குகிறேன்!
எனக்காகவே எனக்கெனவே
நீயிருப்பதால் நானும்
உன்னைப் போலவே
உன்னைக் காதலிக்கிறேன்!

### அழைப்பு மணியாய் சிணுங்குபவள்!

என் காதல் தேவதை
உன்னை விட வேறு யாரால்
என் கவிதை வரிகளில்
இனிதாகப் பயணம் செய்து
விட இயலும்!? என் இதய
சிம்மாசனத்தில் நீ ஆசையாய்
அமர்ந்த பின் தான் காதல்
என்பது சொர்க்கத்தின்
நுழை(வு)வாயில்
என்றறிந்தேன்!
அலைபேசியிலானாலும் சரி
இல்லத்திற்கு வந்தாலும் சரி
அழைப்பு மணியாய்
சிணுங்குபவள் நீ மட்டுமே!
எங்கு எப்படி எப்பொழுது
பார்த்தாலும் சொல்லி
விடலாம்! நீ அழகால் மட்டுமே
செய்யப்பட்ட அற்புத ஆனந்த
ஆரணங்கு என்று!
உன்னைக் காதலிப்பதை விட
வேறென்ன வேலையை
நான் சிறப்பாகச் செய்து
விட முடியும்!? என்று
நான் நிரூபிக்க வரவேற்று
வாய்ப்பளித்த வள்ளல்
அன்பே நீ!

### புகைப்படமாய் உறைபவள்!

நான் காணுமிடமெல்லாம்
எனக்குக் காட்சி தருகின்றாய்!
உன்னையன்றி வேறு யார்
எனக்குத் தேவியாகிட
முடியும்!? உன் ஒவ்வொரு
செல்ஃபியையும்
ரசிக்கும்போது என்னுள்
புகைப்படமாய் உறைபவள் நீ!
நீ கொஞ்சம் கருணை
மிக்கவள் தான்!
ஆகவேதான் உன் உத்தரவு
டிஸ்ப்ளேவில் வைக்காதே
ஸ்டேட்டஸில் வைக்காதே
என்றெல்லாம் இருந்தாலும்
மனதில் வைக்காதே
என்றில்லை! எனவே தான்
துணிச்சலாக உன்னையே
வாசிக்கிறேன்! உன்
நினைவையே
சுவாசிக்கிறேன்!
இவற்றிற்கெல்லாம்
ஆகச் சிறந்த
காரணமாக
காதலைத் தவிர
வேறெதையடி
சொல்லி விட முடியும்!?



**முத்து ஆனந்த்,** வேலூர்

## நூல் விமர்சனம்




**பெருங்கவிக்கோவின்
உலகத் தமிழ்ச்சுவடுகள்!
நூல் தொகுப்பாளர் :
பெருங்கவிக்கோ
வா.மு. சேதுராமன்
கவிஅரசன் பதிப்பகம்,
31, சாய் நகர் இணைப்பு,
சின்மயா நகர், சென்னை–92.
பக்கங்கள் : 752, விலை:
ரூ.999. மின்னஞ்சல்:
vavamusethuraman35@
gmail.com
நூல் விமர்சனம் : கவிஞர்
இரா. இரவி.**

'கவிக்கோ'' என்றால் அப்துல் ரகுமான், 'பெருங்கவிக்கோ'' என்றால் வா.மு. சேதுராமன் என்பது நாடறிந்த உண்மை. பெருங்கவிக்கோ அவர்களுக்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் உள்பட உலகளாவிய தொடர்பும் நட்பும் உள்ளவர். அவர் பலருக்கும் மடல் எழுதி இருந்தாலும் பலர் அவருக்கு எழுதிய மடலை, வாழ்த்தை, பாராட்டை தொகுத்து நூலாக்கி உள்ளார். 40ஆம் அகவையில் ஆரம்பித்து 86ஆம் அகவை வரை ஒவ்வொரு வருடமும் நூல் எழுதி வெளியிட்டு வருகிறார். 86ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவில் வெளியிடப்பட்டது இந்நூல்.

'ஒளி காட்டும் தமிழன்' என்ற தலைப்பிலான முத்தமிழ் அறிஞர் கலைஞரின் கவிதையில் தொடங்கி கவிமாமணி தமிழழகன் கவிதையில் முடிகிறது. படிக்க படிக்க வியப்பு பிரமிப்பு. இப்படி ஒரு மனிதர் வாழ்ந்தார் என்பதை இனிவரும் உலகம் நம்ப மறுக்கும் என்று காந்தியடிகளுக்குச் சொன்னது பெருங்கவிக்கோ அவர்களுக்கும் பொருந்தும். பல்கலைக்கழக துணைவேந்தர்கள், பேராசிரியர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், உலகத் தமிழர்கள் யாவரும் அய்யாவிற்கு எழுதிய மடலில் அய்யாவின் சிறப்பை, ஆளுமையை, கவியாற்றலை, மரபு ஈடுபாட்டை தெள்ளத்தெளிவாக விளக்கி உள்ளார்.

புதுக்கவிதைத் தந்தை ந. பிச்சமூர்த்தி அவர்கள் பெருங் கவிக்கோ பற்றி வடித்த கருத்து இதோ! "பெருங்கவிக்கோவின் புலமை போற்றத்தக்கது! பெருங்கவிக்கோ பாடல்களைப் படிப்பவர்கள் தம்மையும் அறியாமல் ஆவேசம் எழுவதை உணர்வார்கள். அவ்வளவு சக்திமிக்க பாடல்கள். பாடல்களில் காணும் வண்ணஜாலங்களும், சந்த இனிமையும், புலமையும் போற்றத்தக்கவை"

சேதுகாப்பியம் எனும் காப்பியம் 12 காண்டங்கள் வந்து விட்டன. கம்ப இராமாயண பாடல்களையும் எண்ணிக்கையில் மிஞ்சும்வண்ணம் அதிக பாடல்களை மரபில் எழுதி குவித்து வருகிறார் பெருங்கவிக்கோ. வருடாவருடம் தமிழுக்காக 29 ஆண்டுகளாக தொடர்ந்து பயணம் மேற்கொண்டு வருகிறார். எழுதுவதோடு மட்டும் நின்றுவிடாமல் தமிழுக்காக தொடர்ந்து குரல் கொடுத்தும் வருகிறார். தமிழ்ப்பணி மாத இதழில் தலையங்கமும் கவிதைகளும் எழுதி வருகிறார்.

கலைஞர், பேராசிரியர், அன்பழகன், சிலம்புச்செல்வர் ம.பொ.சி., திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, தளபதி மு.க. ஸ்டாலின், முனைவர் கோ. விசுவநாதன், பேரறிஞர் ப. மருதநாயகம், தமிழண்ணல், குன்றக்குடி அடிகளார், பேராசிரியர் சி. இலக்குவனார், கவிஞர் வா.செ. குழந்தைசாமி ஆகியோரின் பாராட்டு மடல்கள் நூலில் உள்ளன. கவியருவி ஈரோடு தமிழன்பன் அவர்களின் கவிதை வரிகளில் இருந்து சிறு துளிகள் உங்கள் பார்வைக்கு, இதோ.

எதார்த்தமான / பதார்த்தம் இவனிடம் வஞ்சகம் எதுவும் நெஞ்சினில் இல்லை. ஏழடி உயரம் வளர்ந்த/ குழந்தை எண்பது வயது மழலை / வளரும் அன்புக்கு அப்போதும் உடந்தை.

முத்துவிழா நாயகனை / முத்தமிட்டு என் சொற்கள் வாழ்த்தும் / இன்னும் வயதுகள் வளர / வாழ்வு வளரட்டும்/ இன்னும் வாழ்வு வளர்த் தமிழ்ப்பணிகள் வளரட்டும்!

எண்பது வயது முத்து விழாவில் பாடிய கவிதை, அவர் பாடியது போல பெருங்கவிக்கோ வாழ்வு வளர அவரது தமிழ்ப்பணியும் தமிழ்த்தொண்டும் வளர்ந்து வருகின்றன.

பெருங்கவிக்கோவின் மூத்தமகன் கவிமுரசு வா.மு. சே. திருவள்ளுவர் அவர்கள் முதுநிலை வணிகவியல் M.Com., பட்டதாரி. அவர் வங்கிப்பணி எல்லாம் வேண்டாமென்று உதறிவிட்டு தந்தையின் வழியில் தமிழ்ப்பணி மாத இதழை ஏற்று நடத்தி வருகிறார். இப்படி ஒரு பிள்ளை வாய்த்தது பெருங்கவிக்கோ அவர்களுக்கு வரம் என்றே சொல்ல வேண்டும். இக்காலத்தில் இப்படி ஒரு மகன் கிடைப்பது அரிது. அவரது வாழ்த்தும் நூலில் உள்ளது.

கவிஞர் வா.மு.சே. கவிஅரசன், இவரும் பெருங்கவிக்கோ வா.மு.சே. அவர்களின் இளையமகன். பன்னாட்டு தமிழுறவு மன்ற மாநாட்டை அமெரிக்காவில் நடத்திய செயல்வீரர். அவரது வாழ்த்தும் நூலில் உள்ளது. பெருங்கவிக்கோவின் அன்புமகள் இளமுனைவர் வா.மு.சே.பூங்கொடி மதியழகன் அம்மாவின் ஆளுமைகள் வாழ்த்தும் உள்ளது. பச்சையப்பன் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் முனைவர் வா.மு.சே. ஆண்டவர், ஹைக்கூ ஆய்வாளர் பச்சையப்ப முதலியார் நூலைத் தொடுத்தவர் பெருங்கவிக்கோவின் இளைய மகன். அவரது வணக்க உரையும் உள்ளது. பொறிஞர் தமிழ்மணிகண்டன் கவிதை சிறப்பு.

திருமுருக கிருபானந்த வாரியார் வழங்கிய வாழ்த்துக் கவிதையும் உள்ளது. சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகத்தின் தலைவர் நா. ஆண்டியப்பன் மடல் உள்ளது. அ.கி. பரந்தாமனார் கவிதை உள்ளது. பேராசிரியர் க. இராமசாமி, காந்திய அறிஞர் முனைவர் அ.பிச்சை, மூதறிஞர் ஔவை நடராசன், எளிமையின் சின்னம் எழுத்தாளர் வல்லிக்கண்ணன், முன்னாள் அமைச்சர் தமிழ்க்குடிமகன், சுந்தர இராமசாமி, கு.வெ. கி. ஆசான், பூவண்ணன், பாரதி சுராஜ், கலைமாமணி விக்ரமன், மேலாண்மை பொன்னுச்சாமி, இலண்டன் இ.கே. இராஜகோபால், பி.கே. சாமி, கவிக்கோ ஞானச்செல்வன், மாட்சிமிகு சை.வை. சிட்டிபாபு, டாக்டர் விஜி சந்தோசம், புலவர் அறிவுடை நம்பி, புலவர் பாவலர் கருமலைத் தமிழாழன், கலைமாமணி ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன், மார்சல் முருகன் இப்படி பலரும் பெருங்கவிக்கோ அவர்களுக்கு எழுதிய மடலும்,பாராட்டும். வாழ்த்தும். கவிதைகளும் நூலில் உள்ளன. பல்சுவை விருந்தாக உள்ளது.

730ஆம் பக்கம் எனது மடலும் இடம்பெற்றுள்ளது. எனக்குப் பெருமை சேர்த்து உள்ளார்கள். சாதனை மனிதர் பெருங்கவிக்கோ அவர்களின் வாழ்நாள் சாதனை கடல் அளவு என்றாலும் இந்த நூல் கடுகளவு சாதனைகளை படம்பிடித்துக் காட்டி உள்ளது. பெருங்கவிக்கோ அவர்களால் தமிழன்னை பெருமை கொள்கிறாள்.







## பள்ளி செல்ல விரும்பு

முதல்ஒவர் மணி ஒசை
மனதில் இன்னும் ஒலிக்கிறது
முதல் பெஞ்ச் கனவுகள்
கண்களில் இன்று தெரிகிறது
சாம்பல் பலகையில்
சாலை கனவுகளை
வரைந்தோம் சிறு சிரிப்பில்
உலகத்தை வென்றோம்
மதிய உணவு
இடைவேளையில்
நட்பு மலர்ந்தது மழை
நாளில் காகித படகு
ஒடியது தேர்வு பயத்தில்
கூட சேர்ந்து இருந்தோம்
தோல்வியிலும்
துணையாக நின்றோம்
பள்ளி முடிந்தாலும்
பாதை நீள்கிறது பள்ளி
நினைவுகள் மட்டும்
நெஞ்சில் நிலைக்கிறது
எட்டுத்திக்கும் இருந்தாலும்
நண்பர்கள் நினைவு நெஞ்சில்
இனிக்கிறது எப்போது நேரில்
முகம் பார்ப்போம் நலம்
விசாரிப்போம் என்று நட்பே
பிரபஞ்சம் என் அன்னூர்
அரசு மேல்நிலைப்பள்ளி
நண்பர்களை
நினைக்கையிலே மனதில்



எப்போதும்
பட்டாம்பூச்சியும்
வானவில்லும் வளம்
வருகிறது

**"போயஸ் கார்டன்"**
**பொன்விழி**
அன்னூர்



## ஆயிரம் கண்ணுடையாள்..!

ஆயி.. மகமாயி..
அவள் கண்ணபுரத்தாளே.!
தாயி உனை
சரணடைந்தேன்..!
சமயபுரத்தாளே.!

அலைபோல் பக்தர் கூடி..
உன்னை தேடி வந்தாரே..!
மலைபோல் வரும்
துன்பம் இனி பனியாய்
மறைந்ததுவே.!

ரெங்கனது தங்கை உனை
நாடி வந்தனரே..
மங்கை மகமாயி உனை
தேடி சரணடைந்தாரே.!
உந்தன் விழிப் பார்வை
பட.. எந்தன் வழி திறக்கும்.
சிந்தை தனில் வந்தா
யெனில்.. நாளும் நன்மை
பிறக்கும்.!

சக்தி மக மாயி.. இங்கு சமய
புரம் அமர்ந்தாள்..
பக்தியில் மா விளக்கேற்ற.
அருளை அவள்
பொழிந்தாள்!

எங்கள் குலம் காக்கும் தேவி
அன்னை கருமாரி.. ஆயி
மகமாயி அவள் அருளே
முத்து மாரி..!

**வே.கல்யாண்குமார்.**

## பிச்சை

பாத்திரமறிந்து
பிச்சையிடு என்ற
முதுமொழி மனிதர்களுக்கு
மட்டுமல்ல இறைவா
உனக்கும் தான்!

உன்னிடம்
மடிப்பிச்சைக்கேட்டு
புண்ணிய காரியங்கள்
பல செய்து பரிகாரங்கள்
பல செய்து புத்திர பாக்கியம்
வேண்டிக்கை தொழுது
நிற்பவர்களை
நிராகரித்து விடுகிறாய்!

தட்டுங்கள் திறக்கப்படும்
என்றாய் தட்டினோம்
திறக்கவில்லை கேளுங்கள்
கொடுக்கப்படும்
என்றாய் மன்றாடிக்
கேட்டோம்
கொடுக்கவில்லை!

சமயத்தில் தட்டாமலேயே
திறந்து விடுகிறது
உன் மனக்கதவு!

பேருந்து நிலையத்தில்
நடனமாடி வித்தைகள் காட்டி
பிச்சை எடுக்கும்
தம்பதியருக்குப்
புத்திரபாக்கியம்
அருளுகின்றாய்!

அந்தக்குழந்தையை
வைத்து வித்தைகள்
காட்டி பேருந்தில் ஏறிப்
பிச்சை எடுக்க வைத்தார்கள்
பெற்ற பாவிகள்!

அந்தக்காட்சியைக்கண்ட
மகப்பேறு இல்லா
மங்கையொருத்தி
ஏக்கத்தோடு
கண்ணீர் சிந்தினாள்!

இறைவா! பாத்திரம் அறிந்து
பிச்சை இடு என்பது
மனிதர்களுக்கு
மட்டுமல்ல
உனக்கும் தான்!



**கவிஞர்**
**த.அனந்தராமன்**
துறையூர்

அழுவதற்கு நிறைய
இருக்கிறது காயம் தரும் உன்
காதலை கூட தர வேண்டாம்
ஆறுதலாய் குட்டி புன்னகை,
சின்ன ஸ்பரிசம் ,
ஒரு கைகுலுக்கல் போதுமடி!

அலுக்கவில்லையா?
என்கிறாய் அலுத்து
போக
அரைமணி நேர
காமமல்ல
எனது காதல்!
அசராமல் ஆயுள்
முழுதும்
கண்ணுக்குள் வைத்து
உன்னை பார்த்து,பார்த்து
காப்பேனடி!

திரும்பி தான் நிற்கிறாய்
ஏனோ திருந்த வில்லை
திருட்டு பூனை மனசு!



உன் விழி வாளால்
வெட்டி கொன்று
கொஞ்சம்
மடி சாய்த்து கொள்ளடி!

**லி.நௌஷாத் கான்**

1. கை விரலில் தடவிய மை
காய்வதற்குள் ஐந்து
ஆண்டுகள்
முடிவடைந்து விட்டது

2. முட்டாளுடன் ஒரு நாளும்
விவாதம் செய்யாதீர்கள்
வெளியில் இருந்து
பார்ப்பவர்களுக்கு யார்
முட்டாள் என்று தெரியாது

3. ஒரு நொடியில் நான்
பிழைத்தேன்என்று நீங்கள்
கூறும் அந்த ஒரு நொடி
தான். குலதெய்வம்

4. நேரமில்லை என்பது
மிகவும் நாகரிகமான விலகல்

5. நிம்மதியை நுழைய
வேண்டும் என்றால்
எதிர்பார்ப்பில் இருந்து
வெளியேற வேண்டும்

6. முட்களோடு தான்
வாழ்க்கை இருப்பினும்
காயங்களை இல்லை
கடிகாரத்திற்கு

## கவிதைகள்

1. அழுக்காய் இருப்பது
அவமானம் அல்ல
அடுத்தவரை ஏமாற்றிப்
பிழைப்பதே அவமானம்

2. விமானத்தில்
வேதனையுடன்
செல்வதைவிட
சைக்கிளில் சந்தோசமாக
செல்வது சிறப்பு

3. மெச்சூரிட்டி என்பது
புரிஞ்சிக்கிறதோ அல்லது
புரிய வைப்பதும் இல்லை
மூடிகிட்டு நம்ம வேலையை
பார்ப்பது மட்டும்தான்

4. மது குடிக்கச் சென்ற
கணவனை காணவில்லை
என்று மகளிர் பஸ்ஸில்
தேடிச்சென்றாள் மனைவி



5. கனிந்து
விட்டது
என்பதற்காக
மிளகாய் பழம்
இனிப்பதில்லை

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



## மக்கள் கவிஞன் நீ..

துட்டுக்கு குத்துப் பாட்டு
எழுதவில்லை! துடைகளை
வருணித்துப் பாடவில்லை.!
மெட்டுக்கு வார்த்தைகளை
நிரப்பவில்லை!
மேலுக்குப் புகழுக்கு
விலை போகவில்லை!

எட்டுக்கு ஆறடியில்
வசிப்பவர்க்கு.. ஏரெடுத்து
ஏழையாகத்தவிப்பவர்க்கு..
ஒட்டுத்துணி தைத்தே
உயிர் மறைப்பவர்க்கு
வெட்டு ஒன்று
துன்டுரெண்டாய்..
வெடித்தவன் நீ..!

சட்டியிலே இருப்பதுதான்
அகப்பையிலே.. சத்தியமாய்
கலைமகளோ உன்
அகப் பையிலே..!
பட்டித்தொட்டி எங்கும்
உனது பாமரர் பாட்டு!
பட்டுக்கோட்டை அல்ல
நீயோ பாட்டுக்கோட்டை!

கொட்டுவாய்..
கொளுத்துவாய்.. கொடிப்
பிடிப்பாய்..குடிசைகளை
சுற்றியே வட்டமடிப்பாய்!
எட்டியெவர் மிதித்தாலும்
எதிர்த்து நின்றாய்! வட்டியும்
முதலுமாய் சாகா வரலாற்றை
வார்த்தையிலே பதித்துச்
சென்றாய்!

ஒட்டுமொத்த மாக ஒரு
வார்த்தை சொல்வேன்!
உலகத்தை நேசித்தே
உணர்ச்சி தந்தாய்!
கட்டுகளை மடமைகளை
வெட்டிப் போட்டாய்!
காலத்தை வென்றவன் நீ
கல்யாணசுந்தரம்!

**வே.கல்யாண்குமார்.**

## பார்வையற்றவன் !

தினம் ஒரு பொய் பேசும்
அரசியல்வாதிகள் !

வடித்து கட்டிய
வாக்குறுதிகளை அள்ளி
வீசும் கட்சித் தலைவர்கள் !

ஜாதி தீயை பற்ற வைத்து
குளிர் காயும் சாதியத்
தலைவர்கள் !

அந்நிய மொழியை
தன் குழந்தைகளுக்கு
பயிற்றுவித்து...
வெளியே எதிர்த்து போராடும்
காரியவாதிகள் !

இவர்களையெல்லாம்
பார்ப்பதை விடவும்...
பார்வையற்ற குருடனாகவே
இருப்பதும், இறப்பதுமே
மேல் !

**எம்.பி. தினேஷ்.** கோவை

காகிதத்தில் கடிதமாக..
கடிதத்தில் கவிதையாக ..
கவிதை முழுதும் நீயாக..
நீ என் கனவாக..
கனவில் உன் நினைவாக..
நினைவுகள் நிஜமாக..
நிஜத்தில நீ நானாக..
நான் என்றுமே உனக்காக....

அத்தனையையும் தூக்கி
எறிந்துவிட்டு ஆடி திரிய
ஆசை தான்... எனினும்
எவராவது எதையாவது
சொல்வாரோ என்ற
அச்சத்தில்



அடங்கி
கிடக்கிறேன்
நான்
அடக்கிய
ஆசைகளோடு...

**கவிஞர்**
**பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

வளர்த்தெடுத்தல்....
சிற்சில தவிப்புகள் தான்...

பெருக்கி விடுகின்றன...
பேரன்பின் வெள்ளத்தை...



சந்திப்பு
தடைக்
காலத்தில்...
வளர்கின்றன..
வானாளாவிய
காதல்கள்...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## துளிப்பாக்கள்

அவன் தந்தையை
டாடி என்று அழைத்தான்
தமிழ் பேராசிரியர் மகன்.

விவசாயின் வியர்வை
கண்டு அழகிய முத்துக்களே
தலை குனிகின்றன!

யார் ஊசி போட்டு
இரத்தம் எடுக்கச் சொன்னது
இரவில் கொசுக்கடி!

பனி அடித்தாலும்
தாங்கிக் கொள்கிறது
கம்பளிப் போர்வை!



ஒடி வருகிறது
பேருந்து
எரிபொருள்
இல்லாமல்
மழை
வெள்ளத்தில்

**பூ.சுப்ரமணியன்**
பள்ளிக்கரணை,சென்னை


## புன்னகை

வானத்தில் வெண்மேகம்
சூழக்காரணம் அவளின்
புன்னகைதான்
அந்த

ஒருத்தியைப் பார்த்துதான்
பருத்திக்காடு சிரிக்கக்
கற்றுக் கொண்டது.

**பொங்கல்**

பொங்கிவரக் கற்றுக்
கொண்டதுகூட அவளின்
புன்னகையை பார்த்துதான்



ஏன்?
நான்
சிரிக்கக்
கற்றுக்
கொண்டதே
அருப்புக்
கோட்டையில்
இருக்கும்
அந்தப் பெண்ணைப் பார்த்து
தான்.

**சந்திர சேகரன் அமுதா**
செஞ்சி கோட்டை

## பெண்ணின் சிறப்பு

வரைந்து பார்த்தாலும்
அழகு..நீ வர்ணித்தாலும்
அழகு...நீ கண்ணால்
பார்த்தாலும் அழகு...நீ
கண் மூடி கனவு கண்டாலும்
அழகு...நீ
குணத்தில் அழகுனா
அழகு...நீ அமைதியில்
அம்புட்டு அழகு...நீ

பெண்ணாகி, மனுசியாகி,
தாயாகி, தரணி போற்றும்
தாரக மந்திரியாகி, உலகை
உற்பத்தி செய்த உன்னத
பிறவி...நீ....நீ



உன்னை
போற்றும்
யாரும்
வீழ்ந்ததில்லை
உன்னை
போற்றாத
யாரும்
வாழ்ந்ததில்லை....!!

**பொன்.கருணா**
நவி மும்பை

## பூவானம்

தாரகைகள் பூப்போல
மின்னும் பூவானம்
சிரிக்கும்
நட்சத்திரங்களுக்கிடையே
வெண்ணிலவு முகம்
காட்டுது நந்தவனத்து
மலர்கள் மனம் வீசி
காற்றுடன் கலக்குதே
விடியல் வெளிச்சம் வர
காத்திருக்க பூவானம்
சிரித்ததே சிறிய கதிரவன்
ஒளியில் வண்ணத்துப்பூச்சி
படபடத்ததே கருமேகம்
சூழ்ந்து கொள்ள நடுவே
வானவில் மின்னுதே
இதுவே ரசிக்க வைக்கும்
பூவானம் பூவனம் நோக்கு
பரவசம் ஆக்கு..



நம்பிக்கை
மனதில் வளர
தும்பிக்கையான்
அருளுடன்
புதிய பூவானம்
பூத்ததே ...

**உஷா முத்துராமன்**

பார்த்ததுமே மனதைப்
பறி கொடுக்கிற புத்தியை..

கேட்டதுமே கிறங்கிப்
போகிற பாடலை..

வாசித்ததுமே சபாஷ்
சொல்கிற இதயத்தை..

வைத்துக் கொண்டு



தவிக்கிது
நீருக்குத்
தப்பிய
மீனாய் இந்த
வாழ்க்கை

**ரிஷபன்**

## உண்மையைச்சொல்லி...!

அறுசீர் மண்டிலம்.

எப்போதும் உண்மையே
பேசு எஞ்ஞான்றும்
நன்மையே செய்க!
இப்போதும் நல்லதே
புரிக எஞ்ஞான்றும் தீமையை
நீக்கு! தப்பான வார்த்தையே
வேண்டா தகவான
வார்த்தையே பேசு!
ஒப்பில்லாச் சொல்லையே
காண்க உவகைதரும்
சொல்லையே பேசு!

நன்மையைச் செய்திடு
என்றும் நானிலமேஉன்னில்
மயங்கும்! இன்போடு பேசிடு
என்றும் ஈகையைச் செய்திடு
நன்று! பண்போடு நடந்திடு
நாளும் பாசத்தைக்
கொண்டிடு நன்று!



உன்னிடமே
நன்மையே
இருந்தால்
ஊருக்கும்
உதவியே
செய்வாய்!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



## கல்லறை வரை

கடற்கரையை ரசிக்கிறோம்
பிரமிப்பாய் இருக்கு
கடந்துவிடுகிறோம்

மலையை ரசிக்கிறோம்
பிரமிப்பாய் இருக்கு
கடந்துவிடுகிறோம்
ஆகாய விமானத்தை
ரசிக்கிறோம்
பிரமிப்பாய் இருக்கு
கடந்துவிடுகிறோம்



ஒரு பெண்ணை
ரசித்தால்
மட்டும் கல்லறை
போகும் வரை கடந்து
வரமுடியவில்லையே,,,?!

**நாகை ஆசைத்தம்பி**
கோவை

## யாதும் ஊரே யாவரும் கேளிர்

கணியன் பூங்குன்றனார்
எழுதிய இப்பாடல்வரி
உலகளாவிய சகோதரத்துவம்!

உலகின் எல்லா நாடுகளும்
நமது சொந்த ஊரே
எல்லைகள் கிடையாது !

உலகில் வாழும் மக்கள்
அனைவரும் நமது
உறவினர்களே!

நன்மை தீமை மற்றவரால்
வருவதில்லை நம்
செயல்களால் வருகிறது!

வாழ்வின் ஏற்றத்தாழ்வுகளை
இயல்பாக எடுத்துக் கொள்ள
வேண்டும்!

புறநானூற்றில் இடம்பெற்ற
இந்த தத்துவம் !

இன்று ஐக்கிய நாடுகள்
சபையில் நிலைக்கிறது !

எல்லைகள் இல்லை உலகம்
உனது எல்லா உயிரும் உனது
உறவு!

மரணம் என்பது புதியதல்ல !
மழையில் மிதக்கும் தெப்பம்
போல வீதியில் வழியில் உயர்
செல்லும்!

பெரியோரை வியந்து
போற்றும் !

சிறியோரை இகழ்ந்து
ஒதுக்கோம்!

அனைவரையும் சமாய்
காண்போம் ! அன்பால்
உலகை ஆள்வோம்!

கணியன் எனும் அறிஞன்
கணித சூத்திரம்
சொன்னான்!

மனிதம் எனும் நூலில்
மாநிலத்தை இணைத்தான்!

புறநானூற்றுப் பேழையில்
புதைந்திருந்த வைரமிது!

ஈராயிரம் ஆண்டின் தமிழன்
தந்த முகவரியிது!

வாழ்க்கை என்பது ஆற்று
நீரில் மிதக்கும் தெப்பத்தை
போன்றது !

பேராற்றின்
ஓட்டத்தை நம்மால் மாற்ற
முடியாது !

அந்த ஓட்டத்தோடு
இணைந்து அமைதியாய்
பயணிக்க முடியும் !

முதிர்ந்த வாழ்வியல் நெறியை
இது போதிக்கிறது !

எளியோரை தாழ்வாக
கருதக்கூடாது! பிறப்பும்
இறப்பும் இயற்கையான
சுழற்சி!

,"சாதல் புதுவது
அன்றே"என்ற வரி
மரணத்தைக் கண்டு
அஞ்சாமல் அதை வாழ்வில்
ஒரு அங்கமாக ஏற்கும்
மனப்பக்குவத்தைத் தருகிறது!



யாதும் ஊரே யாவரும்
கேளிர் என்பது
வெறும் வாசகம் அல்ல
உலகளாவிய வாழ்வியல்
சட்டம்.

**பெ.திருமுகம்**
மணமேல்குடி

## உழைப்பே சிறப்பு

கண்ணாடிக் குடுவைக்குள் மீனை யன்று
கடல்தன்னைப் பிடித்துவந்து அடைத்து வைத்தான்
வண்ணகிளி தனையன்று வான்ப ரப்பை
வளைத்தெடுத்து கூண்டுக்குள் அடைத்து வைத்தான் !
திண்வலிமை களிறையன்று காடு தன்னைத்
திமிர்ந்திடாமல் சங்கிலியில் பிணைத்து வைத்தான்
எண்ணத்தில் வலிமையுடை மனித னின்று
எல்லமும் தனதென்றே சுயத்தில் வைத்தான் !

கடல்தள்ளை வா(ஸ்)த்துவுக்கே ஏற்ற தென்று
கண்ணாடிக் குடுவையினை விலைக்கு விற்றான்
படர்ந்தவானைக் கூண்டைவிட்டு வெளியே விட்டுப்
பார்த்துசீட்டை எடுவென்றே பணம்ப றித்தான் !
அடர்ந்தகாட்டைத் தெருவழியே அழைத்து வந்து
அனைவரையும் வாழ்த்துமாறு காசு பார்த்தான்
கடல்வானை காடுதன்னை உழைத்தி டாமல்
காசாக்கும் வித்தையிலே வெற்றி பெற்றான் !

அடைத்துவைத்துச் சுதந்திரத்தைப் பறித்தெ டுத்தால்
அகத்தினிலே துன்பமன்றி இன்ப முண்டோ
கடையிருக்கும் தேங்காயை எடுத்து வந்து
கடவுளுக்கு வழிபாடு செய்வ தாலே
கிடைக்காது அவனருள்தான் ! வியர்வை சிந்திக்
கிடையாக விழுந்திறையை வணங்காப்
போதும்
நடைபயிலும் குழந்தையைப்போல் நாளும்
உன்றன்
நல்லுழைப்பால் பொருள்பெருகும் சிறக்கும்
வாழ்வே !



**பாவலர் கருமலைத்தமிழாழன்**



## ஈசனடிப் போற்றி..!

ஏற்றி வைப்பானடி
வாழ்க்கையிலே..
அன்பின்
ஈசனை நாவாரப்
போற்றுங்கடி..!
நந்தியுமாட..
துந்துபியாட..
நாயன்மார்களும்
சேர்ந்துன்னைப் பாட..
(ஏற்றி வைப்பானடி. )

ஈசனே.. கலங்கரை
விளக்கானான். இங்கே
ஈசலைப் போலே..
நாமானோம்.!

ஆசையாம் கடலில்
படகானோம்.. வாழ்க்கை..
அலைகளில் சிவனே.. மீட்க
வந்தான்!
(ஏற்றி வைத்தானடி..)

தொண்டருள் அவனொருத்
தொண்டனன்றோ.. அன்பருள்
அவனொரு அன்பனன்றோ!

வினைகளை தீர்த்தருள் புரிய
வந்தான்..! இணையிலா
ஈசனைப் பாடுங்கடி..!
பிறையுடை இறைவனைப்
பாடுங்கடி.!
(ஏற்றி வைத்தானடி..)



**வே.கல்யாண்குமார்.**


Experienced Vedic Astrologer
Jyotish Ratna
Thirumoolam Saraswathi
Horoscope Predictions
Marriage Matching
Gemstone Remedies
Accurate & Trustworthy Guidance
8148054536


www.tamilnaduepaper.com
www.anandabhaskar.com
www.paperboy.biz


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just 499
www.just499.com


சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
அஜந்தா பாக்குடன் உங்கள் தீபாவளியை கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY


WE'RE HIRING!
A Passionate Content Creator
94386 10756


CREATE YOUR PROFILE WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS



S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
based on Harvard's Project Zero
Admissions Open
For AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
ARG
We Build Your
DREAM
HOME
Recently We Have Completed
Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Just 499
Visite Our Website
JUST499.COM
All type Of your Website/App need at one place
Small Business website
E - commerce Website
Corporate Website
Enterprise website
Mobile App Development
contact us at
9337501889


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com

முனீஸ்வர் துணை
கங்கோதரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.

GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருட்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

ADVERTISE WITH US!
CONTACT US
9337501889

THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
* Plots
* Flats
* House
* Villa
* Bungalows
* Farm Land
* Ware Houses
* Factory Sites
* Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005

Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009

WE'RE HIRING
TELECALLERS
SALARY STARTING FROM RS.20000/- ONWARDS
+91 7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the LEADS GENERATION FACTORY
For Your REAL ESTATE BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80% OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
விளம்பரம்
vilambarampage@gmail.com
7789941009

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 – Rs 15000 per month
9337501889
7789941009

WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990

ANY MLM PLAN
INR PLAN RS.20000
CRYPTO PLAN RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247

WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/- & Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

ஐஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


ADIYOGI
REAL ESTATE
WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901


Vilambaram
We provide
Targeted Leads
to grow your
buisness
Boost
your
business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Call :7871617005


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
We Build Perfection
IATA
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
தமிழ் மாதமிருமுறை இதழ்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..


LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009


MLMPERFECT.COM
Start Any MLM
Software @
Rs.499/Month
+ EMI Available
EMI
Trusted by
1000+
satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337 / 7436914247


We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package
Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889
பாஸ்கர்
பேப்பர்பாய்
தெய்வம்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756



# பல்சுவை களஞ்சியம்




# காதலின் இலக்கணம் அன்றில் பறவை



மனிதனின் மிக மெல்லிய உணர்வுகளில் காதலும் ஒன்று. இந்த உலகம் இன்னும் உயிர்ப்புடன் இருப்பதற்கு காதல் எனும் காந்தம் இன்னும் கரைந்து விடாமல் காற்றோடு கலந்திருப்பதும் ஒரு முக்கிய காரணம் என்றே சொல்லலாம். பொதுவாகவே காதலுக்கு எடுத்துக்காட்டாக பறவைகளை சொல்லும் போது புறாக்கள், லவ் பேர்ட்ஸ் இவற்றை மட்டுமே சொல்வோம். ஆனால் அதையும் தாண்டி காதலுக்கு, காதலின் இலக்கணத்துக்கு ஒரு மிகப்பெரிய உதாரணமாய் போற்றக்கூடிய பறவை என்றால் அது அன்றில் பறவையை தான் சொல்ல வேண்டும்.

நம்முடைய சங்க கால தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்ற இந்த அன்றில் பறவை காதலுக்கு ஒரு மிகச்சிறந்த இலக்கணமாய் திகழ்ந்தது. இதற்கு அத்தகைய வியக்க தகுந்த குண நலன்கள் உள்ளன.

இன்று காதல் திருமணத்தால் இணைந்த பல மனங்கள் இறுதிவரை அந்த காதலை உயிர்ப்புடன் வைத்திருப்பதில்லை. ஆனால் தன்னுடைய காதலை இறுதி வரை உயிர்ப்புடன் வைத்திருப்பதற்கு இத்தகைய அன்றில் பறவைகளே சாட்சி. அதனால்தான் நம் சங்க கால கவிஞர்கள் இதனை பல்வேறு விதமாக போற்றிப் பாடியுள்ளனர்.

அன்றில் பறவை தனது துணையுடன் ஒரு முறை இணை சேர்ந்து விட்டால் அதன்பின் வாழ்நாளில் எந்த பறவையுடனும் இணை சேராது. ஏதேனும் சந்தர்ப்பவசத்தால் தனது துணையை இழந்து விட்டால் உடனே அந்தப் பறவையும் கூடவே இறந்து விடும். இத்தகைய சிறப்பு வாய்ந்த அன்றில் பறவையானது தமிழ் இலக்கியங்களில் நளவெண்பா, குறுந்தொகை போன்ற நூல்களில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

அன்றில் பறவைக்கு உரிய சிறப்பு என்னவென்றால் இந்த பறவையானது சூழலுக்கு தகுந்தாற்போல் ஒலி எழுப்பும் தன்மை கொண்டது. இரை தேடும் போது தன்னுடைய துணையை தொலைத்து விட்டால் துணையைத் தேடுவதற்காக ஒரு வித ஓசையை எழுப்பும். இத்தகைய ஓசையை அகவல் என்று அழைப்பர்.

தன்னுடைய இணையுடன் சேரும்போது ஒரு விதமான ஓசையை எழுப்பும். இத்தகைய ஓசையை உளறல் என்பர். பெண் பறவை கருவுற்று இருக்கும்போது ஒருவித ஓசையை எழுப்பும். இத்தகைய ஓசையை நரலல் என்று அழைப்பர். இப்படி தன்னுடைய ஒவ்வொரு சூழலையும் வேறுபடுத்தி காட்டுவதற்கு பல்வேறு விதமான ஒலிகளை எழுப்பும் குணநலன்களை உடையது அன்றில் பறவை.

அன்றில் பறவையானது ஒரு வகை நீர்ப்பறவை ஆகும். கடலும் கடல் சார்ந்த இடங்களிலும் இந்த வகை பறவையானது அதிகமாக காணப்படும். சின்ன சின்ன மீன்கள், தவளை, புழுக்களை உணவாக உட்கொள்ளும். இது மரக்கிளைகளில் கூடு கட்டி இருக்கும் கொக்குகளோடு சேர்ந்தே முட்டையிடும்.

தமிழ்நாட்டில் கோடியக்கரை பகுதிகளில் அதிகமான அன்றில் பறவைகள் வாழ்ந்ததாக செய்திகள் கூறுகின்றன. இந்த அன்றில் பறவைக்கு பனங்கிளி, அரிவாள் மூக்கன் என்று வேறு பல பெயர்களும் உண்டு.

தான் எழுப்பும் குரல்களுக்கு ஏற்ப பல்வேறு விதமான சைகைகள் இருப்பது போலவே உடல் அமைப்பிலும் பல வேறுபாடுகளை கொண்டிருப்பவை இப்பறவைகள். பருவம் வந்த அன்றில் பறவைகள் செந்நிற உடலும் கரும்பச்சை இறக்கைகளையும் கொண்டிருக்கும். பருவம் வராத அன்றில் பறவைகள் பழுப்பு நிறத்தில் காணப்படும். இப்பறவைகள் பெரும்பாலும் கூட்டமாகவே வாழும். பறக்கும் போதும் வரிசையாகவே பறக்கும் இயல்பினை உடையவை.

இத்தகைய சிறப்பு வாய்ந்த அன்றில் பறவைகளை காதலின் சின்னமாக போற்றி புகழாத கவிஞர்களே இல்லை என்று சொல்லலாம். சங்க காலம் தொடங்கி இன்றைய நவீன கவிஞர்கள் வரை இந்த அன்றில் பறவையை தன்னுடைய பாடலில் சேர்த்து காதலினை மேன்மைப்படுத்தியுள்ளனர்.

திரிசூலம் படத்தில் கவிஞர் கண்ணதாசனும், ( ஆனந்தம் விளையாடும் வீடு என்ற பாடல்) சிறையில் பூத்த சின்ன மலர் படத்தில் கவிஞர் வாலியும், ஜீன்ஸ் படத்தில் கவிஞர் வைரமுத்துவும், பச்சைக்கிளி முத்துச்சரம் படத்தில் கவிஞர் தாமரையும், தாம் தூம் படத்தில் கவிஞர் நா. முத்துக்குமாரும் அன்றில் பறவையை காதலின் சின்னமாக வர்ணித்து தம்முடைய எழுத்துக்களால் போற்றி புகழ்ந்துள்ளனர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த அன்றில் பறவைகளின் எண்ணிக்கை இன்றைய காலகட்டங்களில் வெகுவாக குறைந்து வருகிறது. மாறிவரும் சூழலுக்கு ஏற்ப இயற்கையோடு சேர்த்து இத்தகைய பறவைகளையும் காப்பாற்ற வேண்டும் என்பது இயற்கை ஆர்வலர்களின் வேண்டுகோளாக உள்ளது.

# 50 வயதைக் கடந்து 60 நோக்கி

50 வயதைக் கடந்து 60 நோக்கிச் சென்று கொண்டிருக்கும் ஒருவரிடம் 'உங்களிடம் என்ன மாற்றங்களை உணர்கிறீர்கள் ?' என்று கேட்டேன். அவர் அனுப்பிய பதில் இதோ :

1) என் பெற்றோரை, என் உடன் பிறந்தவர்களை, என் மனைவியை, என் குழந்தைகளை, என் தோழர்களை நேசித்த பிறகு, இப்போது என்னை நேசிக்கத் துவங்கி உள்ளேன்.

2) நான் 'உலக வரைபடம்' அல்ல என்று உணர்ந்து கொண்டுள்ளேன். இந்த உலகத்தை என் தோள்களில் சுமப்பதில்லை.

3) காய்கறி விற்கும் தங்கச்சியிடம், பழம் விற்கும் தம்பியிடம் பேரம் பேசுவதை நிறுத்தி விட்டேன். பத்து ரூபாய் அதிகமாகக் கொடுத்து விட்டேனே என்று மண்டையை உடைத்துக் கொள்வதில்லை. அவர்கள் மகள்களின் படிப்புச் செலவுக்கு சேமிக்க இது உதவட்டுமே.

4) உணவகங்களில் கூடுதலாக டிப்ஸ் தருகிறேன். அன்றாட வாழ்க்கையை நடத்த, என்னை விட அதிகமாகப் போராடும் சர்வர் முகம் மலரலாம்.

5) 'எத்தனை தடவை இந்தக் கதையைச் சொல்லுவீங்க' என்று இப்போதெல்லாம் முதியவர்களிடம் சொல்வதில்லை. அவர்கள் இந்தக் கதைகளால், தமது பழைய நினைவுகளை அசை போடுகிறார்கள்; கடந்த காலத்திலிருந்து விடுபடுகிறார்கள்.

6) சில நேரங்களில் பிறர் சொல்வது தவறு என்று தெரிந்தாலும், அவர்களைத் திருத்தாமலிருக்கக் கற்றுக் கொண்டேன்.
எல்லோரையும் திருத்தும் பொறுப்பு என்னுடையது அல்ல. எல்லோரும் சரியாக இருக்க வேண்டும் என்பதை விட என் மன அமைதி எனக்கு முக்கியம்.

7) பெருந்தன்மையுடன், தாராளமாகப் பாராட்டுகிறேன். இது, பாராட்டுப் பெறுபவருக்கு மட்டுமல்ல, என்னுடைய மனதுக்கும் மகிழ்ச்சி அளிக்கிறது. சின்ன ஆலோசனை - ஒருவர் உங்களைப் பாராட்டும்போது, ஒருபோதும் மறுக்காதீர்கள், நன்றி சொல்லி முழுமையாக ஏற்றுக் கொள்ளுங்கள்

8) என்னுடைய ஆடையில் எண்ணெய்க் கறை பட்டு விட்டால் அலட்டிக் கொள்வதில்லை. தோற்றத்தை விட ஆளுமைதான் உரக்கப் பேசுகிறது.

9) என்னுடைய மதிப்பை உணராதவர்களிடம் இருந்து விலகிப் போகிறேன். அவர்கள் என் மதிப்பை அறியாமல் இருக்கலாம், நான் அறிவேன்.

10) யாராவது பந்தயத்தில் என்னை முந்த வேண்டும் என்று எண்ணிக் கொண்டு, மோசமாகச் செயல் பட்டாலும் நான் நிதானமாகவே இருக்கிறேன். நான் பந்தயத்தில் இல்லை. என் வாழ்க்கையை வாழ்கிறேன்.



11) என் உணர்வுகளை எண்ணி சங்கடப்படாமல் இருக்கக் கற்றுக் கொள்கிறேன். என்னை மனுசனாக்குபவை என் உணர்வுகள் மட்டும்தான்.

12) ஒரு உறவை முறித்துக் கொள்வதை விட, ஈகோ-வை விட்டு விடுவது நல்லது என்று அறிந்து கொண்டுள்ளேன். என் ஈகோ என்னைத் தனிமைப்படுத்தும்; உறவுகளால் நான் தனிமைப்பட்டுப் போக மாட்டேன்.

13) ஒவ்வொரு நாளையும், இறுதி நாளைப் போல வாழக் கற்றுக் கொண்டுள்ளேன். இது கடைசி நாளாகவும் இருக்கலாம்.

14) என்னை மகிழ்ச்சியாக வைத்திருப்பவற்றைச் செய்து கொண்டிருக்கிறேன். என்னுடைய சந்தோசத்திற்கு நான்தான் பொறுப்பு. மகிழ்ச்சி என்பது ஒரு தேர்வு. அதைத் தேர்ந்தெடுத்து எந்த நேரத்திலும் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

- *இப்பதிவில் சொன்ன பதில் எல்லா வயதினருக்கும் பொருத்தமானது என்று நினைக்கிறேன், இதைச் செயல்படுத்த 50, 60, 70 வயது வரை காத்திருக்க வேண்டுமா என்ன ? சிந்திப்போம்...

# மீம்ஸ்









## விடுகதை

| | |
|---|---|
| கோழி ஏன் முட்டை போடுது? | ஏன்னா அதுக்கு ஒன்னு ரெண்டு மூணு போட தெரியாது சார். |
| கண்ணகி மதுரையை இழுத்தால் இது எந்த காலம்? | பயர் சர்வீஸ் இல்லாத காலம் சார். |
| வெற்றிலையுடன் சேராத பாக்கு எது? | மைசூர் பார்க்க. |
| நாம் எந்த எழுத்தை எழுத முடியாது? | நம் தலையெழுத்தை. |
| பத்து யானையில் 9 யானை பேருந்தில் ஏறிவிட்டனர் ஒரு யானை மட்டும் அந்த பேருந்தில் ஏற முடியவில்லை ஏன்? | அது ஆண் யானை வந்ததோ லேடீஸ் பஸ். |



# ஜோக்ஸ்



"தலைவர் ரொம்ப விளம்பர பிரியர்னு எப்படி சொல்றே?"

"தன்னோட கால் காயத்துக்கு கட்டின பேன்டேஜை ஓப்பன் செய்ய, ரிப்பன் வெட்டி விழா எடுக்கனும்னு அடம் பிடிக்கிறாரே !"

------------------------------------------



"கட்சியை கலைச்சா நாலு பேர் நாலுவிதமா பேசுவாங்கன்னு தலைவர் சொல்றாரே...அதுக்கு என்ன அர்த்தம்?"

"கட்சியில் நாலு பேர்தான் மிஞ்சியிருக்காங்கன்னு அர்த்தம் !".

------------------------------------------

"பேஷன்டை எதிரே வச்சுக்கிட்டு டாக்டர் எதற்கு நர்ஸ கையை பிடிச்சு இழுக்கறார்?"

"அவங்க கையில்தான் மருந்து பெயர்களை எழுதி வச்சுருக்கார்..அதை பார்த்துதான் மருந்து சீட்டு எழுதுவார் !"



------------------------------------------

"பேஷன்ட் டிஸசார்ஜ் ஆகும் சமயத்தில், நர்ஸ் கிளிசரின் போட்டுக்கிட்டு அழுவது, ஆஸ்பத்திரியின் வியாபார தந்திரமா...எப்படி?"

"நர்ஸ கண் கலங்கறாங்கன்னு, பேஷன்ட் மேலும் கொஞ்ச நாள் தங்குவதற்கு முடிவு செய்துடுவாரே !"

------------------------------------------



"உங்க வீட்டில் அடிக்கடி மேள தாளம் சத்தம் கேட்குதே...அடிக்கடி விசேஷமா?"

"ஹூம்...அடிக்கடி மாமியார் நாட்டுப்பெண் சண்டை நடக்கும்...அந்த சத்தம் வெளியே கேட்க கூடாதுன்னுட்டுதான் இந்த ஏற்பாடு !"

எஸ்.ராமன்
T.Nagar,
Chennai

------------------------------------------



கல்யாண வீட்டுக்கு ஏன் மாட்டையும் கன்றுக்குட்டியையும் கூட்டிட்டு வரமாட்றாங்க?

ஏன்னா கல்யாணம் ஒரு ஆயிரம் காலத்து பயிர், மாடும் கன்றுக்குட்டியும் அத மேஞ்சிடும்

------------------------------------------

இரண்டு பேர் ஒரு Hotel-க்கு போய் ஆலுக்கு நாலு நாலு இட்லி order பன்றாங்க இந்த இட்லிய சாப்பிட்டதும் Food poison ஆகிடுச்சு ஏன்›

ஏன்னா அது நாலு நாள் இட்லி

------------------------------------------

ஒரு பையன் அவனோட 500 ரூபாய் நோட்டையும், 2000 ரூபாய் நோட்டையும் சாக்கடையில போட்டுடான் first எதை எடுப்பான்?

விடை: அவன் First வாந்தி எடுப்பான்.

# வாழ்வு தரும் ஆரோக்கியம்



## சத்தான உணவுகளை குழந்தைகள் சாப்பிட வைக்க...



காய்கறிகள் குழந்தைகளுக்கு ஆற்றலைத் தருகின்றன. காய்கறிகளை சாப்பிடுவது குழந்தைகளை நோய்களில் இருந்து பாதுகாக்கும். காய்கறிகள் குழந்தைகளுக்கு ஆற்றல், வைட்டமின்கள், ஆக்சிஜனேற்றிகள், நார்ச்சத்து மற்றும் தண்ணீரை வழங்குகின்றன. அவை குழந்தைகளை பிற்காலத்தில் இதய நோய், பக்கவாதம் மற்றும் சில புற்றுநோய்கள் உள்ளிட்ட நாள்பட்ட நோய்களிலிருந்து பாதுகாக்க உதவுகின்றன. ஆனால், காய்கறிகள் போன்ற சத்தான உணவுகளை குழந்தைகள் விரும்பிச் சாப்பிட வைப்பது எப்படி? இப்படித்தான்...

உணவு விஷயத்தில் உங்களைப் பார்த்துத்தான் உங்கள் குழந்தை கற்றுக்கொள்கிறது, எனவே குழந்தையை காய்கறிகளை சாப்பிட ஊக்குவிப்பதற்கான சிறந்த வழி, நீங்கள் சாப்பிடுவதையும், அதை ரசித்து ருசிப்பதையும் குழந்தையை பார்க்க வைப்பதாகும்.

குழந்தைகள் நிறைய காய்கறிகளை சாப்பிட ஊக்குவியுங்கள். அவர்களுக்கு நல்ல முன்மாதிரியாக இருங்கள். இந்த விஷயத்தில் விடாமுயற்சியும், பாராட்டும் உதவும்.

குழந்தைகளிடம் சாப்பாட்டை திணிக்கக் கூடாது. அவர்களுக்கு பசிக்கும்போதுதான் உணவு ஊட்ட வேண்டும். புடலங்காய், பீர்க்கங்காய், கத்தரிக்காய், அவரைக்காய் போன்ற காய்களை பெரும்பாலான குழந்தைகள் விரும்புவதில்லை. அவற்றை நறுக்கும்போது வித்தியாசமான முறையில் நறுக்க வேண்டும்.

குழந்தைகளுக்குப் பிடித்தமான விளையாட்டுப் பொருட்களின் வடிவில் காய்கறி இருந்தால் மிகவும் சிறப்பு. காய்கறிகளை வைத்து வேடிக்கையான வடிவங்களை உருவாக்குவது அல்லது சிறு துண்டுகளாக நறுக்கி வித்தியாசமாக பரிமாறினால், குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுவார்கள்.

உங்கள் பிள்ளை ஒரு குறிப்பிட்ட பழம் அல்லது காய்கறியை விரும்பவில்லை என்று ஒருபோதும் முடிவெடுத்துவிட வேண்டாம். அடுத்த முறை நீங்கள் அதை சமைக்கும்போது, அவர்கள் அதை தின்று பார்க்க முயற்சி செய்யலாம். குழந்தைகளின் ரசனைகள் வயதுக்கு ஏற்ப மாறுகின்றன.

சரியான நேரத்துக்கு சாப்பாடு தர வேண்டும். சாப்பிடுவதற்கு ஒன்றரை மணி நேரத்துக்கு முன்பு வரை எந்த நொறுக்குத்தீனியும், குளிர்பானமும் கொடுக்கக் கூடாது. அதிலும், சாக்லேட் போன்ற தீனிகள் கூடவே கூடாது.

உங்கள் குழந்தையை பழம், காய்கறிகளை வாங்க அழைத்துச் செல்லுங்கள். அவர்கள் உங்களுடன் பழங்களையும் காய்கறிகளையும் பார்க்கவும், முகரவும், உணரவும் அனுமதிக்கவும்.

காய்கறிகளை கழுவுவது, அவற்றை எடுத்துவைப்பது போன்ற சிறு சிறு வேலைகளை குழந்தைகளிடம் கொடுத்து ஈடுபடுத்துவது, அவர்கள் உணவை விரும்பி சாப்பிடத் தூண்டும்.

காய்கறி பொரியல், கூட்டு போன்றவற்றை பரிமாறும் போது கூடவே வடகம், அப்பளம் போன்ற எண்ணெயில் பொரித்தவற்றை வைக்கக் கூடாது. அவற்றை எடுத்து உண்டுவிட்டு, காய்கறிகள் வேண்டாம் என்று பிள்ளைகள் தவிர்ப்பார்கள். எனவே அவற்றை தனியாகத் தருவதுதான் நல்லது.

அனைவரும் ஒன்றாக அமர்ந்து உணவு உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்தினால், குழந்தைகளும் உணவை விரும்பிச் சாப்பிடுவார்கள்.

சாப்பிட மறுக்கும் குழந்தைகளை ஒருபோதும் தண்டிக்காதீர்கள். எதையாவது சொல்லி பயம் காட்டாதீர்கள். அது குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சியை பாதிக்கும். வற்புறுத்தி உங்கள் குழந்தையை சாப்பிட வைக்க நினைப்பது தவறு. அது அவர்களுக்கு சாப்பாட்டின் மீதான கொஞ்ச நஞ்ச ஆசையையும் நீக்கிவிடும். பொறுமையோடு முயற்சி செய்யுங்கள்.

## காலையில் காபி குடித்தால் மரணத்தை தள்ளிப்போடலாம் ஆய்வில் புதிய தகவல்



தினமும் அதிகாலையில் பால் இல்லாத 'பிளாக்' காபி குடிப்பது உடலுக்கு ஆரோக்கியத்தை தருகிறது என்று புதிய ஆய்வில் கண்டு பிடிக்கப்பட்டு உள்ளது. தி ஜர்னல் ஆப் நியூட்ரிஷன் நடத்திய புதிய ஆய்வில், காலையில் காபி குடிப்பதால் இறப்பு அபாயத்தைக் குறைப்பதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது .காபி நுகர்வுக்கும் இறப்பு ஆபத்துக்கும் இடையிலான தொடர்பு, பானத்தில் சேர்க்கப்படும் இனிப்புகள் மற்றும் நிறைவுற்ற கொழுப்பின் அளவைப் பொறுத்து இது மாறுவதாக கண்டறிந்துள்ளனர்.

ஒரு நாளைக்கு 1 முதல் 2 கப் பிளாக் காபி குடிப்பது இறப்பு அபாயத்தையும், இருதய நோயால் ஏற்படும் உயிரிழப்பையும் குறைப்பதாக ஆய்வில் கண்டறியப்பட்டு உள்ளது.

எனினும், அதிக அளவு சர்க்கரை உள்ள காபி குடிப்பது நல்லதல்ல என்றும் கூறப்படுகிறது. குறைந்த அளவு சர்க்கரை சேர்க்கப்பட்ட காபி குடிப்பதால் இறப்புக்கான ஆபத்து 14 சதவீதம் குறைவாக இருப்பதாக ஆய்வில் கூறப்பட்டு உள்ளது.இந்த ஆய்வு, 1999-ம் ஆண்டு முதல் முதல் 2018-ம் ஆண்டு வரையிலான தேசிய சுகாதார மற்றும் ஊட்டச்சத்து பரிசோதனை கணக்கெடுப்பின் புள்ளிவிவரங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.

ஒரு நாளைக்கு குறைந்தது ஒரு கப் காபி குடிப்பதால், எந்த காரணத்தாலும் இறக்கும் அபாயம் 16 சதவீதம் குறைவதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. தினமும் 2-3 கப் குடிப்பவர்களுக்கு இந்த நன்மை 17 சதவீதம் ஆக சற்று அதிகரித்துள்ளது.

இருப்பினும், 3 கப்களுக்கு மேல் குடிப்பது ஆரோக்கியமானது இல்லை என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். காபி குடிப்பதற்கும் புற்றுநோயால் பாதிப்பு ஏற்பட்டு இறப்பதற்கும் எந்த தொடர்பும் இல்லை எனவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்து உள்ளனர்.

## சருமத்திற்கு பளபளப்பு தரும் பழங்கள்



சருமத்திற்கு மாயாஜால அழகை கொடுக்கும் பழம், ஆரஞ்சு.

சரும அரிப்பு, வியர்வை உள்ளிட்ட பாதிப்புக்கு ஆளாகாமல் காக்கும்.

மேலும் படிக்க இயற்கையான முறையிலேயே சருமத்திற்கு பளபளப்பை கூட்டுவதற்கு பழங்கள் உதவி செய்யும். அத்தகைய பழங்கள் பற்றி பார்ப்போம்.

தர்பூசணி

சருமத்திற்கு ஈரப்பதத்தையும், புத்துணர்ச்சியையும் தரும் பழங்களில் தர்பூசணி முக்கியமானது. குறிப்பாக எண்ணெய் பசையுள்ள சருமம், முகப்பரு சருமம் கொண்டவர்கள் இதனை தொடர்ந்து சாப்பிட்டு வரலாம். சருமம் பளபளப்புடன் மின்னத் தொடங்கிவிடும்.

ஆரஞ்சு

சருமத்திற்கு மாயாஜால அழகை கொடுக்கும் பழம், ஆரஞ்சு. அதிலிருக்கும் வைட்டமின் சி மற்றும் ஆன்டி ஆக்ஸிடன்ட்டுகள் சூரிய கதிர்களிடம் இருந்து வெளிப்படும் புற ஊதாக்கதிர்வீச்சுகளில் இருந்து சருமத்தை பாதுகாக்கும். சரும அரிப்பு, வியர்வை உள்ளிட்ட பாதிப்புக்கு ஆளாகாமலும் காக்கும்.

அவகேடோ

இந்த பழத்தில் வைட்டமின்கள் இ, ஏ, சி, கே, பி6, நியாசின், பாந்தோதெனிக் அமிலம், போலட், நார்ச்சத்து உள்ளிட்ட அத்தியாவசியமான சேர்மங்கள் நிறைந்துள்ளன. இவை சருமத்தின் உள்புற வளர்ச்சிக்கு வித்திட்டு சரும அழகை மெருகேற்ற வழிவகை செய்யக்கூடியவை.

எலுமிச்சை

எலுமிச்சை சருமத்திற்கு பளபளப்பு சேர்க்குமா? என்ற எண்ணம் எழலாம். ஆனால் இயற்கையாகவே வைட்டமின் சி நிறைந்துள்ள அவை உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்றவும், சருமத்தை பாதுகாக்கவும் உதவிடும் சக்திவாய்ந்த ஆன்டி ஆக்ஸிடன்ட்டுகளாக செயல்படக்கூடியது.


இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No

8122664699


## குங்குமப்பூவில் குவிந்திருக்கும் நன்மைகள்



'சிவப்பு தங்கம்' என பிரபலமாக அறியப்படும் குங்குமப்பூ, உலகிலேயே மிகவும் மதிப்பு வாய்ந்த மசாலாப் பொருளாகும். இது, குரோகஸ் சட்டிவஸ் எனப்படும் மலரில் இருந்து கிடைக்கிறது.

நமக்கு தெரிந்த இந்த குங்குமப்பூ, குரோகஸ் பூக்களின் உலர்ந்த ஆரஞ்சு-சிவப்பு சூலகமுடி ஆகும். குங்குமப்பூ செடி, மத்திய தரை கடல் பகுதிகளில் தோன்றியதாக நம்பப்படுகிறது.

குங்குமப்பூவில் இரும்புச்சத்து அதிகமாக இருக்கிறது. எனவே இது நோய் எதிர்ப்புசக்தியை அதிகரிக்கும். கர்ப்பிணிகளுக்கு குங்குமப்பூவை ஏன் தருகிறார்கள் தெரியுமா?

குங்குமப்பூவுக்கும் சிவப்பு நிறத்துக்கும் தொடர்பே கிடையாது. பாலில் குங்குமப் பூவைப் போடும்போது பாலின் நிறம் மாறுகிறது என்பதற்காக, அதைச் சாப்பிடுவதால் குழந்தையும் அந்த நிறத்தில் பிறக்கும் என்பது அர்த்தமில்லை. இது முற்றிலும் தவறான நம்பிக்கை.

ஆனால், குங்குமப்பூவுக்கு ஒரு வாசனைப் பொருளாக நிறைய மருத்துவ குணங்கள் உள்ளன. குறிப்பாக, இது உடலுக்கு குளிர்ச்சி தரக்கூடியது.

இனிப்புச் சுவையுள்ள நறுமணப் பொருட்களான குங்குமப்பூ, அதிமதுரம் போன்றவை குழந்தையின் வளர்ச்சிக்கு துணைபுரியக் கூடியவை. குங்குமப்பூ, ரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்வதால் மனஅழுத்தம் குறையும். எனவேதான், கர்ப்பிணிப் பெண்கள் நல்ல மனநிலையில் இருக்க குங்குமப் பூவை எடுத்துக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இப்படி பல காரணங்களுக்காகவே, கருவுற்ற பெண்ணுக்கு குங்குமப்பூ, அதிமதுரம் போன்றவற்றை வழங்கும் சடங்கு இன்றும் பல இடங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

குங்குமப்பூவை உரசி ஒரு டேபிள் ஸ்பூன் தண்ணீர் விட்டு சிறிது நேரம் ஊறவிடவும். குங்குமப் பூவின் நிறம் முழுக்க நீரில் ஊறியதும் சிறிது வெண்ணெய் கலந்து நன்றாக குழைக்கவும். இந்த கலவையை தினமும் பூசி வர, உதடுகள் செவ்வாழை நிறம் பெறும். உதடுகளின் வறட்சி இருந்த இடம் தெரியாமல் ஓடிவிடும். முகத்தில் உள்ள கரும்புள்ளிகளும் மறைந்து விடும்.



குங்குமப்பூவை அதிக அளவில் எடுத்துக்கொண்டால் சிலருக்கு வாந்தி, மயக்கம், வயிற்றுப்போக்கு ஏற்படலாம். அதனால் குறைவான அளவு எடுத்துக் கொள்வது நல்லது.

குங்குமப்பூ உபயோகப்படுத்தும் முறை:

குங்குமப்பூவை சிறிதளவு சூடான பாலில் 10 நிமிடங்கள் ஊறவைத்து கையால் நசுக்கிவிட்டு பாலோடு கலந்து குடிக்கலாம்.

குங்குமப்பூவை பொடி செய்யும் முறை:

ஒரு கனமான வாணலியை அடுப்பில் வைத்து சூடாக்கவும். நன்கு சூடானதும் அடுப்பை அணைத்து விடவும். அந்த வாணலியில் குங்குமப்பூவை போட்டு வைக்கவும். ஓரிரு நிமிடங்கள் கழித்து கையால் நசுக்கி பொடி செய்யவும். இதை ஒரு சிறிய டப்பாவில் போட்டு வைத்து தேவைப்படும்போது பயன்படுத்தலாம்.

## தங்கச்சப்பரத்தில் எழுந்தருளி வீதியுலா



திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் மாசித் திருவிழாவை முன்னிட்டு 7-ம் நாளான நேற்று சுவாமி சிகப்பு சாத்தி கோலத்தில் தங்கச்சப்பரத்தில் எழுந்தருளி வீதியுலா வந்தார்.

## மாசி மண்டலத்திருவிழா



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் மாசி மண்டலத்திருவிழா-2026-27.02.2026 காலை சுவாமி, அம்பாள் தங்கசப்பரம் நும் கேள்வர் பாகத்தும், அந் நான் மறை எனும் நூல் இடத்தும், கொங்கு ஏய் பொகுட்டுக் கமல ஆலயத்தும், குடி கொண்ட நீ எங்கே இருக்கினும் நாய் அடியேனுக்கு இடர் வரும் போது அங்கே வெளிப்படுவாய்! மதுராபுரி அம்பிகையே! !-குலசேகர பாண்டியன் அருளிய மதுராபுரி அம்பிகை மாலை

சொக்கே நின் தாளே துணை

## ஸ்ரீ வாசவி அம்மன் ஜென்ம நட்சத்திரம் முன்னிட்டு அன்னதானம் வழங்குதல்




**கடலூர், பிப்.28:**

கடலூர் மாவட்டம் சேத்தியாதோப்பு ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் ஸ்ரீவாசவி அம்மனின் ஜென்ம நட்சத்திரமான புனர்பூச நட்சத்திரத்தில் நேற்று 200 நபர்களுக்கு மேல் அன்னதானம் வழங்கப்பட்டது. உபயதாரர்:ஆர்ய வைஸ்ய சமூகத்தினர் சேத்தியாத்தோப்பு.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**




## சென்னக்கேசவர் ராமர், குலசேகர ஆழ்வார்



சென்னக்கேசவர் ராமர், குலசேகர ஆழ்வார்

## மீனாட்சி அம்மன், சுந்தரேசுவரர் திருக்கல்யாணம்



ராஜபாளையம் சொக்கர் கோவில் மாசி மக பிரம்மோற்சவத்தில் மீனாட்சி அம்மன், சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் நேற்று நடந்தது.

## திருவாரூர் அரசு போக்குவரத்துக்கழக பணிமனையில் ஹோமம்



அரசு பேருந்துகள் விபத்துகளை தடுக்கும் வகையில் திருவாரூர் அரசு போக்குவரத்துக்கழக பணிமனையில் நேற்று ஹோமம் நடந்தது.

## புறநகர் அரசு மருத்துவமனை



தென் சென்னையின் புறநகர் பகுதி மக்களுக்கு பேருதவியாக சோழிங்கநல்லூரில் ரூ.66.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புறநகர் அரசு மருத்துவமனையை துணை முதல்வர் உதயநிதி திறந்து வைத்தார்.

## ஜெயலலிதா பிறந்தநாள் விழா



திண்டுக்கல்லில் நடந்த ஜெயலலிதா பிறந்தநாள் விழாவில் முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் பேசினார்.

## புதிதாக இ -சேவை மைய கட்டிடம் திறப்பு



நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி அலுவலகத்தில் ரூ 14 லட்சத்தில் புதிதாக இ -சேவை மைய கட்டிடத்தை எம். ஆர். காந்தி எம்எல்ஏ திறந்து வைத்தார்.

## நூல் வெளியீட்டு விழா



சென்னையில் பாஜக பிரமுகர செய்யது இப்ராகிம் எழுதிய “பாரதம் 2014க்கு முன் & பின் இஸ்லாமியர்களின் நிலை” என்ற நூல் வெளியீட்டு விழாவில் பாஜக தலைவர் நயினார்நாகேந்திரன், சுதாகர்ரெட்டி, தமிழிசை, ஹண்டே உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## நாட்டு நல பணி திட்டம் முகாமில் மரக்கன்று நட்டனர்



நாகர்கோவில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி சார்பில் ஆசாரிப்பள்ளம் அனந்த நகர் பகுதியில் நடந்த நாட்டு நல பணி திட்டம் முகாமில் மரக்கன்று நட்டனர்.

## எம்எல்ஏ ஓம்சக்திசேகர் திமுகவில் சேர்ந்தார்



புதுச்சேரி முன்னாள் எம்எல்ஏ ஓம்சக்திசேகர், நேற்று முதல்வர் ஸ்டாலினை சந்தித்து, ஓபிஎஸ் முன்னிலையில் திமுகவில் சேர்ந்தார்.

## மாசிமக தேர்த்திரு விழா திருக்கொடியேற்றம்



சேலம் மாவட்டம் மேச்சேரி பத்ரகாளியம்மன் கோயிலில் மாசிமக தேர்த்திரு விழா திருக்கொடி யேற்றம் நிகழ்ச்சி நடந்தது.

## வெல்லும் தமிழ்ப்பெண்கள் வீடு வீடாக பரப்புரை



சென்னையில் திமுக சார்பில் வெல்லும் தமிழ்ப்பெண்கள் வீடு வீடாக பரப்புரையில் மேயர் பிரியா பங்கேற்றார்.

## தையல் பயிற்சி முடித்த பெண்களுக்கு தொல்.திருமாவளவன் சான்றிதழ் வழங்கினார்



மதுரை திருநகரில் நேற்று நடந்த மகாதமா காந்தியடிகள் நாராயண குரு சந்திப்பு நூற்றாண்டு விழாவில் தையல் பயிற்சி முடித்த பெண்களுக்கு விசிக தலைவர் தொல்.திருமாவளவன் எம்பி சான்றிதழ் வழங்கினார்.

## அதிமுக ஆலோசனை கூட்டம்



ராஜபாளையத்தில் அதிமுக ஆலோசனை கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி பேசினார்.

## விருப்ப மனு



சங்கரன்கோவில் தொகுதியில் போட்டியிட முன்னாள் எம்எல்ஏ முத்துச்செல்வி, அண்ணா அறிவாலயத்தில் நேற்று விருப்ப மனு வழங்கினார்.

## மாணவ, மாணவிகளுக்கு கடனுதவி



நாகர்கோவில் சுங்காங்கடை வின்ஸ் பொறியியல் கல்லூரியில் நடந்த கல்விக் கடன் முகாமில் மாணவ, மாணவிகளுக்கு பத்மநாபபுரம் சப்கலெக்டர் வினய்குமார் மீனா கடனுதவி வழங்கினார்.

## கன்னியாகுமரி கலெக்டர் அழகு மீனாவுக்கு முதல்வர் ஸ்டாலின் சான்றிதழ்



பெண் குழந்தைகளின் பாலின எண்ணிக்கையை உயர்த்துவதற்காக சிறப்பாக செயலாற்றிய கன்னியாகுமரி கலெக்டர் அழகு மீனாவுக்கு முதல்வர் ஸ்டாலின் சான்றிதழ் வழங்கி கவுரவித்தார். உடன் அமைச்சர் கீதாஜீவன், தலைமைச் செயலாளர் முருகானந்தம், சமூகநலத்துறை முதன்மைச் செயலாளர் ஜெயஸ்ரீ, இயக்குநர் சங்கீதாஉடன் உள்ளனர்.

## வீரர், வீராங்கனைகளுக்கு காசோலை



தேசிய அளவிலான நரம்பியல்சார் மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டு போட்டிகளில், பதக்கம் வென்ற 29 வீரர், வீராங்கனைகளுக்கு - தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியில் இருந்து ரூ 24 லட்சத்திற்கான காசோலைகளை துணை முதல்வர் உதயநிதி நேற்று நேரில் வழங்கி பாராட்டினார்.

## பணி நியமன ஆணை



தஞ்சாவூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக வளாகத்தில் நேற்று நடந்த முகாமில், 50-க்கும் மேற்பட்டோருக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

## மத்திய மின்சார பேருந்து பணிமனை



சென்னை பல்லவன் இல்லத்தில் ரூ.52.03 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள மாநகர போக்குவரத்துக் கழகத்தின் மத்திய மின்சார பேருந்து பணிமனையை நேற்று துணை முதல்வர் உதயநிதி திறந்து வைத்தார். மேலும், ரூ. 248.25 கோடி மதிப்பில் 100 மின்சார குளிர்சாதன பேருந்துகள் உட்பட 145 புதிய தாழ்தள மின்சார பேருந்துகள், ரூ.30.50 கோடி மதிப்பில் அரசு விரைவு போக்குவரத்து கழகத்திற்கு 49 அதிநவீன சொகுசு பேருந்துகள், ஆகியவற்றின் சேவையையும் கொடியசைத்து தொடங்கி வைத்தார். அமைச்சர்கள் சிவசங்கர், சேகர்பாபு, மேயர் பிரியா மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

## திமுக பரப்புரை கூட்டம்



திருமங்கலத்தில் திமுக பரப்புரை கூட்டத்தில் திருச்சி சிவா எம்.பி. பேசினார்.

## காங்கிரஸ் கட்சியினர் பேரணி



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் பெயர் மாற்றத்தை கண்டித்து ஊட்டியில் காங்கிரஸ் கட்சியினர் பேரணியாக வந்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

## காஞ்சிபுரத்தில் அமைதி ஊர்வலம்



இந்திய கம்யூ. மூத்த தலைவர் நல்லகண்ணு மறைவுக்கு இரங்கல் தெரிவித்து காஞ்சிபுரத்தில் அமைதி ஊர்வலம் நடந்தது.

# சுற்றுலா: இயற்கை எழில் கொஞ்சும் தெலுங்கானாவில் பார்க்க வேண்டிய 5 இடங்கள்!



தெலுங்கானா மாநிலத்தில் நாம் பார்க்க வேண்டிய இடங்கள் பல உண்டு. அவற்றில் மிக அற்புதமான இயற்கை எழில் கொஞ்சும் ஐந்து இடங்களை பற்றி இப்பதிவில் பார்ப்போம்.

1. ஆலம்பூர்

தெலுங்கானாவில் ஏராளமான கோவில்கள் உள்ள இந்த இடம், மத முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த இடம் ஹைதராபாத்தில் இருந்து 218 கிமீ தொலைவிலும், கர்னூலில் இருந்து 22 கிமீ தொலைவிலும் உள்ளது. ஆலம்பூர் என்பது புனித யாத்திரை நகரமான ஸ்ரீசைலத்தின் மேற்கு வாசல். ஜோகுலாம்பா கோயில், நவபிரம்ம கோயில்கள் மற்றும் சங்கமேஸ்வரர் கோயில் ஆகியவை இங்கு காணக்கூடிய கோயில்களாகும்.

2. கம்மம்

தெலுங்கானாவின் சிறந்த சுற்றுலாத்தலங்களில் ஒன்றாகக் கருதப்படும் இந்த நகரம் ஹைதராபாத்தில் இருந்து 198 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இந்த இடம் அதன் கோட்டைகள் மற்றும் சரணாலயங்களுக்கு பிரபலமானது. ஒரு காலத்தில் காகத்தியர்கள், முசுனூரி நாயக்கர்கள் மற்றும் வெலமா மன்னர்கள், ரெட்டி மன்னர்கள், குதுப் ஷாஹி மற்றும் ஹைதராபாத் நிஜாம்களின் ஆட்சியின் கீழ் இருந்தது. இதன் விளைவாக, இந்த இடம் கட்டிடக்கலை அதிசயங்களின் களஞ்சியமாக உள்ளது.

3. மகபூப் நகர்

இந்த இடம் ஒரு காலத்தில் சாளுக்கியர்கள், பஹ்மானிகள், விஜயநகர் மற்றும் கோல்கொண்டா நவாப்களின் பல பெரிய மன்னர்களால் ஆளப்பட்டது. இங்கு நடந்த பல போர்களுக்கு இந்த இடம் பெயர் பெற்றது. கிருஷ்ணா மற்றும் துங்கபத்ரா நதிகள் இப்பகுதியில் பாய்கின்றன, இது ஒரு பிரபலமான சுற்றுலா நகரமாக உள்ளது. ஆலம்பூர், பில்லாலமரி, ஜூராலா அணை, கோயில்கொண்டா கோட்டை, கடவால் கோட்டை, கொல்லப்பூர், சோமால்சியா போன்ற பல சுற்றுலாத் தலங்கள் இங்கு உள்ளன. அனைத்து சுற்றுலாத் தலங்களையும் ஓரிரு நாட்களில் சுற்றிப்பார்க்கலாம். இது மகபூப்நகரை சிறந்த தெலுங்கானா சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக மாற்றுகிறது.

4. அனந்தகிரி

இந்த இடம் ஹைதராபாத்தில் இருந்து வெறும் 79 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இவ்வுலக வாழ்க்கையிலிருந்து விடுபட முக்கியமானதாக மாறியுள்ளது. அனந்தகிரி காடுகளில் 400 ஆண்டுகளுக்கு முன்பு நிஜாம் நவாப்களால் கட்டப்பட்ட அனந்த பத்மநாப ஸ்வாமி கோவில் உள்ளது. கோயிலில் இருந்து சற்று தொலைவில் ஏராளமான பாழடைந்த கட்டிடங்களால் சூழப்பட்ட ஏரியும், சிவன் கோயிலும் உள்ளது. அனந்தகிரியின் பிரதான கோயில் குகையைச் சுற்றி கட்டப்பட்டுள்ளது.

5. மேடக் கோட்டை

தெலுங்கானாவின் சுற்றுலாத் தலங்களைப் பற்றிப் பேசும்போது, மேடக் கோட்டையைக் குறிப்பிட வேண்டும். இது மேடக் பேருந்து நிலையத்திலிருந்து 2.3 கிமீ தொலைவிலும், ஹைதராபாத்தில் இருந்து 95 கிமீ தொலைவிலும் அமைந்துள்ளது. தெலுங்கானாவில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் இதுவும் ஒன்று. இது ஒரு மலையின் உச்சியில் அமைந்துள்ள ஒரு மாபெரும் கட்டிடக்கலை. இதை அடைய ஒருவர் 500 படிகள் ஏறவேண்டும்.

இந்த கோட்டை இந்து மற்றும் இஸ்லாமிய கட்டிடக்கலை பாணிகளின் கலவையாகும். நுழைவாயிலில், காகத்தியர்களின் இரட்டைத்தலை கொண்ட கந்தப்பெருந்தத்தை காணலாம். கோட்டையின் மகிமை முன்பு இருந்ததுபோல் இல்லை. அது இப்போது பாழடைந்த நிலையில் உள்ளது. கோட்டையின் உச்சியில் இருந்து, நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளின் அழகிய காட்சியைப் பெறலாம்.



## வேலைவாய்ப்பு கார்னர்

### அழைக்கிறது ரயில்வே நிறுவனம்

இந்திய ரயில்வேயின் கீழ் செயல்படும் ரயில்வே கட்டுமான நிறுவனத்தில் (இர்கான்) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

வொர்க் இன்ஜினியர் பிரிவில் எலக்ட்ரிக்கல் 7, சிவில் 5, சிக்னல், டெலிகம்யூனிகேசன் 1 என மொத்தம் 13 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பி.இ., / பி.டெக்.,

வயது: 18-30 (13.3.2026ன் படி)

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, நேர்முகத்தேர்வு.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: இல்லை

கடைசிநாள்: 13.3.2026

விவரங்களுக்கு: ircon.org

### தேசிய கட்டுமான நிறுவனத்தில் இன்ஜினியர் வாய்ப்பு




பொதுத்துறையை சேர்ந்த தேசிய கட்டட கட்டுமான நிறுவனத்தில் (என்.பி.சி.சி., ) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஜூனியர் இன்ஜினியர் 35 (சிவில் 20, எலக்ட்ரிக்கல் 10, மெக்கானிக்கல் 5), அசிஸ்டென்ட் மேனேஜர் 7, புராஜக்ட் எக்சிகியூட்டிவ் 10 உட்பட மொத்தம் 59 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: டிப்ளமோ/பி.இ.,/ பி.டெக்.,/ எம்.பி.ஏ., / சி.ஏ.,வயது: பிரிவு வாரியாக மாறுபடும்.

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, நேர்முகத்தேர்வு.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 1000. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை. கடைசிநாள்: 6.3.2026

விவரங்களுக்கு: nbccindia.in

## கவுரவ விரிவுரையாளர்களுக்கு ரூ. 5,000 ஊதிய உயர்வு : அமைச்சர்

**சென்னை, பிப்.28:**

தமிழகத்தில் அரசு கலை, அறிவியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் பணிபுரியும் கவுரவ விரிவுரையாளர்களுக்கு மாதம் ரூ. 5,000 ஊதிய உயர்வு வழங்கப்படும் என்று உயர்கல்விதுறை அமைச்சர் கோவி. செழியன் வியாழக்கிழமை அறிவித்தார். தஞ்சாவூர் மாவட்டம், திருவிடை மருதூரில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் கூறியதாவது: "கவுரவ விரிவுரையாளர்களுக்கு 2016-இல் இருந்து உயர்த்தப்படாமல் இருந்த ஊதியம் 2022-இல் ரூ. 15,000-லிருந்து ரூ. 20,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. பின்னர், மீண்டும் 2 ஆண்டுகளிலேயே (2024-ல்) ரூ. 25,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. தற்போது மீண்டும் ரூ. 25,000-லிருந்து ரூ.30,000-ஆக உயர்த்திட தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. அதன்படி, கவுரவ விரிவுரையாளர்கள் 2026 மார்ச் 1 ஆம் தேதி முதல் மாதம் ரூ. 30,000 ஊதியம் பெற லாம்.

அதேபோல் அரசு பாலிடெக்னிக் தற்காலிக விரிவுரையாளர்களுக்கு ரூ. 20,000-லிருந்து ரூ. 25,000-ஆக உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு, ஆண்டிற்கு ரூ. 53 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கவுரவ விரிவுரையாளர்கள் 8,741 பேர், அரசு பொறியியல் கல்லூரி தற்காலிக உதவி பேராசிரியர்கள் 319 பேர் மற்றும் அரசு பாலிடெக்னிக் கல்லூரி தற்காலிக விரிவுரையாளர்கள் 586 பேர் ஆக மொத்தம் 9,646 தற்காலிக ஆசிரியர்கள் இதன் மூலம் பயனடைவர்." இவ்வாறு அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்தார். திருவிடைமருதூர் பகுதியில் தொடங்கப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு "முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவிடைமருதூர்" என பெயர் சூட்டப்படும் எனவும் கோவி. செழியன் அறிவித்தார்.

## மாநிலங்களவைத் தேர்தல் : வேட்புமனுத் தாக்கல் துவங்கியது!

**சென்னை, பிப். 28:**

தமிழ்நாட்டில் காலியாகவுள்ள 6 மாநிலங்களவை உறுப்பினர் பதவிகளுக்கான வேட்புமனு தாக்கல் வியாழக்கிழமை தொடங்கியது. மு. தம்பிதுரை, ஜி.கே. வாசன், என்.ஆர். இளங்கோ, கனிமொழி சோமு, திருச்சி சிவா, அந்தியூர் பி. செல்வராசு ஆகிய 6 பேரின் மாநிலங்களவை பதவிக்காலம் ஏப்ரல் 2-ஆம் தேதியுடன் முடிவடைகிறது. இந்த 6 இடங்கள் உட்பட நாடு முழுவதும் காலியாகும் 37 மாநிலங்களவை இடங்களுக்கு மார்ச் 16 அன்று தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், வேட்புமனுத் தாக்கல் வியாழக்கிழமை (பிப். 26) துவங்கியது. முதல் நாளில் அரசியல் கட்சி சார்பில் யாரும் மனு தாக்கல் செய்யவில்லை. சுயேட்சை வேட்பாளர் பத்மராஜன் சென்னை தலைமை செயலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்தார். அவர் 252-ஆவது முறையாக வேட்புமனுவைத் தாக்கல் செய்துள்ளார். வேட்புமனு தாக்கலுக்கு மார்ச் 5 கடைசி நாளாகும். திரும்பப் பெறுவதற்கு மார்ச் 9 கடைசி நாளாகும். தற்போதுள்ள சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் திமுக சார்பில் 4 பேரும், அதிமுக சார்பில் 2 பேரும் போட்டியின்றித் தேர்வு செய்யப்படலாம்.

## ஜெயலலிதா வாழ்நாள் முழுவதும் எதிர்த்த கட்சியில் ஓபிஎஸ்: தமிழிசை கடும் விமர்சனம்!

**சென்னை, பிப்.28:**

ஜெயலலிதா தன் வாழ்நாள் முழுவதும் எதிர்த்த கட்சியில் ஓபிஎஸ் இணைந்திருப்பதாக பாஜக மூத்த தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் கடுமையாக விமர்சித்துள்ளார்.

அதிமுகவில் இருந்து விலகிய, முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் இன்று(பிப். 27) முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார். தமிழ்நாட்டின் மூன்று முறை முதலமைச்சராக இருந்த ஒருவர், வேறு கட்சியில் இணைவது இதுவே முதல்முறையாகும்.

ஓ. பன்னீர்செல்வத்துடன் அவரது மகனும் அதிமுக முன்னாள் எம்பியுமான ரவீந்திரநாத், உசிலம்பட்டி அதிமுக எம்எல்ஏ ஐயப்பன் ஆகியோரும் திமுகவில் இணைந்தனர்.

ஓபிஎஸ் திமுகவில் இணைந்தது குறித்து பாஜக மூத்த தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் தனது எக்ஸ் பக்கத்தில்,

"வரும் சட்டமன்றத் தேர்தலில் நிச்சயமாக திராவிட முன்னேற்ற கழகம் தோல்வியை சந்திக்கப் போகிறது என்பது இன்று காலை உறுதி செய்யப்பட்டு இருக்கிறது.

எப்பொழுது... ஓபிஎஸ் தனிப்பட்ட முறையில் அவர் மீது எவ்வளவு மரியாதை இருந்தாலும்.. தனது வாயால் மீண்டும் திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சிக்கு வர வேண்டும் என்று சொன்னது மட்டுமல்லாமல் தாய் கழகத்திற்கு வந்ததைப் போல உணர்கிறேன் என்று சொன்னது தாய்மையை கொச்சைப்படுத்துவதாகத்தான் நான் எடுத்துக்கொள்கிறேன்....

ஜெயலலிதா தன் வாழ்நாள் முழுவதும் எந்த கட்சியை எதிர்த்தாரோ, எந்த கட்சி ஒரு பெண் என்றும் பாராமல் அவரை சட்டமன்றத்தில் மிக மோசமாக நடத்தினார்களோ, அந்த கட்சிக்கு சென்று தன்னை இணைத்துக் கொண்டது மட்டுமல்லாமல் தாய் கழகம் இணைந்ததைப் போல ஒரு உணர்கிறேன் என்று சொன்னால் அது தமிழகத்தில் உள்ள யாரும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்....

இன்னும் சொல்லப்போனால் திமுக எந்த அளவில் தோல்வி பயத்தில் இருக்கிறது என்றால் இவர்களைப் போன்றவர்களை சேர்த்துக்கொண்டு அவர்கள்தான் திமுகவிற்கு மிகப்பெரிய பலம் என்று முதலமைச்சர் ஸ்டாலின் சொல்கிறார் என்றால் திமுகவின் பரிதாப நிலையைதான் எண்ண வேண்டி இருக்கிறது...

ஓபிஎஸ்ஸின் திமுகவின் சேர்க்கை திமுக வெற்றிக்கு மிகப்பெரிய பாதகமாக அமையும்" என்று பதிவிட்டுள்ளார்.

## 234 தொகுதிகளிலும் மார்ச் 1ல் த.வெ.க. செயல் வீரர்கள் கூட்டம்: என்.ஆனந்த் அறிவிப்பு

**சென்னை, பிப்.28:**

தமிழக வெற்றிக் கழகத்தின் பொதுச் செயலாளர் என்.ஆனந்த் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு வரும் 1ம் தேதி (1.3.2026) ஞாயிற்றுக்கிழமையன்று காலை 10 மணி முதல், 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் கழகச் செயல் வீரர்கள் கூட்டம் முழுநாள் நிகழ்வாக நடைபெற உள்ளது.





இந்தக் கூட்டத்தில், தேர்தல் பரப்புரைப் பணிகள், வாக்குச் சாவடி முகவர்களின் பணிகள் உள்ளிட்ட கழகத்தின் அடுத்த கட்டச் செயல்பாடுகளை முன்னெடுப்பது குறித்து, கழகத் தலைவர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்தது போல, கலந்தாலோசிக்கப்பட உள்ளது.

தேர்தல் கண்காணிப்பாளர்கள், இணைக் கண்காணிப்பாளர்களுடன் இணைந்து மாவட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்பில், அந்தந்த மாவட்டங்களைச் சார்ந்த தொகுதிகளில் இந்தக் கூட்டம் நடைபெற உள்ளது.

மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஏற்பாட்டில் நடைபெற உள்ள இக்கூட்டங்களில் அந்தந்தச் சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த பல்வேறு அணியினர் உள்ளிட்ட கழகத்தின் அனைத்து நிர்வாகிகள் மற்றும் கழகச் செயல்வீரர்கள் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## 1,200 ஆண்டுகள் பழமை வாய்ந்த பல்லவர் கால கொற்றவை சிற்பங்கள் கண்டெடுப்பு





**விழுப்புரம், பிப்.28:**

விழுப்புரத்தை சேர்ந்த வரலாற்று ஆய்வாளர் செங்குட்டுவன், மரக்காணம் அருகே உள்ள குரும்பரம், செஞ்சி அருகே உள்ள மேல்சித்தாமூர் பகுதிகளில் களஆய்வில் ஈடுபட்டார். அப்போது பல்லவர் காலத்தை சேர்ந்த கொற்றவை சிற்பங்கள் கண்டறியப்பட்டன. இதுகுறித்து அவர் கூறியதாவது:-

குரும்பரம் வனப்பகுதிக்கு அருகில் உள்ள விளைநிலத்தில் பலகைக்கல்லால் ஆன கொற்றவை சிற்பம் கண்டெடுக்கப்பட்டது. 8 கரங்களுடன் எருமை தலை மீது நின்றிருக்கிறார். அழகான முக அமைப்பு, ஆடை அணிகலன்களுடன் கொற்றவை காட்சி தருகிறார். முன் வலது கரம் அபய முத்திரையுடனும், இடதுகரம் தொடை மீது வைத்த நிலையிலும் காணப்படுகின்றன. சிற்பத்தின் இடதுபக்கம் கொற்றவையின் வாகனமான மான் நிற்கிறது.

செஞ்சி அருகே மேல்சித்தாமூர் கிராமத்தில் சமண கோவில்கள், சமணர் மடம் அமைந்துள்ளன. இங்குள்ள ஏரிக்கரை மற்றும் சுடுகாட்டிற்கு மத்தியில் கொற்றவை சிற்பம் அமைந்துள்ளது. முன் 2 கரங்களும் தொடை மீது வைத்த நிலையிலும், பின் வலக்கரங்களில் நீண்ட சூலாயுதம், பிரயோக சக்கரம் காணப்படுவதும் சிறப்பிற்கு உரியதாகும். சிற்பத்தின் மேல் இடது மூலையில் சிறிய மான் இடம்பெற்றுள்ளது. இடதுகால் நேராக நிற்க வலது காலை சற்று மடக்கியும், மெலிந்த இடையுடனும் கொற்றவை நளினமாக நிற்கிறார்.

இந்த 2 சிற்பங்களும் பல்லவர் காலத்தை (கி.பி. 8-ம் நூற்றாண்டு) சேர்ந்தவை ஆகும். 1,200 ஆண்டுகள் பழமை வாய்ந்தவை. விழுப்புரம் மாவட்டத்தில் ஏற்கனவே பல இடங்களில் கொற்றவை சிற்பங்கள் கண்டறியப்பட்டுள்ளன. கொற்றவை வழிபாடு இந்த மாவட்டத்தில் சிறப்பாக இருந்திருக்கிறது. ஆயிரம் ஆண்டுகளை கடந்து இன்றும் தொடர்கிறது என்பதற்கு குரும்பரம், மேல்சித்தாமூர் சிற்பங்கள் எடுத்துக்காட்டுகளாக இருக்கின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

## அய்யா வைகுண்டசுவாமி பிறந்தநாள்; மார்ச் 4ம் தேதி உள்ளூர் விடுமுறை

**சென்னை, பிப்.28:**

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

தூத்துக்குடி மாவட்டம், அய்யா வைகுண்டசுவாமி 194வது பிறந்தநாள் விழா மாசி மாதம் 20-ம் தேதி (4.3.2026) அன்று நடைபெற உள்ளதை முன்னிட்டு 4.3.2026, புதன்கிழமை தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் உள்ளூர் விடுமுறையாக அறிவிக்கப்படுகிறது. எனினும் அத்தியாவசிய பணிகள்/ பணியாளர்களுக்கு இந்த விடுப்பு பொருந்தாது என தெரிவிக்கப்படுகிறது.

இது செலாவணி முறிச் சட்டத்தின்படி (Negotiable Instruments Act 1881) பொது விடுமுறை நாளல்ல எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த விடுமுறைக்குப் பதிலாக 14.3.2026 இரண்டாம் சனிக்கிழமை அலுவலக நாளாக அறிவிக்கப்படுகிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கட்சிகளின் தேர்தல் செலவுகளுக்கு கட்டுப்பாடு: மத்திய அரசு பதிலளிக்க உச்சநீதிமன்றம் நோட்டீஸ்

**புதுடெல்லி, பிப்.28:**

தேர்தல்களில் கட்சிகள் மேற்கொள்ளும் செலவுகளுக்கு கட்டுப்பாடு விதிக்கக்கோரி தாக்கல் செய்த மனு மீது பதிலளிக்க மத்திய அரசு, இந்திய தேர்தல் ஆணையத்துக்கு உச்சநீதிமன்றம் வியாழக்கிழமை நோட்டீஸ் பிறப்பித்தது.





இதுதொடர்பாக பொது நல மனுவுக்கான மையம் மற்றும் காமன் காஸ் ஆகிய அரசு சாரா அமைப்புகள் (என்ஜிஓ) உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தன. அதில் கூறப்பட்டிருப்பதாவது: தேர்தலின்போது வேட்பாளர் மேற்கொள்ளும் செலவுகளுக்கு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951, பிரிவு 77 (1)-இன்கீழ் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் கட்சிகளுக்கான செலவினங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயிக்கப்படவில்லை. இது தேர்தலில் அனைவருக்கும் சமமான போட்டி களத்தை ஏற்படுத்துவதற்கு மாறாகவும் அரசமைப்புச் சட்டப்பிரிவு 14-க்கு எதிராகவும் உள்ளது.

அதேபோல் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடும் நட்சத்திரப் பேச்சாளர்களுக்கான போக்குவரத்துச் செலவுகளை வேட்பாளரின் செலவுக் கணக்கில் சேர்ப்பதற்கு விலக்கு அளிக்கும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951, பிரிவு 77 (1), விளக்கம் 1(ஏ) அரசமைப்புச் சட்டப்பிரிவுகள் 14 மற்றும் 19 (1) (ஏ) ஆகியவற்றை மீறுகிறது. எனவே, இந்த விளக்கத்தை ரத்து செய்ய வேண்டும். வேட்பாளருக்கு மட்டுமே தேர்தல் செலவுகளுக்கு உச்சவரம்பு நிர்ணயித்துவிட்டு அரசியல் கட்சிகளுக்கு அதில் விலக்களிக்கப்படுவது தேர்தல் நடைமுறையை மெதுவாக சீர்குலைக்கும் நடவடிக்கையாக மாறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மனுவை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் மற்றும் நீதிபதிகள் ஜயமால்ய பாக்சி, விபுல் எம்.பஞ்சோலி ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்தது.

அப்போது இந்த மனு மீது ஏப்ரல் 27-ஆம் தேதிக்குள் மத்திய அரசு மற்றும் இந்திய தேர்தல் ஆணையம் பதிலளிக்க நீதிபதிகள் அமர்வு நோட்டீஸ் பிறப்பித்தது.

# க்ரைம் கார்னர்

## மாணவரிடம் துப்பாக்கி முனையில் வழிப்பறி: 7 பேர் கைது


**புதுடெல்லி, பிப்.28:**

கிரிப்டோகரன்சி முதலீடு என்ற பெயரில் கல்லூரி மாணவரை ஏமாற்றி துப்பாக்கி முனையில் வழிப்பறியில் ஈடுபட்ட 7 பேர் கைதுசெய்யப்பட்டதாக தில்லி காவல் துறை அதிகாரிகள் வியாழக்கிழமை தெரிவித்தனர்.

இதுதொடர்பாக அதிகாரிகள் கூறியதாவது: துவராகாவில் உள்ள அரசு கல்லூரியில் பி.டெக்., மாணவருக்கு படித்து வரும் உதவித்தொகையாக ரூ.2 லட்சம் கிடைத்துள்ளது. இந்தப் பணத்தை கிரிப்டோகரன்சியில் முதலீடு செய்ய அந்த மாணவர் திட்டமிட்டார். இதுதொடர்பாக சமூகவலைதளங்களில் தேடிய அந்த மாணவருக்கு ஒரு தொடர்புஎண் கிடைத்தது. அதைத்தொடர்பு கொண்ட மாணவருக்கு, கிரிப்டோகரன்சியை தள்ளுபடி விலையில் தருவதாகவும் இது குறித்து சந்திக்கலாம் என்றும் அதில் பேசிய நபர் தெரிவித்தார். இந்நிலையில், பக்சிம் விகார் கிழக்கு மெட்ரோ நிலையம் அருகே அந்த நபரைச் சந்திக்க மாணவரும் அவருடைய இரு நண்பர்களும் கடந்த பிப்.22-ஆம் தேதி காரில் சென்றனர். அப்போது, ஒரு நபர் அவர்களுடைய காரில் ஏறி துப்பாக்கியைக் காட்டி மிரட்டினார். இதைத்தொடர்ந்து, அப்பகுதியில் மறைந்திருந்த சிலர் காரை சுற்றி வளைத்தனர்.

பின்னர், அந்த மாணவரிடமிருந்து ரூ.1.83 லட்சத்தை வழிப்பறி செய்து அங்கிருந்து தப்பித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக அந்த மாணவர் காவல் நிலையத்தில் புகாரளித்தார். இதையடுத்து, சம்பவம் நடைபெற்ற இடத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமராக்களில் பதிவான காட்சிகளை காவல் துறையினர் ஆய்வு செய்தனர். அதன் அடிப்படையில் நரேலா, ரோஹிணி, சதார் பஜாரில் கடந்த செவ்வாய்க்கிழமை சோதனை நடத்திய காவல் துறையினர், வழிப்பறியில் ஈடுபட்ட அமித் ஜெயின் உள்பட 7 பேரை கைதுசெய்தனர்.

## ஒடிசாவில் லஞ்சம் வாங்கும்போது கைதான சுரங்கத் துறை அதிகாரி வீட்டில் கட்டுக்கட்டாக ரூ.4 கோடி பறிமுதல்



**புவனேஸ்வர், பிப்.28:**

ஒடிசா மாநில சுரங்கத் துறை துணை இயக்குநராக பணியாற்றி வருபவர் தேவபிரதா மொகந்தி. நிலக்கரி விற்பனைக்கு லைசென்ஸ் பெற்ற ஒரு வர்த்தகரிடம் கடந்த செவ்வாய்க் கிழமை ரூ.30 ஆயிரம் லஞ்சம் பெற்றுள்ளார். அப்போது விஜிலென்ஸ் அதிகாரிகள் மொகந்தியை கையும் களவுமாகப் பிடித்தனர். உடனடியாக ஒடிசா தலைநகர் புவனேஸ்வரில் உள்ள அவரது அடுக்குமாடி குடியிருப்பு மற்றும் பத்ராக் மாவட்டத்தில் உள்ள அவரது பெற்றோர் வீடுகளில் ஒரே நேரத்தில் விஜிலென்ஸ் அதிகாரிகள் சோதனை நடத்தினர். அப்போது வீட்டு அலமாரிகளில் கட்டுக்கட்டாகப் பணம் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மொத்தம் ரூ.4 கோடி பணத்தை செவ்வாய்க்கிழமை இரவு விஜிலென்ஸ் அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். மேலும், மொகந்தியின் அலுவலக அறை மேசை டிராயரில் ரூ.1.20 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது. அத்துடன் புவனேஸ்வரில் 2 அடுக்கு மாடி கொண்ட வீட்டுக்கான ஆவணங்கள், 130 கிராம் தங்கம் ஆகியவற்றையும் அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இதுவரை பிடிபட்டதிலேயே இதுதான் அதிகபட்ச தொகை என்று விஜிலென்ஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். மொகந்தி மீது ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் அதிகாரிகள் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதற்கு முன்னர் கடந்த 2022-ம் ஆண்டு ஏப்.7-ல் ஒடிசாவின் கஞ்ஜம் மாவட்டத்தில் நீர்ப்பாசன துறை உதவி பொறியாளர் வீட்டில் ரூ.3.4 கோடியை விஜிலென்ஸ் அதிகாரிகள் பறிமுதல் செய்தது தான் அதிகபட்சமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

# நீதிபதி பதவிநீக்க விவகாரம்: விசாரணைக் குழுவின் கால அவகாசம் நீட்டிப்பு

**புதுடெல்லி, பிப்.28:**

நீதிபதி யஷ்வந்த் வர்மா பதவி நீக்க நடைமுறை தொடர்பாக விசாரணை நடத்தி வரும் உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட மூவர் குழுவின் காலஅவகாசம் மேலும் 3 மாதங்களுக்கு நீட்டிக்கப்படுவதாக மக்களவைச் செயலகம் வியாழக்கிழமை தெரிவித்தது.

மேலும், குழு உறுப்பினர் ஒருவர் மாற்றப்பட்டிருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டது.

தில்லி உயர்நீதிமன்ற நீதிபதியாக யஷ்வந்த் வர்மா பதவி வகித்தபோது, அவருடைய அரசு இல்லத்தில் கடந்த ஆண்டு மார்ச் 14-ஆம் தேதி தீ விபத்து ஏற்பட்டது. அப்போது, அங்குள்ள அறையில் பாதி எரிந்த மூட்டைகளில் கட்டுக்கட்டாகப் பணம் இருந்தது கண்டறியப்பட்டது.

இந்த விவகாரம் குறித்து துறை ரீதியாக விசாரணை மேற்கொண்ட உச்சநீதிமன்றம், யஷ்வந்த் வர்மாவை பதவி நீக்கம் செய்யுமாறு, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, பிரதமர் மோடி ஆகியோருக்குப் பரிந்துரைத்தது.

இந்தச் சூழலில், நீதிபதி யஷ்வந்த் வர்மாவை பதவிநீக்க மக்களவை உறுப்பினர்கள் 146 பேர் மற்றும் மாநிலங்களவையைச் சேர்ந்த 62 உறுப்பினர்கள் என மொத்தம் 208 எம்.பிக்கள் சார்பில் நாடாளுமன்றத்தில் நோட்டீஸ் சமர்ப்பிக்கப்பட்டது. மக்களவையில் நீதிபதியின் பதவிநீக்க தீர்மானம் ஏற்கப்பட்டதைத் தொடர்ந்து, அதுகுறித்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க உச்சநீதிமன்ற நீதிபதி அரவிந்த் குமார், சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவாஸ்தவா, கர்நாடக உயர்நீதிமன்ற மூத்த வழக்குரைஞர் பி.வி.ஆச்சார்யா ஆகியோர் அடங்கிய மூவர் குழுவை மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா கடந்த ஆண்டு ஆகஸ்டில் அமைத்தார்.

இதுதொடர்பாக மக்களவைச் செயலகம் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'நீதிபதி யஷ்வந்த் வர்மா பதவி நீக்க நடைமுறை தொடர்பாக விசாரணை நடத்தி வரும் குழுவில் இடம்பெற்றுள்ள சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவாஸ்தவாவின் பதவிக்காலம் 2026, மார்ச் 5-ஆம் தேதியுடன் நிறைவடையவுள்ளது. எனவே, அவருக்குப் பதிலாக மும்பை உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஸ்ரீசந்திரசேகர் குழு உறுப்பினராக நியமிக்கப்படுகிறார். ஏற்கெனவே குழுவில் உள்ள இரு உறுப்பினர்களுடன் அவர் மார்ச் 6-ஆம் தேதி முதல் இணைந்து பணியாற்றுவார். இந்தக் குழுவின் பதவிக்காலம் பிப்.26-ஆம் தேதி தொடங்கி மேலும் 3 மாதங்களுக்கு நீட்டிக்கப்படுகிறது. இதற்கான அறிவிப்பை மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா வெளியிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. இதனால் விசாரணைக் குழு அறிக்கை சமர்ப்பித்த பிறகே நீதிபதி யஷ்வந்த் வர்மாவை பதிவிநீக்க நடைமுறை அடுத்தகட்டத்துக்கு நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# விளையாட்டு செய்திகள்

## 'எதிர்மறை விமர்சனங்களை' நிறுத்த வேண்டும் இலங்கை கேப்டன் தசுன் ஷனகா கோரிக்கை

**புதுடெல்லி, பிப்.28:**

10ஆவது சீசன் டி-20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் இந்தியா - இலங்கை நாடுகளில் கூட்டாக நடைபெற்று வருகிறது. தற்போது இந்த தொடரில் 'சூப்பர் 8' சுற்று நடைபெற்று வருகிறது. ஆனால் போட்டியை நடத்தும் நாடுகளில் ஒன்றான இலங்கை அரையிறுதிக்கு தகுதி பெறாமல், சூப்பர் 8 சுற்றோடு வெளியேறியது. இந்நிலையில், இலங்கை அணி ஏமாற்றமளிக்கும் வகையில் உலகக்கோப்பையில் இருந்து வெளியேறியதற்கு அரசின் (இலங்கை) விமர்சனம் ஒரு காரணம் என அந்நாட்டு கேப்டன் தசுன் ஷனகா பேசியுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில், "இலங்கை அணி உலகக்கோப்பை தொடரை விட்டு வெளியேறியதற்கு மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். ஆனால் இந்த தோல்விக்கு உடற்தகுதி மற்றும் பார்ம் பிரச்சனை ஒரு குறைபாடு மட்டுமே காரண மல்ல. வெளியே உருவாக்கப்பட்ட எதிர்மறையான சூழலும் ஒரு முக்கிய காரணம் ஆகும். வீரர்கள் மீதான 'எதிர்மறை விமர்சனங்களை' இலங்கை அரசு நிறுத்த வேண்டும். இது பொதுவெளியில் பேசும் பிரச்சனை அல்ல. விமர்சனங்களில் இருந்து வீரர்களைப் பாதுகாக்க அரசு முன்வர வேண்டும்" என்று அவர் வலியுறுத்தினார்.

## பிராக் சர்வதேச செஸ் திருவிழா அரவிந்த் சிதம்பரம் தோல்வி; குகேஷ் போராட்டம்



பிராக் சர்வதேச செஸ் திருவிழா (PRAGUE INTERNATIONAL CHESS FESTIVAL) செக்குடியரசின் தலைநகரான பிராக் நகரில் உள்ள டான் ஜியோவானி ஹோட்டலில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில், மாஸ்டர்ஸ் பிரிவின் முதல் சுற்றில், உலகச் சாம்பியன் இந்தியாவின் குகேஷ் (தமிழ்நாடு), அமெரிக்காவின் ஹான்ஸ் மோக் நீமானும் மோதினர்.


தொடக்கம் முதலே பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இந்தியாவின் குகேஷ் கடுமையாக திணறி, போட்டியை டிரா செய்தார்.

ஆனாலும் இந்த ஆட்டத்தில் தோல்வியை தவிர்க்க குகேஷின் இறுதிக்கட்ட ஆட்டம் அசத்தலாக இருந்தது. மற்றொரு முதல் சுற்று ஆட்டத்தில் நடப்பு சாம்பியனான இந்தியாவின் அரவிந்த் சிதம்பரம், உஸ்பெகிஸ்தானின் நோடிர்பெக் அப்துசட்டோரோவுக்கு எதிரான ஆட்டத்தில் தோல்வியைத் தழுவினார்.

# விமான பயணச் சீட்டு கட்டணம் திரும்பபெறும் நடைமுறையில் டிஜிசிஏ திருத்தம் : 48 மணி நேரத்துக்குள் கூடுதல் கட்டணம் இன்றி ரத்து செய்யலாம்

**புதுடெல்லி, பிப்.28:**

விமான பயணச் சீட்டை குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு முன்பதிவு செய்த 48 மணி நேரத்துக்குள் கூடுதல் கட்டணங்கள் ஏதுமின்றி ரத்து செய்யும் வகையில் விமான பயணச் சீட்டு கட்டணம் திரும்பப் பெறும் நடைமுறையில் திருத்தத்தை விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (டிஜிசிஏ) மேற்கொண்டுள்ளது.



ரத்து செய்யப்படும் பயணச் சீட்டுகளுக்கான கட்டணத் தொகை திரும்ப அளிப்பதற்கான நடைமுறையை விமான நிறுவங்கள் 14 வேலை நாள்களுக்குள் நிறைவு செய்ய வேண்டும் என்றும் டிஜிசிஏ அறிவுறுத்தியுள்ளது.

ரத்து செய்த விமான பயணச் சீட்டுகளுக்கான கட்டணத் தொகையை திரும்ப அளிக்க விமான நிறுவனங்கள் நீண்ட தாமதம் செய்வதாக எழுந்த தொடர் புகார்களைத் தொடர்ந்து, இந்த நடைமுறையில் திருத்தங்களை டிஜிசிஏ மேற்கொண்டுள்ளது.

இந்த திருத்தங்கள் குறிக்கு டிஜிசிஏ வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

திருத்த நடைமுறைகளின்படி, பயணிகள் பயணச் சீட்டை முன்பதிவு செய்த பிறகு, அதில் கூடுதல் கட்டணம் ஏதுமின்றி திருத்தங்கள் மேற்கொள்ள அல்லது பயணச் சீட்டை ரத்து செய்ய 48 மணி நேரம் அவகாசம் அளிக்க விமான நிறுவனங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

அதன்படி, பயணச் சீட்டில் முன்பதிவு செய்த 48 மணி நேரத்துக்குள் பெயர் திருத்தங்கள் அல்லது பயணச் சீட்டை ரத்து செய்யும் பயணிகளிடம் நிர்ணயிக்கப்பட்ட சாதாரண கட்டணத்தைத் தவிர கூடுதல் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படக் கூடாது.

இந்த சலுகை, உள்நாட்டில் 7 நாள்களுக்குள் புறப்படும் விமானத்துக்கான பயணச் சீட்டுக்கும், வெளிநாடுகளுக்கு 15 நாள்களுக்குள் புறப்படும் விமானத்துக்கான பயணச் சீட்டுக்கும் பொருந்தாது. அதுபோல, பயணச் சீட்டு முன்பதிவு செய்த 48 மணி நேரத்துக்குப் பிறகும் இந்த சலுகை பொருந்தாது.

விமான நிறுவன வலைதளத்தில் நேரடியாக முன்பதிவு செய்த பயணச்சீட்டில், பெயர் திருத்தம் தொடர்பாக 24 மணி நேரத்துக்குள் பயணி சுட்டிக்காட்டினால், அதற்கு கூடுதல் கட்டணம் எதுவும் வசூலிக்கக் கூடாது.

பயண நேரத்தில் மருத்துவ அவசரச் சூழல் காரணமாக பயணம் மேற்கொள்ள முடியாமல் போகும் பயணிகளுக்கு விமான நிறுவனம் பயணக் கட்டணத்தைத் திரும்ப அளிக்கலாம் அல்லது அந்த கட்டணத்தில் வேறொரு நாளில் பயணச்சீட்டை முன்பதிவு செய்து கொள்வதற்கான வாய்ப்பை அளிக்கலாம்.

# வணிகச் செய்திகள்

## மியூச்சுவல் ஃபண்ட் வகைப்பாடுகளை மாற்றியமைத்தது செபி: புதிதாக 'லைஃப் சைக்கிள்' நிதி அறிமுகம்

**சென்னை, பிப்.28:**

நாட்டின் பரஸ்பர நிதி (மியூச்சுவல் ஃபண்ட்) திட்டங்களை வகைப்படுத்தும் விதிகளில் பங்குச்சந்தை ஒழுங்காற்று வாரியம் (செபி) வியாழக்கிழமை அதிரடி மாற்றங்களைச் செய்தது. இதன்படி, முதலீட்டாளர்களின் வசதிக்காக 'லைஃப் சைக்கிள்' என்ற புதிய வகை நிதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதேநேரம், இதுவரை நடைமுறையில் இருந்த 'சொல்யூஷன் ஓரியண்டட்' நிதித் திட்டங்கள் முழுமையாக ரத்து செய்யப்பட்டுள்ளன. முதலீட்டாளர்களுக்கு நிதிப் பாதுகாப்பு அளிப்பதும், அவர்கள் எந்தத் திட்டத்தில் முதலீடு செய்கிறோம் என்பதைத் தெளிவாகத் தெரியபடுத்துவதும் தான் இப்புதிய மாற்றங்களின் முக்கிய நோக்கம் ஆகும்.

திட்டங்களின் பெயர்களில் தெளிவு: புதிய மாற்றங்களின்படி, பரஸ்பர நிதித் திட்டங்கள் அனைத்தும் பங்குச்சந்தை முதலீடு (ஈக்விட்டி), கடன் பத்திர முதலீடு (டெப்ட்), கலப்பு முதலீடு (ஹைபிரிட்), லைஃப் சைக்கிள் மற்றும் இதர திட்டங்கள் என 5 முக்கியப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒரு திட்டத்தின் பெயர், அது எதில் முதலீடு செய்கிறது என்பதைத் தெளிவாக விளக்க வேண்டும். முதலீட்டாளர்களைக் கவர்வதற்காக 'அதிக லாபம் தரும்' என்பது போன்ற மிகைப்படுத்தப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தக் கூடாது. மேலும், வெளிநாட்டுப் பங்கு முதலீடுகள் இனி தனிப் பிரிவாகக் கருதப்படாது.

# பண மோசடி வழக்குகளில் ப.சிதம்பரம் மீது நடவடிக்கை எடுக்க மத்திய அரசு அனுமதி

**புதுடெல்லி, பிப்.28:**

ஐஎன்எக்ஸ் மீடியா மற்றும் ஏர்செல் மேக்ஸிஸ் ஒப்பந்தத்தில் பணமுறைகேடு செய்த வழக்கில் முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் மீது நடவடிக்கை எடுக்க மத்திய அரசு அனுமதி வழங்கியது.

இந்த இரு வழக்குகளிலும் பண முறைகேடு தடுப்புச் சட்டத்தின்கீழ் (பிஎம்எல்ஏ) அவர் மீது நடவடிக்கை மேற்கொள்ள மத்திய அரசு பிறப்பித்த உத்தரவை தில்லி சிறப்பு நீதிமன்றத்திடம் வியாழக்கிழமை சமர்ப்பித்த அமலாக்கத்துறை விசாரணையை தீவிரப்படுத்த வலியுறுத்தியது.



கடந்த 2006-07 காலகட்டத்தில் மத்திய நிதியமைச்சராக பதவி வகித்தபோது மலேசியாவைச் சேர்ந்த மேக்சிஸ் நிறுவனமானது ஏர்செல் நிறுவனத்தில் ரூ.3,500 கோடி முதலீடு செய்தது. இதே காலகட்டத்தில் ஐஎன்எக்ஸ் மீடியா குழுமம் வெளிநாட்டில் இருந்து ரூ.305 கோடி நிதியைப் பெற்றது. இந்த இரண்டு ஒப்பந்தங்களிலும் முறைகேடு நடைபெற்றாக முதலில் சிபிஐ வழக்குப்பதிவு செய்தது. அதனடிப்படையில் பிஎம்எல்ஏவின்கீழ் அமலாக்கத் துறையும் விசாரணை நடத்தியது. இந்த முறைகேடுகளில் ப.சிதம்பரத்தின் மகன் கார்த்தி சிதம்பரத்துக்கும் தொடர்பிருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்நிலையில், பொதுப் பணியில் உள்ளோர் மீது பிஎம்எல்ஏ, 2002-இன்கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய மத்திய அரசிடம் இருந்து முன்அனுமதி பெறுவது கட்டாயம் என உச்சநீதிமன்றம் 2024, நவம்பரில் தீர்ப்பளித்தது.

இதையடுத்து, ப.சிதம்பரம் மீது நடவடிக்கை எடுக்க மத்திய அரசிடம் அமலாக்கத் துறை அனுமதி கோரியது. கடந்த பிப்.10-ஆம் தேதி இதற்கான அனுமதியை மத்திய அரசு வழங்கியது.

இந்த உத்தரவை தில்லி சிறப்பு நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அமலாக்கத் துறை, இரு வழக்குகளிலும் ப.சிதம்பரம் மீதான விசாரணையை தீவிரப்படுத்த வலியுறுத்தியது.

# உலகின் தலைவராக மாற காலனிய மனோபாவத்திலிருந்து வெளிவருவது அவசியம்: குடியரசு துணைத் தலைவர்

புதுடெல்லி, பிப்.28:

புத்தாக்க கண்டுபிடிப்பில் இந்தியா உலகின் தலைவராக மாறுவதற்கு, காலனிய மனோபாவத்தில் இருந்து நாடு வெளிவருவது அவசியம் என்று குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.



ஸ்ரீநகரில் உள்ள காஷ்மீர் பல்கலைக்கழகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு அவர் பேசியதாவது: சுதேசி கண்டுபிடிப்புகள் மீதும், தீர்வுகள் மீதும் மாணவர்கள் கவனம் செலுத்த வேண்டும். நாம் யாருக்கும் எதற்கும் குறைந்தவர்கள் என கவலையோ, தயக்கமோ கொள்ளத் தேவையில்லை. காலனிய மனோபாவத்தில் இருந்து முதலில் வெளிவந்தாலே போதும். நாட்டில் தொழில் துறையை மிகவும் துடிப்புமிக்கதாகவும், இதுவரை இல்லாத அளவு மிகவும் சாதகமானதாகவும் பிரதமர் மோடி மாற்றியுள்ளார்.

கரோனா காலத்தில் உள்நாட்டிலேயே தடுப்பு மருந்தைக் கண்டுபிடிக்கும்படி நமது நாட்டு விஞ்ஞானிகளுக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார். நம்மால் மருந்து கண்டுபிடிக்க முடியும் என அப்போது எத்தனை பேர் நம்பியிருப்பர்? ஆனால், நாம் சிறந்த கரோனா தடுப்பு மருந்தை கண்டுபிடித்தோம். அந்த மருந்து, ஒட்டுமொத்த மனிதகுலத்துக்கும் பயன் தந்தது. இதே மருந்தை உலகில் உள்ள வளர்ந்த நாடுகள் ஆய்வு செய்து உருவாக்கின. ஆனால், நமக்கு பிறகுதான் அவை கண்டுபிடிக்கப்பட்டன என்பதால் உரிமை கோர முடியவில்லை. அதனால் அதிக விலைக்கு அதை விற்றனர். ஒரு யூனிட் மருந்து 7,500 டாலருக்கு விற்கப்பட்டது. அதை எப்படி ஏழைகள் வாங்க முடியும்?

போதைப் பொருளில் இருந்து விலகியிருக்க வேண்டும்: அனைத்து மதங்களிலும், போதைப் பொருள்களை எடுத்து கொள்வது பாவச் செயல் எனக் கூறப்பட்டுள்ளது. ஆதலால் மாணவர்களாகிய நீங்கள் போதைப் பொருளைத் தவிர்க்க வேண்டும். வயதான காலத்தில் நீங்கள் கவனித்துக் கொள்வீர்கள் என உங்களின் பெற்றோர் நம்புகின்றனர். வாழ்க்கையில் நீங்கள் வெற்றி பெற வேண்டும் என உங்கள் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஆதலால் நீங்கள் மட்டுமன்றி, உங்களது நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் தினமும் நீங்கள் சந்திக்கும் அனைவரிடமும் போதைப் பொருளில் இருந்து விலகியிருக்க நீங்கள் வலியுறுத்த வேண்டும்.

சமூகவலைதளங்களிலும் மாணவர்கள் கவனமுடன் இருக்க வேண்டும். மிகவும் கட்டுப்பாட்டுடன் அவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்றார்.

## பிஹாரில் திருமண மேடையில் மணப் பெண் மீது துப்பாக்கிச் சூடு

பக்சார், பிப்.28:

பிஹாரின் பக்சார் மாவட்டம் முஃபாசில் காவல் எல்லைக் குட்பட்ட சவுசா நகரைச் சேர்ந்த ஆர்த்தி குமாரிக்கும் (18) உ.பி. யின் பல்லியா மாவட்டத்தை சேர்ந்த இளைஞருக்கும் மாலை திருமணம் நடைபெற இருந்தது. அப்போது மணமேடையில் ஏறிய முகக்கவசம் அணிந்த ஒருநபர் திடீரென ஆர்த்தியை துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பினார். காயம் அடைந்த ஆர்த்தி, வாராணசியில் உள்ள ஒரு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். ஆர்த்தியை ஒருதலையாக காதலித்த தீன பந்து என்பவர் இதை செய்திருக்கலாம் என போலீஸார் தெரிவித்துள்ளனர்.

## டில்லி விமான நிலையம்: ரூ.24 கோடி மதிப்பிலான போதைப் பொருள் பறிமுதல் : இருவர் கைது

புதுடெல்லி, பிப்.28:

தாய்லாந்திலிருந்து தில்லி திரும்பிய இரு இந்தியர்களிடம் ரூ.24 கோடி மதிப்பிலான 23.9 கிலோ போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டதாக இந்திராகாந்தி சர்வதேச விமான நிலைய சுங்கத் துறை அதிகாரிகள் வியாழக்கிழமை தெரிவித்தனர்.

இதுதொடர்பாக அதிகாரிகள் கூறியதாவது: கடந்த பிப்.23-ஆம் தேதி விமான நிலையத்தின் 3-ஆவது முனையம் வழியாக வந்த பயணிகள் சரிபார்ப்புக்கு பின்னர் குடியேற்ற பகுதியில் தடுத்து நிறுத்தப்பட்டனர். அவர்களுடைய பை ஊடுகதிர் (எக்ஸ்-ரே) சோதனையைத் தொடர்ந்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. அப்போது, பச்சை நிறத்தில் உள்ள போதைப் பொருள் அடங்கிய 14 நெகிழி பைகள் கைப்பற்றப்பட்டன.

அவற்றின் மொத்த எடை 23.936 கி.கி. முதல்கட்ட விசாரணையில் கடத்தப்பட்ட போதைப் பொருள் கஞ்சா என தெரியவந்தது. கள்ளச்சந்தையில் அவற்றின் மதிப்பு ரூ.23.9 கோடி. கைதுசெய்யப்பட்ட இரு பயணிகளுக்கு எதிராக போதை மருந்துகள் மற்றும் மயக்கவியல் பொருள்கள் சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தனர்.

## ரூ.6 கோடி உயர் ரக கஞ்சா பறிமுதல்: கேரள இளைஞர் கைது

புதுடெல்லி, பிப்.28:

சென்னை விமான நிலையத்தில் ரூ.6 கோடி உயர்ரக கஞ்சாவை சுங்கத் துறை அதிகாரிகள் பறிமுதல் செய்து, கேரள மாநில இளைஞரைக் கைது செய்தனர்.

தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் இருந்து, ஏர் ஏசியா பயணிகள் விமானத்தில் புதன்கிழமை நள்ளிரவு சென்னை சர்வதேச விமான நிலையத்துக்கு வந்த பயணிகளை சுங்கத் துறை அதிகாரிகள் ரகசியமாக கண்காணித்தபோது, கேரளத்தைச் சேர்ந்த 25 வயது ஆண் பயணி மீது அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது. இதையடுத்து அவரைத் தடுத்து நிறுத்தி விசாரித்தனர். அவரை சுங்கத் றை அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று உடைமைகளையும் சோதனையிட்டனர்.

இதில், அவரது பெட்டிக்குள் ரூ.6 கோடி மதிப்பிலான 5.9 கிலோ உயர்ரக ஹைட்ரோபோனிக் கஞ்சா இருந்தது தெரிய வந்தது. இதையடுத்து சுங்க அதிகாரிகள் அந்த இளைஞரை கைதுசெய்ததுடன், உயர்ரக கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

விசாரணையில், படிப்புக்குத் தகுந்த வேலை இல்லாததால், கடத்தலில் ஈடுபட்டு முதல்முறையே சிக்கியது தெரிய வந்தது.

## மாநிலங்களவை தேர்தல்: சுயேச்சை மனு தாக்கல்

புதுடெல்லி, பிப்.28:

தமிழகத்தில் காலியாகவுள்ள 6 மாநிலங்களவை உறுப்பினர் பதவிகளுக்கான தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் வியாழக்கிழமை தொடங்கிய நிலையில், சுயேச்சை வேட்பாளர் மனு தாக்கல் செய்தார்.



மாநிலங்களவை உறுப்பினர்கள் மு.தம்பிதுரை, ஜி.கே.வாசன், என்.ஆர். இளங்கோ, கனிமொழி சோமு, திருச்சி சிவா, பி.செல்வராசு ஆகிய 6 பேரின் பதவிக்காலம் ஏப். 2-ஆம் தேதியுடன் நிறைவடைகிறது. இதற்கான தேர்தல் அறிவிக்கப்பட்டு, வியாழக்கிழமை வேட்புமனு தாக்கல் தொடங்கியது. மார்ச் 5-ஆம் தேதி வரை வேட்புமனு தாக்கல் செய்யலாம். மார்ச் 9-இல் வேட்புமனுக்களை திரும்பப் பெறலாம். தேவைப்பட்டால் மார்ச் 16-இல் வாக்குப்பதிவு நடைபெறும். வேட்புமனு தாக்கல் செய்ய முதல்நாளான வியாழக்கிழமை சேலத்தைச் சேர்ந்த பத்மராஜன் சுயேச்சையாக வேட்புமனு தாக்கல் செய்தார்.

மாநிலங்களவை உறுப்பினர் வேட்புமனுவில் 10 எம்எல்ஏக்கள் முன்மொழிவு கையொப்பம் பெற்றுதான் மனு தாக்கல் செய்ய வேண்டும். ஆனால், அவரது மனுவில் யாரும் முன்மொழியவில்லை.

எனவே, மனு தள்ளுபடி செய்யப்படும்.

தற்போதுள்ள எம்எல்ஏ-க்களின் எண்ணிக்கை அடிப்படையில் திமுக சார்பில் 4 பேர், அதிமுக சார்பில் 2 பேர் மாநிலங்களவை உறுப்பினர்களாக தேர்வு செய்ய வாய்ப்புள்ளது.

## சிறைகளில் காலிப் பணியிடங்களை நிரப்ப நெறிமுறை: மாநிலங்களுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி பிப்.28:

திறந்தவெளி சிறைகளில் காலியாக உள்ள பணியிடங்களை குறிப்பிட்ட காலத்துக்குள் நிரப்புவது தொடர்பான நெறிமுறையை வகுக்கும்படி மாநிலங்கள், யூனியன் பிரதேச அரசுகளுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



நன்னடத்தை உடைய கைதிகள், குறைந்த அளவு கண்காணிப்புடன் இருக்கும் இடமே திறந்தவெளி சிறைச்சாலையாகும். இங்குள்ள கைதிகளுக்கு வாழ்வாதாரத்துக்காக பகல் நேரத்தில் வெளியில் விவசாயம் போன்ற வேலைக்குச் சென்றுவிட்டு, இரவு நேரத்தில் மீண்டும் சிறைக்கு திரும்பி வரும் சலுகை வழங்கப்படுகிறது. சமுதாயத்தில் கைதிகளுக்கு தொடர்புகளை ஏற்படுத்தவும், வெளிவாழ்க்கையில் மனரீதியில் கைதிகளுக்கு ஏற்படுத்தும் அழுத்தத்தை குறைக்கும் வகையிலும் இந்த சிறைச்சாலை அறிமுகம் செய்யப்பட்டது.

இந்த சிறைச்சாலை தொடர்பான பொதுநல மனு, உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா ஆகியோரைக் கொண்ட அமர்வு முன்பு வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு வருமாறு:

சிறைச்சாலைகள் என்பது தவறுகளை கைதிகள் திருத்திக் கொள்ளும் இடமாகும். அந்த இடம் கண்ணியம், சுய மரியாதை, சமூக மறு ஒருங்கிணைப்பு ஆகியவற்றை ஏற்படுத்தும் இடமாக இருக்க வேண்டும். இதை கண்காணிக்கும் குழுக்களை அமைப்பது தொடர்பான நெறிமுறையை மாநில அரசுகள், யூனியன் பிரதேச அரசுகள் 3 மாதங்களில் தாக்கல் செய்ய வேண்டும்.

அதேபோல், திறந்தவெளி சிறைகள் தொழிலாளர் முகாமாக மட்டும் செயல்படக்கூடாது. இதை மாநில அரசுகளும், யூனியன் பிரதேச அரசுகளும் உறுதிப்படுத்த வேண்டும். அந்த சிறைகளில் காலியாக உள்ள பணியிடங்களை 2 மாதங்களுக்குள் நிரப்புவதையும் மாநில, யூனியன் பிரதேச அரசுகள் உறுதிப்படுத்த வேண்டும். நீதிமன்ற உத்தரவு செயல்படுத்தப்பட்டது தொடர்பான அறிக்கையை, அது செயல்படுத்தப்பட்ட ஒரு மாதத்துக்குள் கண்காணிப்புக் குழுவிடம் மாநில, யூனியன் பிரதேச அரசுகள் தாக்கல் செய்ய வேண்டும்.

இதேபோல் பெண் கைதிகள் எண்ணிக்கைக்கு ஏற்ப இடவசதி இருக்கும் வகையில் திறந்தவெளி சிறைச்சாலைகளை சீரமைப்பது தொடர்பான நெறிமுறையையும் மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் உருவாக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

## 'ஆங்கிலேயருக்கே கடன் கொடுத்த பரம்பரை நாங்க' - 109 ஆண்டுகளுக்கு பிறகு வட்டியும் முதலுமாக திருப்பி கேட்க வாரிசுகள் முடிவு!

போபால், பிப்.28:

இந்தியாவை சுமார் 200 ஆண்டுகள் ஆட்சி செய்து வந்த ஆங்கிலேயர்கள், 1947-ம் ஆண்டு ஆகஸ்ட் 14-ந்தேதி இரவு நாட்டைவிட்டு வெளியேறினர். அதனைத் தொடர்ந்து, ஆகஸ்ட் 15-ந்தேதி இந்தியா சுதந்திரம் பெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஆங்கிலேய அரசு இந்தியாவை ஆட்சி செய்த காலத்தில், முதலாம் உலகப்போரின்போது ஏற்பட்ட நிதி நெருக்கடி சமயத்தில், 1917-ம் ஆண்டு மத்திய பிரதேசம் மாநிலம் சீஹோர் பகுதியை சேர்ந்த தொழிலதிபர் சேத் ஜும்மாலால் ருதியா என்பவரிடம் ரூ.35 ஆயிரம் கடன் வாங்கியுள்ளது.




ஆங்கிலேய அரசுக்கு கடன் கொடுத்த தகவல் ருதியாவின் மகன் உள்ளிட்டோருக்கு அப்போது தெரிந்திருந்தும், அதற்கான உரிய ஆவணங்கள் இல்லாததால் சுதந்திரத்திற்கு பிறகு அந்த பணத்தை திருப்பி பெறுவதற்கான எந்த முயற்சியிலும் ஈடுபடவில்லை. இந்த நிலையில், 109 ஆண்டுகளுக்கு பிறகு ஜும்மாலால் ருதியாவின் பேரன் விவேக், வீட்டில் இருந்த பழைய உயில்கள், ஆவணங்களை ஆய்வு செய்திருக்கிறார். அப்போது அவருக்கு ஆச்சரியம் அளிக்கும் வகையில், தனது தாத்தா, ஆங்கிலேய அரசுக்கு ரூ.35 ஆயிரம் கடன் வழங்கியது தொடர்பான அசல் பத்திரம் மற்றும் ஆவணம் கிடைத்துள்ளது. அந்த ஆவணத்தில், முதல் உலகப்போரின்போது ஏற்பட்ட நிதி நெருக்கடியில், சீஹோர் சமஸ்தான தேவைக்காக 1917-ம் ஆண்டு ஜூன் மாதம் 4-ந்தேதி ரூ.35 ஆயிரம் கடன் வாங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது அப்போதைய காலத்தில், போர்க்கடன் என்றும் அழைக்கப்பட்டுள்ளது. 100 ஆண்டுகளுக்கு முன்பு ரூ.35 ஆயிரம் என்பது மிகப்பெரிய தொகை. இன்றைய காலத்தில் கோடிகளுக்கு சமம். தற்போது, வட்டியுடன் சேர்த்தால் இந்த தொகை ரூ.12 கோடிக்கு மேல் வரும் என்று கூறப்படுகிறது. இந்த நிலையில், அந்த பணத்தை ஆங்கிலேய அரசு இதுவரை திருப்பி தராததால், கடனை திருப்பிக் கேட்க விவேக் மற்றும் அவரது குடும்பத்தினர் முடிவு செய்துள்ளனர். இதுதொடர்பாக, தற்போதைய பிரிட்டன் அரசுக்கு சட்டப்பூர்வ நோட்டீஸ் அனுப்பவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

## ஜார்க்கண்ட்: விபத்துக்குள்ளான ஏர் ஆம்புலன்ஸ்: 7 பேர் பலி



ராஞ்சி, பிப்.28:

ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சி அருகே விபத்துக்குள்ளான ஏர் ஆம்புலன்ஸ் 6,600 மணி நேரம் பறந்த 39 ஆண்டு கால பழைய விமானம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜார்க்கண்ட் ராஞ்சியில் உள்ள பிர்சா முண்டா விமான நிலையத்தில் இருந்து பிப்ரவரி 23ம் தேதி இரவு 7.11 மணி அளவில் நோயாளி மற்றும் அவரது குடும்பத்தினர் உட்பட 7 பேருடன் ஏர் ஆம்புலன்ஸ் விமானம் டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தை நோக்கி புறப்பட்டது.

இந்த விமானம் சத்ரா மாவட்டத்தில் உள்ள சிமாரியா காட்டுப் பகுதியில் விபத்துக்குள்ளாகி அதில் பயணம் செய்த 7 பேரும் உயிரிழந்தனர். இந்த ஏர் ஆம்புலன்ஸை விவேக் விகாஷ் பகத் என்ற விமானி இயக்கினார். துணை விமானியாக இருந்தவர் சவ்ராஜ் தீப் சிங். ரெட்பேர்ட் ஏர்வேஸ் இயக்கிய இந்த பீச்கிராப்ட் சி 90 ஏ விமானம் 1987-ல் தயாரிக்கப்பட்டது. இது 6,610 மணி நேரம் பறந்திருந்தாலும், புள்ளி விவரப்படி இது அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட விமானம் அல்ல என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். விமானத்துக்கான தகுதிச் சான்றிதழ் இந்த ஆண்டு ஜனவரி 21-ல் புதுப்பிக்கப்பட்டது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

## நாடு முழுவதும் ஏப்.1 முதல் 20 சதவீதம் எத்தனால் கலந்த பெட்ரோல் விற்பனை செய்வது கட்டாயம்: மத்திய அரசு

புதுடெல்லி, பிப்.28:

நாடு முழுவதும் ஏப்ரல் 1 முதல் 20% எத்தனால் கலந்த பெட்ரோல் மட்டுமே விற்பனை செய்யப்பட வேண்டும் என மத்திய பெட்ரோலிய அமைச்சகம் அரசாணை வெளியிட்டுள்ளது. இது கச்சா எண்ணெய் இறக்குமதியைக் குறைக்கவும், சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் கட்டுப்படுத்தவும் அன்னியச் செலாவணியைச் சேமித்தல், உமிழ்வைக் குறைத்தல் மற்றும் விவசாயிகளுக்கு ஆதரவளிக்கவும் உதவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023-2025க்கு இடையில் தயாரிக்கப்பட்ட பெரும்பாலான வாகனங்கள் E20 பெட்ரோலில் இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. எனினும், பழைய வாகனங்களின் மைலேஜில் சிறிது குறைவு ஏற்படலாம் எனவும் ரப்பர், பிளாஸ்டிக் பொருட்கள் தேய்ந்து போகலாம் எனவும் வாகன ஓட்டிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

## தேர்தல் ஆணையத்துக்கு உச்ச நீதிமன்றம் நோட்டீஸ்

புதுடெல்லி, பிப்.28:

காமன் காஸ் அமைப்பு தாக்கல் செய்த பொது நல மனுவை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூரியகாந்த் தலைமையிலான அமர்வு விசாரித்தது. காமன் காஸ் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷண் கூறும்போது, "தேர்தலின்போது கட்சிகள் பண பலத்தை பயன்படுத்துவது ஜனநாயகத்தை பாதிக்கிறது. தேர்தல் செலவின கட்டுப்பாடுகள் இருந்தாலும் அது வேட்பாளருக்கு மட்டுமே பொருந்துவதாக உள்ளது" என்று வாதிட்டார். இந்த வாதத்தை ஏற்றுக் கொண்ட உச்ச நீதிமன்றம், பொதுநல மனு குறித்து பதில் அளிக்க தேர்தல் ஆணையத்துக்கும், மத்திய அரசுக்கும் உத்தரவிட்டு விசாரணையை தள்ளிவைத்துள்ளது.

## பிஎஸ்என்எல் இயக்குநர் வீண் செலவுடன் பயணிக்கத் திட்டம்: மத்திய அமைச்சர் கண்டனம்



புதுடெல்லி, பிப்.28:

உத்தர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜுக்கு பிஎஸ்என்எல் இயக்குநர் விவேக் பன்சால் 2 நாள் பயணம் (பிப்.25, 26) மேற்கொள்ளத் திட்டமிட்டார். இந்தப் பயணத்தில் அங்குள்ள திரிவேணி சங்கமத்தில் நீராடல், படகு சவாரி செய்வது, படே ஹனுமான், அக்ஷியாவத் மற்றும் பாதால்புரி கோயில்களுக்குச் செல்வது என்று திட்டமிடப்பட்டது. இதற்கான போக்குவரத்து, தங்குமிடம் என பயணத்துக்கான ஒவ்வொரு ஏற்பாட்டையும் செய்யும் பணி 50 அதிகாரிகளுக்கு ஒதுக்கப்பட்டது. இதுதவிர ஹோட்டல், சுற்றுலா மாளிகை, உலர் பழங்கள், முகச்சவரம் செய்யும் கருவிகள், துண்டு, உள்ளாடைகள், காலணிகள், கண்ணாடிகள், சோப்பு, ஷாம்பு, எண்ணெய், படுக்கை விரிப்பு உள்ளிட்டவற்றை ஏற்பாடு செய்யவும் அலுவலக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனால் சர்ச்சை ஏற்பட்ட நிலையில், பன்சாலின் பயணம் ரத்து செய்யப்பட்டு அலுவல்பூர்வ விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதுகுறித்து புது டில்லியில் மத்திய அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா புதன்கிழமை கூறுகையில், 'பிஎஸ்என்எல் இயக்குநர் பன்சாலின் பிரயாக்ராஜ் பயணத்துக்கு முன்வைக்கப்பட்ட தேவைகள் மற்றும் ஏற்பாடுகள் அபத்தமானவை. இது அதிர்ச்சியளிக்கிறது. இந்தத் தேவைகள் மற்றும் ஏற்பாடுகளைக் கோரி, பிறப்பிக்கப்பட்ட உத்தரவு ஏற்கத்தக்கது அல்ல. விதிமுறைகளை மீறியதால் பன்சாலிடம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது' என்றார்.

# எல்லையில் வெடித்த மோதல்... ஆப்கானிஸ்தான் மீது போர் அறிவித்த பாகிஸ்தான்

**இஸ்லாமாபாத், பிப்.28:**

பாகிஸ்தானின் அண்டை நாடான ஆப்கானிஸ்தானில் தலீபான்கள் ஆட்சி நடைபெற்று வருகிறது. இதனிடையே, பாகிஸ்தானில் உள்ள விமான நிலையங்கள், மசூதிகள், ராணுவ தளங்கள், காவல் நிலையங்கள் உள்ளிட்ட இடங்களில் தலிபானின் கிளை அமைப்பான தெஹ்ரிக்-இ-தலிபான் அமைப்பை சேர்ந்த பயங்கரவாதிகள் தொடர் தாக்குதல்களை நடத்தி வருவதாக பாகிஸ்தான் அரசு குற்றம்சாட்டியது.

இதையடுத்து ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டிய பகுதிகளில் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக கூறப்படும் முகாம்கள் மீது பாகிஸ்தான் ராணுவம் அதிரடி தாக்குதல்களை நடத்தியது. இதனால் ஆப்கானிஸ்தான்-பாகிஸ்தான் எல்லையில் பதற்றம் அதிகரித்தது. முன்னதாக கடந்த அக்டோபர் மாதம் கத்தார் மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் மத்தியஸ்தம் செய்து பேச்சுவார்த்தை நடத்தியபோது, எல்லையில் போர்நிறுத்தம் கொண்டு வர இரு நாடுகளும் சம்மதம் தெரிவித்தன.



இதற்கிடையில், கடந்த பிப்ரவரி 6-ந்தேதி பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் ஷியா மசூதியில் பயங்கரவாதிகள் நடத்திய தற்கொலைப் படை தாக்குதலில் 36 பேர் உயிரிழந்தனர். தொடர்ந்து பாகிஸ்தானின் கைபர் பக்துங்க்வா மாகாணத்தில் சோதனை சாவடி அருகே நடந்த குண்டு வெடிப்பு தாக்குதலில் 11 ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதல்களுக்கு பதிலடியாக, அண்மையில் பாகிஸ்தான் ராணுவம் ஆப்கானிஸ்தான் எல்லைக்குள் நுழைந்து நடத்திய அதிரடி தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உள்பட சுமார் 18 பேர் உயிரிழந்ததாகவும், இந்த தாக்குதலுக்கு தக்க பதிலடி கொடுப்போம் எனவும் தலீபான் அரசு கூறியது. இந்த நிலையில், நேற்று இரவு பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் தலீபான்கள் திடீர் தாக்குதல் நடத்தினர்.

அதேசமயம், பாகிஸ்தான் மந்திரி அத்தாவுல்லா தரார் கூறுகையில், பாகிஸ்தான் ராணுவம் நடத்திய தாக்குதலில் சுமார் 130 தலீபான்கள் கொல்லப்பட்டதாகவும், 200-க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்ததாகவும் தெரிவித்தார். பாகிஸ்தான் ராணுவத்தை சேர்ந்த 2 வீரர்கள் உயிரிழந்ததாகவும் அவர் கூறினார்.

தொடர்ந்து, 'ஆபரேஷன் கசாப் லில் ஹக்' என்ற பெயரில் ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபுல் உள்பட பல்வேறு முக்கிய இடங்களை குறிவைத்து பாகிஸ்தான் ராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த சூழலில், 'பாகிஸ்தான் தனது தாக்குதலை தொடர்ந்தால் நாங்கள் தக்க பதிலடி கொடுப்போம்' என ஆப்கானிஸ்தான் அரசின் செய்தி தொடர்பாளர் சபிஹுல்லா முஜாஹித் எச்சரித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வரிப் பணத்தை கொடுங்கள்: அமெரிக்க நிறுவனங்கள் வழக்கு

**வாஷிங்டன், பிப்.28:**

டிரம்ப்பின் பரஸ்பர இறக்குமதி வரி விதிப்பு அந்நாட்டு உச்சநீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்ட தைத் தொடர்ந்து, தாங்கள் செலுத்திய வரிப்பணத்தை முழுமையாகத் திரும்பத் தரக் கோரி ஃபெட்எக்ஸ் உள்ளிட்ட நிறுவனங்கள் வழக்கு தொடர்ந்துள்ளன. அமெரிக்காவின் சர்வதேச வர்த்தக நீதிமன்றத்தில் ஃபெட்எக்ஸ் தாக்கல் செய்த மனுவில், வரிகளைச் செலுத்தியதால் தங்களின் நிறுவனம் பெரும் நிதி பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதாகவும், அந்த இழப்பை ஈடுகட்ட வரிப்பணத்தைத் திருப்பியளிக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளது. ஃபெட்எக்ஸ் நிறுவனத்தைத் தொடர்ந்து காஸ்ட்கோ, ரெவ்லான் போன்ற பிற முன்னணி நிறுவனங்களும் நீதிமன்றத்தை நாடத் திட்டமிட்டுள்ளன.

# 'சூப்பர்சோனிக்' ஏவுகணைகளை சீனாவிடம் இருந்து வாங்குகிறது ஈரான்

அமெரிக்காவுடன் போர்ப் பதற்றம் தீவிரமா கியுள்ள நிலையில், சீனாவிடமிருந்து 'சூப்பர்சோனிக்' ஏவுகணைகளை வாங்குவதற்கு ஈரான் இறுதி கட்டப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது. ஒலியை விட வேகமாகச் செல்லக் கூடிய இந்த நவீன ஏவுகணைகள் சுமார் 290 கிலோமீட்டர் தூரம் வரை உள்ள இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கும் திறன் கொண்டவை. மிகத் தாழ்வாகவும், மின்னல் வேகத்திலும் பறப்பதால், கப்பல்களில் உள்ள பாதுகாப்பு ரேடார்களால் இவற்றைத் தடுப்பது மிகவும் கடினம். கடந்த ஆண்டு இஸ்ரேலு டன் நடந்த 12 நாள் போருக்குப் பிறகு இந்த ஏவுகணை களை வாங்க ஈரான் வேகம் காட்டிவருகிறது.

# நான் இல்லையெனில் பாக்.. பிரதமர் கொலை செய்யப்பட்டிருப்பார் - டிரம்ப்



இந்தியா - பாகிஸ்தான் இடையே அணு ஆயுதப் போர் வெடித்திருக்கும். அதை நான் தடுத்து நிறுத்தினேன். எனது தலையீடு இல்லையெனில் பாகிஸ்தான் பிரதமர் ஷேபாஸ் ஷெரீப் கொல் லப்பட்டிருப்பார். நான் தான் அவரது உயிரை காப்பா ற்றியுள்ளேன் என டிரம்ப் பேசியுள்ளார். போரை நிறுத்தாவிட்டால் பாகிஸ்தானில் 3.5 லட்சம் மக்கள் பலியாகி இருப்பார்கள், இந்தியா - பாகிஸ்தான் போரை நிறுத்துங்கள் என்று ஷேபாஸ் ஷெரீப் தன்னிடம் கூறியதாகவும் டிரம்ப் அதிர்ச்சித் தகவலை தெரிவித்துள்ளார். மேலும் இந்தியா - பாகிஸ்தான் போர் உள்பட 8 போர்களை நிறுத்தி அமைதியை ஏற்படுத்தியுள்ளேன் எனவும் கூறியுள்ளார்.

# காசா அமைதித் திட்டத்திற்கு பிரதமர் மோடி ஆதரவு

ஜெருசலேமில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவுடன் இணைந்து வெளியிட்ட கூட்டு அறிக்கையின் போது, பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்கா முன்வைத்த காசா அமைதித் திட்டம் குறித்து தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். காசா அமைதித் திட்டத்தின் மூலம் அமைதிக்கான ஒரு புதிய பாதை உருவாக்கப்பட்டுள்ளதாகப் பிரதமர் மோடி தெரிவித்தார். இந்த அமைதி முயற்சிகளுக்கு இந்தியா தனது முழுமையான ஆதரவை வழங்கு கிறது என்றார். இந்தச் சந்திப்பின் போது பேசிய அவர், "மனிதநேயம் என்பது ஒருபோதும் மோதல்களுக்குப் பலியாகக் கூடாது என்பதில் இந்தியாவின் தொலை நோக்குப் பார்வை மிகவும் தெளிவாக உள்ளது" என்றார்.

# இந்தியா - இஸ்ரேல் இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சு

இந்தியாவும் இஸ்ரேலும் தங்களது வணிகத் தொடர்புகள் மற்றும் முதலீடுகளை மேம்படுத்து வதற்காக, தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்திற்கான (FTA) முதற்கட்ட பேச்சுவார்த்தைகளைத் தொடங்கி யுள்ளன. வணிக ரீதியிலான பிணைப்பை வலுப் படுத்தும் நோக்கில் தொடங்கப்பட்டுள்ள இந்த நான்கு நாள் பேச்சுவார்த்தைகள் பிப்ரவரி 26 அன்று நிறை வடைந்தன. இஸ்ரேல் பயணத்தின் போது பிரதமர் நரேந்திர மோடி பேசுகையில், இரு நாடுகளும் தங்களது இருதரப்பு உறவை 'அதி முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பு கூட்டாண்மை' என்ற நிலைக்கு உயர்த்த முடிவு செய்துள்ளதாகத் தெரிவித்தார். இதன் மூலம் பாதுகாப்பு மற்றும் வர்த்தக ரீதியான உறவுகள் மேலும் பலப்படும்.

# அப்பா மீது வழக்கு தொடர்ந்த 10 வயது மகன் - கோர்ட்டு அதிரடி தீர்ப்பு

**பீஜிங், பிப்.28:**

சீனாவில் 10 வயது சிறுவன் தனது பரிசுப் பணத்தை பயன்படுத்தியதாகத் தந்தை மீது வழக்கு தொடர்ந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பெற்றோர் விவாகரத்து பெற்ற நிலையில், அந்த சிறுவன் தனது தந்தையுடன் வசித்து வருவதாக கூறப்படுகிறது. சமீபத்தில் நடைபெற்ற சீனர்களின் பாரம்பரியமான சந்திர புத்தாண்டு (Chinese New Year) கொண்டாட்டத்தை முன்னிட்டு, உறவினர்கள் சிறுவனுக்காக 80 ஆயிரம் யுவான் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.11 லட்சம்) பரிசுத் தொகையை அனுப்பியுள்ளனர்.

இந்தத் தொகை தந்தையின் வங்கிக் கணக்கிற்கு மாற்றப்பட்டது. ஆனால், அந்த பணத்தை தனது இரண்டாவது திருமண செலவிற்காக தந்தை பயன்படுத்தியதாக கூறப்படுகிறது. இதையடுத்து, தனது பரிசுப் பணத்தை திருப்பித்தர வேண்டும் என சிறுவன் நீதிமன்றத்தை அணுகியுள்ளார்.



வழக்கை விசாரித்த சீன நீதிமன்றம், அந்த 80 ஆயிரம் யுவான் முழுத் தொகையையும் சிறுவனுக்கு திருப்பித் தர தந்தைக்கு உத்தரவிட்டுள்ளது.

சந்திர புத்தாண்டு நாளில், சீன கலாச்சாரத்தில் ஹோங்க்பாவோ (Hongbao) எனப்படும் சிவப்பு நிற உறையில் பணம் வைத்து பெரியவர்கள், சிறுவர்களுக்கு வாழ்த்து பரிசாக வழங்குவது வழக்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

# எப்ஸ்டீன் கோப்புகளில் 2 இளம்பெண்களுடன் இருக்கும் விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங் புகைப்படம் வெளியாகி சர்ச்சை

**நியூயார்க், பிப்.28:**

மறைந்த புகழ்பெற்ற வான் இயற்பியல் விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங், 2 இளம்பெண்களுடன் இருக்கும் புகைப்படம் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. சிறுமிகள் மற்றும் இளம்பெண்களை கடத்தி பணக்காரர்களுக்கு போகப் பொருளாக விநியோகித்து வந்தவர் அமெரிக்க தொழிலதிபர் ஜெப்ரி எப்ஸ்டீன்.

இதற்காக அவர் தனி தீவையே வாங்கி வைத்திருந்தார். கடந்த 2019-ல் கைதாகி சில மாதங்களிலேயே நியூயார்க் சிறையில் அவர் தற்கொலை செய்து கொண்டார். இதனிடையே, எப்ஸ்டீன் தனது வாடிக்கையாளர்களுடனான உரையாடல்கள், புகைப்படங்கள், வீடியோக்களை ஆவணப் படுத்தி வைத்திருந்தார். இவை எப்ஸ்டீன் கோப்புகள் என்று அழைக்கப்படுகின்றன.

இந்த எப்ஸ்டீன் கோப்புகளில் இடம்பெற்றுள்ள பிரபலங்களின் சர்ச்சைக்குரிய புகைப் படங்கள், வீடியோக்கள் அவ்வப்போது வெளியாகி வருகின்றன. இந்நிலையில், 2006-ம் ஆண்டு கரீபியன் தீவுகளில் நடைபெற்ற அறிவியல் கருத்தரங்கின் போது, வான் இயற்பியல் விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங், 2 பெண்களுடன் இருக்கும் புகைப்படம் ஒன்று வெளியாகியுள்ளது.



இந்த புகைப்படம் எப்ஸ்டீன் கோப்புகளில் இருந்து வெளியானது என்று தெரிவிக்கப்பட்டது. இது சர்ச்சையை எழுப்பியது. இதுகுறித்து விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங் குடும்பத்தார் கூறும்போது, "அந்த பெண்கள் இருவரும் ஹாக்கிங்கின் நீண்ட கால மருத்துவப் பணியாளர்கள் ஆவர். உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்ட அவருக்கு 24 மணி நேரமும் மருத்துவ உதவி தேவைப்பட்டதால் அவர்கள் அவருடன் இருந்தனர். அப்போது எடுக்கப்பட்ட புகைப் படம்தான் அது" என்று தெரிவித்துள்ளனர்.

இந்த எப்ஸ்டீன் கோப்புகளில் ஹாக்கிங்கின் பெயர் பலமுறை குறிப்பிடப்பட்டாலும், அவர் மீதான தவறான குற்றச்சாட்டுகளை எப்ஸ்டீன் மறுத்ததற்கான ஆதாரங்களும் உள்ளன. எப்ஸ்டீன் வழங்கிய நிதியில் நடத்தப்பட்ட அந்த மாநாட்டில், ஹாக்கிங் பங்கேற்றது உண்மைதான் என்றாலும், அவர் எந்த தவறான செயலிலும் ஈடுபடவில்லை என்று ஹாக்கிங் குடும்பத்தார் தரப்பு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

தசை சிதைவு நோய்க்கு ஆளான ஸ்டீபன் ஹாக்கிங், வாழ்நாள் முழுவதும் சக்கர நாற்காலியிலேயே சுற்றி வந்து பல்வேறு சிறந்த ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். 2018-ம் ஆண்டு மார்ச் மாதம் 14-ம் தேதி அவர் உயிரிழந்தார்.

# சிம் கார்டு இல்லாவிட்டால் இயங்காது... வேலையை ஆரம்பித்த வாட்ஸ் அப்

**வாஷிங்டன், பிப்.28:**

இந்தியாவில் வாட்ஸ் அப், பேஸ்புக், இன்ஸ்டாகிராம், டெலிகிராம், சிக்னல், அரட்டை, ஜியோ சேட், ஸ்னாப்சேட், சேர் சாட் உள்ளிட்ட பல சமூக வலைதளங்கள் பயன்பாட்டில் உள்ளன. இதில் அதிகம் பேர் பயன்படுத்தும் செயலி எதுவென்றால் கண்ணை மூடிக்கொண்டு வாட்ஸ் அப் என சொல்லிவிடலாம். வாட்ஸ் அப் என்பது அத்தியாவசிய தகவல் தொடர்பு செயலியாகவும் மாறிவிட்டது. வாட்ஸ் அப் செயலியை மொபைல்போனில் பதிவிறக்கம் செய்யும் போது சிம் கார்டு அவசியம். இதன்பிறகு சிம் கார்டை அகற்றினாலோ அல்லது சிம் கார்டு செயலிழந்துவிட்டாலோ கூட செயலிகள் தொடர்ந்து பயன்பாட்டில் இருக்கும்.




இதனால் சில முறைகேடுகளும் நடக்கின்றன. இதற்கு கடிவாளம் போட மத்திய அரசு அதிரடி நடவடிக்கை ஒன்றை கடந்த சில மாதங்களுக்கு முன்பாக எடுத்தது. இதன்படி, மொபைல் போனில் ஆக்டிவ் சிம் கார்டு இருந்தால் மட்டுமே வாட்ஸ் அப் உள்ளிட்ட செயலிகளை பயன்படுத்த முடியும். சிம் கார்டு இல்லையென்றால் சமூகவலைதள செயலிகள் தானாகவே செயலிழந்து விடும் என்று மத்திய தொலைத்தொடர்புத் துறை புதிய விதிகளை அறிவித்தது. இந்த விதிகளில் மாற்றம் செய்ய மத்திய அரசு மறுத்துவிட்ட நிலையில், சிம் அடிப்படையிலான சரிபார்ப்பை (SIM-BASED VERIFICATION) செய்வதற்கான பணிகளை வாட்ஸ் அப் தொடங்கியுள்ளது. வாபீட்டாஇன்போ வெளியிட்டுள்ள தகவலின்படி, ஆண்ட்ராய்டு 2.26.8.6 பீட்டா வெர்ஷனில் இதற்கான சோதனை ஏற்கனவே தொடங்கிவிட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் விரைவில் ஆக்டிவ் சிம் கார்டு இல்லாவிட்டால் வாட்ஸ் அப் செயல்படாத நிலை ஏற்படும்.

# 2025-இல் 7,667 புலம்பெயர் அகதிகள் உயிரிழப்பு: ஐ.நா.

**நியூயார்க், பிப்.28:**

கடந்த ஆண்டில், உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளுக்குப் புலம்பெயர முயன்றவர்களில் 7,667 பேர் உயிரிழந்ததோடு, பலர் மாயமாகியுள்ளதாக ஐ.நா.வின் சர்வதேச புலம்பெயர் அமைப்பு (ஐஓஎம்) தெரிவித்துள்ளது.

சட்டப்பூர்வ புலம்பெயர்வுக்கான வாய்ப்புகள் குறைந்ததால், மக்கள் ஆள்கடத்தல் கும்பல்களின் பிடியில் சிக்கி இத்தகைய ஆபத்தான பயணங்களை மேற்கொள்கின்றனர். குறிப்பாக, மத்திய தரைக்கடல் உள்பட அபாயகரமான கடல் வழித்தடங்களில் அதிக இறப்புகள் நிகழ்ந்துள்ளன. 2024-இல் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 9,200-ஆக இருந்த நிலையில், 2025-இல் அது 7,667-ஆகக் குறைந்துள்ளது. இருப்பினும், இது முன்னேற்றத்தினால் ஏற்பட்ட குறைவு அல்ல என்றும், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் நிதி ஒதுக்கீடு குறைந்ததால் மீட்புப் பணிகள் மற்றும் தரவு சேகரிப்புப் பணிகள் முடங்கியதே இதற்கு காரணம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் போர்நிறுத்தத்துக்கு சீனா அழைப்பு!

**பெய்ஜிங், பிப்.28:**

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் இடையேயான போரை நிறுத்துமாறு இரு நாடுகளையும் சீனா அழைப்பு விடுத்துள்ளது.

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய இருநாடுகளுக்கும் நட்பு நாடாக விளங்கும் சீனா, இவ்விரு நாடுகளுக்கிடையேயான போரை நிறுத்த வேண்டும் என்று கோரியுள்ளது. இரு நாடுகளுக்கிடையேயான வன்முறை மோதல்களை முடிவுக்குக் கொண்டுவர இருதரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்துவதாகவும் சீனா கூறியுள்ளது.

இதுகுறித்து சீன வெளியுறவு அமைச்சர் மாவோ நிங் கூறுகையில், இரு தரப்பினரும் அமைதியுடன் கட்டுப்பாட்டை கடைப்பிடிக்க வேண்டும். விரைவில் போரை நிறுத்த வேண்டும். வன்முறையைத் தவிர்க்க வேண்டும். பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையிலான மோதலை சீனா தொடர்ந்து மத்தியஸ்தம் செய்து வருகிறது. மேலும், பதற்றங்களைத் தணிப்பதில் தொடர்ந்து ஆக்கப்பூர்வமான பங்களிக்கவும் சீனா தயாராக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# ஆப்கனுடன் போர்ப் பதற்றம்! 6 ஆண்டுகளுக்குப் பிறகு ரஷியா செல்கிறார் பாக். பிரதமர்!

**இஸ்லாமாபாத், பிப்.28:**

பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷரீஃப் ரஷியாவுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் இடையில் மோதல்கள் வெடித்துள்ள நிலையில், பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷரீஃப் அடுத்த வாரம் ரஷியாவுக்குச் செல்வதாக, பாகிஸ்தான் செனட்டின் பாதுகாப்புக் குழு தலைவர் முஷாஹித் ஹுசைன் சையத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பயணத்தில், மாஸ்கோ செல்லும் பிரதமர் ஷரீஃப் ரஷிய அதிபர் விளாதிமீர் புதினை நேரில் சந்தித்து உரையாடுவார் எனக் கூறப்படுகிறது. இருப்பினும், இதுகுறித்து ரஷிய அரசின் தரப்பிலிருந்து இதுவரை எந்தவொரு தகவலும் வெளியாகவில்லை.



ஏற்கெனவே, பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் எல்லையில் மோதல்கள் வெடித்துள்ளதால், இரு நாடுகளும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டுமென ரஷிய அரசு வெள்ளிக்கிழமை (பிப். 27) வலியுறுத்தியுள்ளது.

இதனால், இந்த விவகாரம் குறித்த பேச்சுவார்த்தைகளுக்காக பிரதமர் ஷரீஃப் மாஸ்கோ செல்வதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக, 6 ஆண்டுகளுக்கு முன்பு கடந்த 2022 பிப். 24 அன்று பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் அரசு முறைப் பயணமாக ரஷியா சென்றிருந்தார். அன்றுதான் உக்ரைன் மீது ரஷியா போர் தொடுத்தது என்பது குறிப்பிடத்தக்கது.



# தி.மு.க.வில் இணைந்தார் ஓ.பன்னீர்செல்வம்





## தமிழக சட்டப்பேரவை தேர்தல் வெளிப்படையாக, நேர்மையாக நடத்தப்படும்: தலைமை தேர்தல் ஆணையர்

## விஜய் - சங்கீதா விவாகரத்து வழக்கு: ஏப்ரலில் விசாரணை!





## 1,200 ஆண்டுகள் பழமை வாய்ந்த பல்லவர் கால கொற்றவை சிற்பங்கள் கண்டெடுப்பு

## தாம்பரம் - கடற்கரை இருமார்க்கமாகவும் சிறப்பு பஸ் சேவை: பயணிகள் வரவேற்பு


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 28.02.2026 சனிக்கிழமை இலவச இ–பேப்பர்